# உயர்கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2018–19

மானியக் கோரிக்கை எண். 20


## கே.பி.அன்பழகன்
உயர்கல்வித் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2018


## பொருளடக்கம்

| வ. எண். | தலைப்புகள் | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | முன்னுரை | |
| 2. | தொழில்நுட்பக் கல்வி | |
| 3. | கல்லூரிக் கல்வி | |
| 4. | பல்கலைக்கழகங்கள் | |
| 5. | தமிழ்நாடு ஆவணக் காப்பகம் | |
| 6. | தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் | |
| 7. | தேசிய உயர்கல்வித் திட்டத்திற்கான (RUSA) மாநில இயக்குநரகம் | |
| 8. | அறிவியல் நகரம் | |
| 9. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் | |
| 10. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் | |
| 11. | தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம் | |
| 12. | தமிழ்நாடு மாநில உருது கழகம் | |

# கொள்கை விளக்கக் குறிப்பு

# மானியக் கோரிக்கை எண்.20 – உயர்கல்வி

# 2018 – 19

## 1. முன்னுரை

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து.**

**(திருக்குறள் 398)**

**1.1.** இந்தியாவில், உயர்கல்வியில் சிறந்து விளங்கும் முன்னோடி மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். சிறந்த தரமான, அனைவருக்குமான மற்றும் சமமான கல்வி என்ற மூன்று அம்சங்களுடன் தமிழ்நாடு, உயர்கல்வியில் சிறந்து விளங்குகிறது.

### 1.2. உயர்கல்வியில் சிறப்பு நிலை

**1.2.1.** தமிழ்நாட்டில் உள்ள உயர்கல்வி நிறுவனங்கள், தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு (National Institute of Ranking Framework - NIRF) தொடங்கப்பட்ட 2016 ஆம் ஆண்டிலிருந்தே, தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக முன்னணி இடத்தை பெற்றுள்ளன. மத்திய மனிதவள மேம்பாட்டு துறை

அமைச்சரால் **03.04.2018** அன்று வெளியிடப்பட்ட தேசிய நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பு **2018–**இன்படி, **2018** ஆம் ஆண்டிற்கான முதல் **100** இடங்களுக்குள், தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்கள், அனைத்து தரவரிசையில் **22** உயர்கல்வி நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களுக்கான தரவரிசையில் **20** பல்கலைக்கழகங்களும், பொறியியல் தரவரிசையில் **19** பொறியியல் நிறுவனங்களும், கல்லூரிகளுக்கான தரவரிசையில் **38** கல்லூரிகளும் சிறப்பான இடங்களை பெற்றுள்ளன.

**1.2.2.** உயர்கல்வித் துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள **13** மாநில பல்கலைக்கழகங்களில் **7** பல்கலைக்கழகங்கள் தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு **2018–**இன்படி முதல் **100** இடங்களில் **7** இடங்களை பெற்றுள்ளன. அவை, அண்ணா பல்கலைக்கழகம் **(4**ஆவது இடம்**)**, பாரதியார் பல்கலைக்கழகம் **(13**ஆவது இடம்**)**, சென்னை பல்கலைக்கழகம் **(18**ஆவது இடம்**)**, அழகப்பா பல்கலைக்கழகம் **(27**ஆவது இடம்**)**, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் **(54**ஆவது இடம்**)**, பாரதிதாசன் பல்கலைக்கழகம் **(67**ஆவது இடம்**)** மற்றும் பெரியார் பல்கலைக்கழகம் **(90**ஆவது இடம்**)**. இவற்றுடன்,

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தரவரிசைப் பட்டியலில் **100–150** ஆம் இடத்திற்குள்ளும் மனோன்மனியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் **151–200** ஆவது இடத்திற்குள் இடம் பெற்றுள்ளன.

**1.2.3.** மத்திய அரசின், உயர்நிலைக் கல்வி நிறுவனம் (Institute of Eminence) என்ற அங்கீகாரம் பெறுவதற்காக தேர்வு செய்யும் முறையில், உயர்கல்வித் துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள **13** மாநில பல்கலைக்கழகங்களில் **5** பல்கலைக்கழகங்கள் (அண்ணா பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் பெரியார் பல்கலைக்கழகம்) இரண்டாம் சுற்றிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதற்காக மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையினால் அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழுவிற்கு (Empowered Committee) விவரங்களை சமர்ப்பிக்க இப்பல்கலைக்கழகங்கள் அழைக்கப்பட்டுள்ளன.

## 1.3. உயர்கல்விக்கான வாய்ப்பு

**1.3.1.** தமிழக மக்களும், தமிழக அரசும் உயர்கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகின்றனர்.

**1.3.2** மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் (MHRD) சமீபத்திய அகில இந்திய உயர்கல்வி கணக்கெடுப்பு (AISHE) அறிக்கையின்படி, நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களில் தேசிய மொத்த மாணவர் சேர்க்கை விகிதமான (Gross Enrollment Ratio- GER) **25.2** சதவிகிதத்தைவிட தமிழகம் அதிகமாக **46.9** சதவிகிதம் பெற்று முன்னணி இடத்தைப் பெற்றுள்ளது. மாநிலத்தில் தொலைதூரம் மற்றும் பின்தங்கிய இடங்களிலும் உயர்கல்வி நிறுவனங்கள் இருப்பதாலும், சமூகத்தில் அனைத்து பிரிவினரும் உயர்கல்வி கற்கும் வகையில் பல்வேறு புலங்களிலும் அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்கள் இருப்பதாலும், மாணவர் சேர்க்கை விகிதத்தில் தமிழகம் முன்னணி இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் மகளிர் மாணவர் சேர்க்கை விகிதம், தேசிய விகிதமான **24.5** சதவிகிதத்தை விட **45.6** சதவிகிதத்தைப் பெற்று இரண்டு மடங்கு அதிகமாக உள்ளது. அதுபோலவே, தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் பிரிவினருக்கான மாணவர்

சேர்க்கை விகிதம் நாட்டில் உள்ள மாணவர் சேர்க்கை விகிதம் **21.1** சதவிகிதத்தை விட அதிகமாக **38.3** சதவிகிதம் பெற்றுள்ளது. பழங்குடியினருக்கான தேசிய மாணவர் சேர்க்கை விகிதம் **15.4** சதவிகிதம் ஆகும். தமிழ்நாட்டில் இப்பிரிவில் மாணவர் சேர்க்கை விகிதம் **36.0** சதவிதம் பெற்று தொடர்ந்து தமிழ்நாடு தரவரிசையில் சிறப்புமிக்க இடத்தை பெற்றுள்ளது.

## 1.4. உயர்கல்வியில் சமநிலை

மேலே குறிப்பிட்டபடி அனைத்து பிரிவுகளிலும் தேசிய மாணவர் சேர்க்கை விகிதத்தை விட தமிழ்நாட்டில் மாணவர் சேர்க்கை விகிதம் அதிகமாக உள்ளதால், பொருளாதாரம் மற்றும் சமூக நிலைக்கு அப்பாற்பட்டு, அனைத்துப் பிரிவு மக்களும் தமிழ்நாட்டில் உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. முதல் தலைமுறை பட்டதாரி கல்வி கட்டணச் சலுகை, போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை, விலையில்லா மடிக்கணினி, பின்தங்கிய மாணாக்கர்களுக்கான கல்வி உதவித் தொகை, இலவச பேருந்து அட்டை மற்றும் அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் முதுகலை படிக்கும் மாணாக்கர்கள் வரை இலவச கல்வி போன்ற முன்னோடி திட்டங்களால் இது

சாத்தியமாகிறது. இடஒதுக்கீட்டின் வாயிலாக, சமூகத்தில் பின்தங்கியுள்ள மாணாக்கர்களும் கல்வி கற்கும் வண்ணம் அதிக எண்ணிக்கையிலான அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் இருப்பது, உயர்கல்வி, குறிப்பிட்ட சில பிரிவினருக்கானது மட்டுமல்ல, அனைவருக்குமானது என்பதை உறுதி செய்கிறது.

## நிதி ஒதுக்கீடு 2018–19

மானியக் கோரிக்கை எண்.20, உயர்கல்வித் துறை என்ற தலைப்பின் கீழ் மொத்த செலவினத் தொகை ரூ.4620.20 கோடி ஆகும்.

| வரிசை எண் | துறை தலைமையின் பெயர் | வரவு செலவு ஒதுக்கீடு ரூபாய் (கோடியில்) |
|---|---|---|
| 1. | உயர்கல்வித்துறை, தலைமைச் செயலகம் | 5.89 |
| 2. | கல்லூரிக் கல்வி இயக்ககம் | 2490.34 |
| 3. | தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் | 1512.76 |
| 4. | பல்கலைக்கழகங்கள் | 496.15 |
| 5. | ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையரகம் | 12.47 |
| 6. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பவியல் மாநில மன்றம் | 2.37 |
| 7. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பவியல் மையம் | 4.61 |
| 8. | அறிவியல் நகரம், சென்னை | 1.30 |
| 9. | தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் | 94.10 |
| 10. | தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம் | 0.21 |
| | **மொத்தம்** | **4620.20** |

# 2. தொழில்நுட்பக் கல்வி

**2.1.** தமிழக மக்களின் தொழில்நுட்பத்தின் மீதான ஆர்வத்தினாலும், தொழில்நுட்பக் கல்வி அனைத்து நிலைகளிலும் (பட்டம், பட்டயம் மற்றும் தொழிற்பயிற்சி) பரவலாக அனைவருக்கும் கிடைப்பதாலும், தமிழகம் உற்பத்தி துறையில் நம் நாட்டிலுள்ள பிற மாநிலங்களில் முதன்மை பெற்று விளங்குகிறது. உறுதியான பரந்து விரிந்த இந்த தொழில்நுட்பக் கல்வி உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு முக்கியமாக விளங்கும் திறன்மிக்க மனிதவளத்தை உறுதி செய்கிறது.

இம்மாநிலத்தின் தொழிற்கல்வியை மேம்படுத்த முக்கிய பங்கு வகிக்கும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் 1957 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ஆம் நாள் உருவாக்கப்பட்டது. இவ்வியக்ககம், பட்டம் மற்றும் பட்டய படிப்புகளை மேம்படுத்தி கண்காணித்து ஒருங்கிணைப்பு செய்வதோடு புதிய பாடப்பிரிவுகளை உருவாக்குவதற்கும், பாடத்திட்டங்களை வகுக்கவும், ஆராய்ச்சி மேம்பாட்டிற்கான பணிகள் போன்றவற்றை செய்வதிலும் முக்கிய பொறுப்பு வகிக்கிறது. மேலும் இவ்வியக்ககம் தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல், வணிகவியல் மற்றும் அலுவலகத்தில் கணினி பயன்பாடு

குறித்த சான்றிதழ் படிப்பு ஆகியவற்றிற்கான தேர்வுப் பணிகளையும் மேற்கொண்டுவருகிறது.

மாறிவரும் கணினிமயமாக்கப்பட்ட நவீன உலக சூழல்களுக்கேற்ப தேவையான மனிதவளத் திறனை உருவாக்கவும், தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதற்காகவும் புதிய வழிமுறைகளை வடிவமைப்பதில் தமிழக அரசு முன்னோடியாகவுள்ளது. இம்மாநிலம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகப்படியான பட்டம் மற்றும் பட்டய நிலை தொழில்நுட்ப கல்லூரிகளை பெற்றுள்ளது:

| **பொறியியற் கல்லூரிகள்** | | | | |
|---|---|---|---|---|
| அரசினர் பொறியியற் கல்லூரிகள் | அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் | அண்ணா பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகள் | சுயநிதி பொறியியற் கல்லூரிகள் | மொத்தம் |
| **10** | **3** | **17** | **550** | **580** |

**பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள்**

| | |
|---|---|
| அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் | 46 |
| அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் | 34 |
| இணைவு பெற்ற பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் | 4 |
| சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் | 418 |
| சுயநிதி உணவக மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்ப பயிலகங்கள் | 15 |
| **மொத்தம்** | **517** |

## 2.2. சாதனைகள் மற்றும் முயற்சிகள்

### 2.2.1. 2011–12 முதல் 2018–19 வரை துவங்கப்பட்ட புதிய தொழில்நுட்பக் கல்லூரிகள்

பொருளாதாரத்தில் பின்தங்கிய சமூகத்தினருக்கு தொழில்நுட்பக் கல்வியை அளிப்பதற்கு ஏதுவாக கீழ்க்கண்ட 4 புதிய அரசு பொறியியற் கல்லூரிகள் மற்றும் 19 புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் தமிழக அரசால் துவங்கப்பட்டுள்ளன:

## பொறியியல் கல்லூரிகள்

| கல்வியாண்டு | புதியதாக துவங்கப்பட்ட கல்லூரிகளின் எண்ணிக்கை | இடம் மற்றும் மாவட்டம் |
|---|---|---|
| 2012–13 | 1 | போடிநாயக்கனூர் – தேனி |
| 2013–14 | 3 | செட்டிக்கரை – தர்மபுரி<br>செங்கிப்பட்டி – தஞ்சாவூர்<br>ஸ்ரீரங்கம் – திருச்சிராப்பள்ளி |

## பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகள்

| கல்வியாண்டு | புதியதாக துவங்கப்பட்ட கல்லூரிகளின் எண்ணிக்கை | இடம் மற்றும் மாவட்டம் |
|---|---|---|
| 2013–14 | 11 | ஸ்ரீரங்கம் – திருச்சிராப்பள்ளி<br>கந்தர்வக்கோட்டை – புதுக்கோட்டை<br>சங்கராபுரம் – விழுப்புரம்<br>பெருந்துறை – ஈரோடு<br>அரியலூர் – அரியலூர்<br>ஊத்தங்கரை – கிருஷ்ணகிரி<br>ஜோலார்பேட்டை – வேலூர்<br>உசிலம்பட்டி – மதுரை<br>செக்கானூரணி – மதுரை<br>ஆண்டிப்பட்டி – தேனி<br>செய்யாறு – திருவண்ணாமலை |

| | | |
|---|---|---|
| 2016–17 | 5 | டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் – சென்னை<br>கடத்தூர் – தர்மபுரி<br>வலங்கைமான் – திருவாரூர்<br>ரகுநாதபுரம் – தஞ்சாவூர்<br>கெலமங்கலம் – கிருஷ்ணகிரி |
| 2018–19 | 3 | கூடுவெளி – கடலூர்<br>செவ்வாப்பேட்டை – திருவள்ளூர்<br>வனவாசி – சேலம் |

**2011–12** ஆம் ஆண்டு முதல் **2016–17** ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் தொடங்கப்பட்ட **20** கல்லூரிகளுக்கு **(4** பொறியியல் கல்லூரிகள் மற்றும் **16** பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள்**)** **2,495** ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டதுடன், கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.**655.38** கோடியும் மற்றும் உபகரணங்கள், கணினிகள், அறைகலன்கள், நூலகத்திற்கான புத்தகங்கள் மற்றும் மின்னிதழ்கள் (e-journals) கொள்முதல் செய்யும் பொருட்டு தொடரா செலவினங்களுக்காக ரூ.**93.04** கோடியும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது இக்கல்லூரிகள் சொந்த கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

**2.2.2. கடலூர், திருவள்ளூர் மற்றும் சேலம் ஆகிய மூன்று மாவட்டங்களில், 2018–19 ஆம் கல்வியாண்டில் புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்குதல் குறித்த விபரங்கள்**

கூடுவெளி (கடலூர்), செவ்வாப்பேட்டை (திருவள்ளூர்) மற்றும் வனவாசி (சேலம்) ஆகிய 3 இடங்களில், 2018–19 ஆம் கல்வியாண்டில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்குவதற்கு அரசால் நிர்வாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி 3 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.69.00 கோடியும் மற்றும் முதலாம் ஆண்டுக்குத் தேவையான உபகரணங்கள், கணினிகள், அறைகலன்கள், நூலகத்திற்கான புத்தகங்கள் மற்றும் மின்னிதழ்கள் (e-journals) கொள்முதல் செய்யும் பொருட்டு தொடரா செலவினமாக ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதலாம் ஆண்டுக்குத் தேவையான 48 ஆசிரியர்களும், 87 ஆசிரியரல்லாத பணியாளர்களும் என மொத்தம் 135 பணியிடங்கள் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேற்படி மூன்று கல்லூரிகளும் 2018–19 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படத் துவங்கும்.

**2.2.3. தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு மற்றும் நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலை பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளை 2018–19 ஆம் கல்வியாண்டிலிருந்து அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டது குறித்த விபரங்கள்**

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு மற்றும் நாமக்கல் மாவட்டம் மோகனூர் ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வந்த பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை போதிய நிதி ஆதாரமின்மையின் காரணமாக தொடர்ந்து நடத்த இயலவில்லை. ஆகவே, சர்க்கரைத் துறையின் பரிந்துரையின் பேரில், அக்கல்லூரிகளின் மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி மேற்படி இரண்டு சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டன.

இந்த இரண்டு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டதன் காரணமாக, அப்பயிலகங்களில் சேர்ந்து பயிலும் மாணாக்கர்கள் சுயநிதி கல்லூரிகளுக்குரிய ஆண்டு கல்வி கட்டணம் ரூ.19,500 செலுத்துவதற்குப்பதிலாக, ஏனைய

அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் போன்று ரூ.2,000 மட்டுமே ஆண்டு ஒன்றுக்கு கல்விகட்டணமாக செலுத்தும் சலுகையினை பெறத்தகுதியுடையவர் ஆவார்கள். அத்துடன், விலையில்லா மடிக்கணினி, கட்டணமில்லா பேருந்து பயணச் சலுகை மற்றும் முதலாம் ஆண்டிற்கான இலவச பாடபுத்தகங்கள் பெறுதல் போன்ற கூடுதல் சலுகைகளையும் பெறுவர்.

மேற்கண்ட பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு தேவையான 88 ஆசிரியர்களும் 87 ஆசிரியரல்லா பணியாளர்களும் என மொத்தம் 175 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியிடங்களை உருவாக்கி, தொடர் செலவினமாக ரூ.13.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தொடரா செலவினமாக கணினிகள், இயந்திரங்கள், புரொஜக்டர், பிரிண்டர் மற்றும் புத்தகங்கள் கொள்முதல் செய்ய ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் இரண்டு கூட்டுறவு சர்க்கரை ஆலை பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் வருகின்ற 2018–19 ஆம் கல்வி ஆண்டு முதல் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளாக இயங்கும்.

### 2.2.4 இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (IIIT), ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்

2013–14 ஆம் கல்வியாண்டில், மத்திய, மாநில மற்றும் தொழில் நிறுவனங்களின் பங்களிப்புடன் லாப நோக்கமற்ற பொது மற்றும் தனியார் துறைகளின் கூட்டாண்மை (N-PPP) சார்பாக திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் தன்னாட்சி பெற்ற இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (IIIT) துவங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தை நிறுவுவதற்கான மொத்த செலவினமான ரூ.128.00 கோடியில், மத்திய அரசின் 50% பங்களிப்பு ரூ.64.00 கோடியும், தமிழக அரசின் 35% பங்களிப்பு ரூ.44.80 கோடியும், மற்றும் தொழில் நிறுவனங்களின் பங்காளர்களின் 15% பங்களிப்பு ரூ.19.20 கோடியும் ஆகும்.

இந்தக் கல்வி நிறுவனத்தில் கீழ்க்கண்ட 6 தொழில் நிறுவனங்கள் பங்குதாரர்களாக உள்ளனர்:

1) Navitas LLP (formerly TAKE Solutions Ltd),
2) M/s CTS (India) Private Ltd.,
3) M/s Pratiksha Infosys Ltd.,
4) M/s Tata Consultancy Services Ltd.,
5) M/s Ramco Systems, Chennai and
6) M/s ELCOT.

## 2.3. அரசு பொறியியல் கல்லூரிகளில் தொடங்கப்பட்ட இளநிலை மற்றும் முதுநிலை பாடப்பிரிவுகள்

### 2.3.1. அரசு பொறியியல் கல்லூரி, பர்கூரில் தொடங்கப்பட்டுள்ள 3 புதிய முதுநிலை பாடப்பிரிவுகள்

2017–18 ஆம் கல்வியாண்டில் கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில், பயன்பாட்டு மின்னணுவியல் (Applied Electronics), கணினி அறிவியல் மற்றும் பொறியியல் (Computer Science and Engineering) மற்றும் திறன் மின்னணுவியல் மற்றும் இயக்கிகள் (Power Electronics and Drives) ஆகிய பாடப்பிரிவுகளில் 18 மாணாக்கர்கள் சேர்க்கை வீதம் 3 முதுநிலை பாடப்பிரிவுகள் துவங்கப்பட்டுள்ளன. இப்பாடப்பிரிவுகளுக்காக 9 ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, அதற்காக தொடரும் செலவினமாக ரூ.134.79 இலட்சம் மற்றும் தொடரா செலவினமாக உபகரணங்கள், கணினிகள், அறைகலன்கள், நூலக புத்தகங்கள் போன்றவைகள் கொள்முதல் செய்வதற்கு ரூ.225.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 2.3.2. அரசு பொறியியல் கல்லூரி, திருநெல்வேலியில் தொடங்கப்பட்டுள்ள 2 புதிய முதுநிலை பாடப்பிரிவுகள்

2017–18 ஆம் கல்வியாண்டு முதல், திருநெல்வேலி, அரசு பொறியியல் கல்லூரியில், கட்டமைப்பு பொறியியல் (Structural Engineering) மற்றும் தொடர்பியல் அமைப்பு முறைகள் (Communication Systems Engineering) ஆகிய பாடப்பிரிவுகளில் 18 மாணாக்கர்கள் சேர்க்கை வீதம் 2 முதுநிலை பாடப்பிரிவுகள் துவங்கப்பட்டுள்ளன. இப்பாடப்பிரிவுகளுக்காக 6 ஆசிரியர் பதவிக்கான பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அதற்காக தொடரும் செலவினமாக ரூ.40.77 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 2.3.3. தந்தை பெரியார் அரசு பொறியியல் கல்லூரி, வேலூரில் தொடங்கப்படவுள்ள 2 புதிய இளநிலை பாடப்பிரிவுகள்

2018–19 ஆம் கல்வியாண்டில், வேலூர் தந்தை பெரியார் அரசு பொறியியல் கல்லூரியில், மின்னியல் மற்றும் மின்னணுவியல் (Electrical and Electronics Engineering) மற்றும் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் (Computer Science and Engineering)

ஆகிய பாடப்பிரிவுகளில் **60** மாணாக்கர்கள் சேர்க்கை வீதம் **2** புதிய இளநிலை பாடப்பிரிவுகள் துவங்கப்படுகின்றன. இப்பாடப்பிரிவுகளுக்காக, **43** ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பதவிக்கான பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அதற்காக தொடரும் செலவினமாக ரூ.**391.82** இலட்சம் மற்றும் தொடரா செலவினமாக உபகரணங்கள், கணினிகள், அறைகலன்கள், நூலக புத்தகங்கள் போன்றவைகள் கொள்முதல் செய்வதற்கு ரூ.**215.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இரு பாடப்பிரிவுகளும் **2018–19** ஆம் ஆண்டு முதல் தொடங்கப்படவுள்ளன.

## 2.4. அரசு பொறியியல் கல்லூரி மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் புதிய ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டது குறித்த விபரங்கள்

மாணாக்கர்கள் தங்கள் ஆற்றலை வளர்த்துக் கொள்வதிலும், வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கேற்ப தங்களது தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்துவதிலும் ஆசிரியர்கள் மிக முக்கிய பங்கு வகித்து வருகின்றனர். உயர் தகுதியுள்ள ஆசிரியர்களை பணியமர்த்தும் சீரிய நோக்கத்துடன், தமிழக அரசு, ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் ஆசிரியர்களை பணியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அரசின் இத்தகைய முயற்சியால், அரசு பொறியியல் கல்லூரிகளில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம், 340 உதவி பேராசிரியர்களும், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், 137 விரிவுரையாளர்களும் கடந்த 7 ஆண்டுகளில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம், 1,058 விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அரசு பொறியியற் கல்லூரிகளில் காலியாக இருந்த 9 முதல்வர் பணியிடங்களும், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் காலியாக இருந்த 30 முதல்வர் பணியிடங்களும் 2017–18 ஆம் கல்வியாண்டில் முழுவதுமாக நிரப்பப்பட்டுள்ளன.

### 2.5. அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் மிகுதியாக இருந்த உபரி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களை மற்ற அரசு கல்லூரிகளில் பணிநிரவல் செய்யப்பட்டது குறித்த விபரங்கள்.

அரசின் ஆணைப்படி, அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் மிகையாக பணிபுரிந்து வந்த 353 உபரி ஆசிரியர்களில், 86 ஆசிரியர்களை அரசு பொறியியற் கல்லூரிகளில் உதவி பேராசிரியர்களாகவும்,

**227** ஆசிரியர்களை அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் விரிவுரையாளர்களாகவும் மற்றும் **40** உடற்கல்வி துறை ஆசிரியர்களை அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் உடற்கல்வி இயக்குநர்களாகவும் **3** ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் பணிநிரவல் செய்யப்பட்டுள்ளனர். மேலும், மேற்படி பல்கலைக்கழகத்தில் மிகையாக பணிபுரிந்து வந்த **376** உபரி ஆசிரியரல்லா பணியாளர்களை, அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொதுப்பணித் துறையில் உள்ள தொழில்நுட்ப வட்டங்களுக்கும், தொழில்நுட்ப கோட்டங்களுக்கும் **3** ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் பணிநிரவல் செய்யப்பட்டுள்ளனர்.

## 2.6. விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் கணினி அறிவுத் திறன் மற்றும் எண்ணியல் திறனை மேம்படுத்தவும், மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் முன்னோடித் திட்டம் தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. பத்தாம் வகுப்பு தேர்ச்சிக்கு பின்பு அரசு மற்றும் அரசு உதவி

பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி, அவர்களின் முதலாம் ஆண்டு படிப்பின் போது விலையில்லா மடிக்கணினி அவர்களுக்கும் வழங்கப்படுகிறது. பயனடைந்த மாணாக்கர்களின் விபரம் பின்வருமாறு:

| கல்வியாண்டு | பயனடைந்த மாணாக்கர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2011 – 12 முதல் 2016 – 17 வரை | 1,84,486 |
| 2017 – 18 | 12,479 (மடிக்கணினி பெற தகுதியுள்ள மாணாக்கர்கள்) |
| **மொத்தம்** | **1,96,965** |

## 2.7. இலவச பாடப் புத்தகங்கள் வழங்குதல்

பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் மற்றும் அவர்களின் படிப்பு செலவிற்கான நிதிச்சுமையினை குறைக்கும் நோக்கத்துடனும், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயின்று வருகின்ற அனைத்து முதலாமாண்டு மாணாக்கர்களுக்கும் தேவையான பாடநூல்கள் விலை

ஏதுமின்றி இலவசமாக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், ஆங்கிலம், பொறியியல் இயற்பியல், பொறியியல் வேதியியல் மற்றும் பொறியியல் கணிதம் ஆகிய பாடங்களுக்கு தேவையான பாடநூல்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. பயனாளிகளின் விவரங்கள் பின்வருமாறு:

| கல்வியாண்டு | பயனடைந்த மாணாக்கர்களின் எண்ணிக்கை | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2012–13 முதல் 2016–17 வரை | 52,649 | 68.08 |
| 2017–18 | 12,853 | 30.16 |
| **மொத்தம்** | **65,502** | **98.24** |

### 2.8. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டண விலக்கு (Tuition Fee Waiver) மற்றும் கட்டணமில்லா பேருந்து பயணச் சலுகை வழங்குதல்

தமிழகத்தில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தல் மற்றும் கட்டணமில்லா பேருந்து பயணச் சலுகை வழங்குதல் போன்ற அரசின் திட்டங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு

வருகின்றன. இத்திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகளின் விபரம் பின்வருமாறு :

| கல்வியாண்டு | பயனடைந்த மாணாக்கர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2011–12 முதல் 2016–17 வரை | 2,41,635 |
| 2017–18 | 46,707 |
| **மொத்தம்** | **2,88,342** |

## 2.9. முதல் தலைமுறை பட்டதாரி கல்விக் கட்டணச்சலுகை

சமூகத்தின் அனைத்து பிரிவினைச் சார்ந்த மாணாக்கர்களும் தொழிற்கல்வி பயில்வதற்காக அரசு பல முயற்சிகளை எடுத்து வருகிறது. மாநிலத்திலுள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளிலும், ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் நேரடி சேர்க்கை பெறும் முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணச்சலுகை (Tuition Fee Concession) வழங்குவதும் இம்முயற்சிகளில் ஒன்றாகும். இந்த திட்டத்தின் மூலம் பயனடைந்தோர்களின் விவரங்கள் பின்வருமாறு:

| கல்வியாண்டு | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) | பயனடைந்த மாணாக்கர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2011–12 முதல் 2016–17 வரை | 2,839.88 | 14,88,773 |

| | | |
|---|---|---|
| 2017–18 | 434.56 | 2,17,396 |
| **மொத்தம்** | **3,274.44** | **17,06,169** |

மேற்படி திட்டத்தின் கீழ், ரூ.20,000 ஆண்டு ஒன்றுக்கு சுயநிதி பாடப்பிரிவுகளில் பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கான கல்விக் கட்டணச்சலுகையாக வழங்கப்பட்டு வந்தது. மேலும், 2017–18 ஆம் கல்வியாண்டு முதல் மேற்படி தொகை கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. தரச்சான்று பெற்ற சுயநிதி பாடப்பிரிவுகளில் (Accredited Self Supporting Courses) பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு ரூ.27,500 ஆண்டு ஒன்றுக்கு கல்விக் கட்டணச்சலுகையாக வழங்கப்படுகிறது. தரச்சான்று பெறாத சுயநிதி பாடப்பிரிவுகளில் (Non-accredited Self Supporting Courses) பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு ரூ.25,000 ஆண்டு ஒன்றுக்கு கல்விக் கட்டணச்சலுகையாக வழங்கப்படுகிறது.

## 2.10. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம்

போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் 2011–12 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

சமூகரீதியாக பின்தங்கிய மாணாக்கர்களுக்கு உயர்கல்வியினை பல நிலைகளிலும் இலவசமாக வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து, ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கர்களுக்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், சுயநிதி கல்வி நிறுவனங்களில் (சிறுபான்மை பயிலகங்கள் உட்பட) அரசு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெற்ற மேற்குறிப்பிட்ட மாணாக்கர்களுக்கு, (கல்லூரி கட்டணங்கள் என்பது கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டாய மற்றும் திருப்பியளிக்க இயலாத கட்டணங்கள் ஆகும்) கல்லூரிக் கட்டணங்கள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகின்றன. 2013–14 ஆம் கல்வியாண்டு முதல் மாணாக்கர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுவதை, தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் ஆதி திராவிடர் நலத்துறையுடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது. இதற்கான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வருடம் | சுயநிதி பொறியியல் கல்லூரிகள் |
|---|---|

| | பயன்பெற்ற மாணாக்கர்கள் எண்ணிக்கை | மொத்தம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| **2013–14 முதல் 2016–17 வரை** | 4,13,914 | 2,575.23 |

| வருடம் | சுயநிதி பலவகை தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் உணவக மேலாண்மை கல்லூரிகள் | |
|---|---|---|
| | பயன் பெற்ற மாணாக்கர்கள் எண்ணிக்கை | மொத்தம் (ரூபாய் கோடியில்) |
| **2013–14 முதல் 2016–17 வரை** | 2,24,268 | 475.75 |

**2.11. முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் பி.இ/பி.டெக். பொறியியல் மாணாக்கர்களுக்கான நிதியுதவியினை ரூ.25,000 லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தி வழங்குதல்**

பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணாக்கர்கள் இளநிலை பொறியியல் பட்டப்படிப்புகளை தொடர்ந்து பயில்வதற்கு ஏதுவாக, அரசால் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. **2011–12** ஆம் ஆண்டு முதல் **2016–17** ஆம் ஆண்டு வரை, மாணவர் ஒருவருக்கு தலா ரூ.**25,000** வீதம் **259** மாணாக்கர்களுக்கு ரூ.**64.75** இலட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. மேற்படி

உதவித்தொகை **2017–18** ஆம் ஆண்டு முதல் ஒரு மாணவருக்கு ரூ.**25,000** லிருந்து ரூ.**50,000** ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. முதல் தலைமுறை பட்டதாரி கல்வி உதவி தொகை பெறும் மாணாக்கர்களும் இந்த நிதியை பெற விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவர்.

**2.12. அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் முதுநிலை பட்ட படிப்பு மாணாக்கர்களுக்கான மாதாந்திர உதவித் தொகை வழங்கும் திட்டம்**

அறிவுத் திறன் கொண்ட மாணாக்கர்களை பொறியியல் கல்லூரிகளில் ஆசிரியர் பணியிலும் மற்றும் ஆராய்ச்சிப் பணியிலும் ஈடுபட ஊக்குவிக்கும் பொருட்டும், ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் புதிய கண்டுபிடிப்புகளின் தேவைக்களுக்காவும், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் **15.6.2017** அன்று தமிழக சட்ட சபையில் ''அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் முதுநிலை பட்டதாரி மாணவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படும்'' என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள். அதனைத் தொடர்ந்து **2017–18** ஆம் கல்வியாண்டிலிருந்து தமிழகத்திலுள்ள பர்கூர், கோயம்புத்தூர், காரைக்குடி, சேலம், திருநெல்வேலி மற்றும் வேலூரில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு

பயிலும் முதுநிலை பொறியியல் பட்ட வகுப்பு மாணாக்கர்களுக்கு கல்வி உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.6,000 வீதம் 600 மாணாக்கர்களுக்கு வழங்கும் பொருட்டு ஆண்டு ஒன்றுக்கு ரூ.4.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.13. பொறியியல் கல்லூரிகளில் பயிலும் 100 மாணாக்கர்களுக்கு 15 நாட்கள் அயல்நாட்டில் தொழில்நுட்ப பயிற்சி அளித்தல்

அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் தொழில்நுட்பத்திறனை மேம்படுத்தவும், அவர்கள் துறை சார்ந்த சமீபத்திய உலக அளவிலான வளர்ச்சியினை அறிந்து கொள்ளவும் 23.8.2016 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–இன் கீழ் அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் “அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் இளநிலை பொறியியல் மாணவர்களுக்கு அயல்நாட்டில் தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்படும்” என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

இத்திட்டத்தின் கீழ், 2017–18 ஆம் கல்வியாண்டில் 15 நாட்களுக்கு ஸ்பெயின், தைவான், ஜப்பான் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள்

மற்றும் தொழில்நுட்ப பயிலகங்களில், தொழில்நுட்ப பயிற்சி பெறும் பொருட்டு அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த உயர் மதிப்பெண்கள் பெற்ற **92** மாணாக்கர்கள் மற்றும் **8** ஆசிரியர்கள் வெளிநாடு சென்று வந்துள்ளனர். **04.07.2017** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அம்மாணாக்கர்களுக்கு வாழ்த்து தெரிவித்து ஊக்குவித்தார்கள். இந்த ஆண்டும் உயர் மதிப்பெண்கள் பெற்ற **99** மாணாக்கர்கள் மற்றும் **5** ஆசிரியர்கள் இத்திட்டத்தின் கீழ், **15** நாட்களுக்கு ஆஸ்திரேலியா, ஜெர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்ப பயிலகங்களுக்கு செல்லும் இம்மாணவ மாணவிகள் அனைவரும் **16.5.2018** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சந்தித்தனர். மேற்படி பயிற்சிக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.**1.50** கோடி செலவினம் ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்படுகிறது.

## 2.14. தொழில் நுட்பக் கல்வித்தர மேம்பாட்டுத் திட்டம் (TEQIP)

தொழில் நுட்பக் கல்வித்தர மேம்பாட்டுத் திட்டம் – I (TECHNICAL EDUCATION QUALITY

IMPROVEMENT PROGRAMME - I) 2004 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டது. TEQIP-I திட்டத்தின் கீழ், தமிழகத்தில் உள்ள 5 அரசு பொறியியற் கல்லூரிகள் மற்றும் 3 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் உட்பட, மொத்தம் 11 கல்வி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு மற்றும் கல்வி சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் பொருட்டு ரூ.96.50 கோடி நிதி வழங்கப்பட்டது.

தொழில் நுட்பக் கல்வித்தர மேம்பாட்டுத் திட்டம் – II (TEQIP – II) 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. TEQIP - II திட்டத்தின் கீழ், தமிழகத்தில் உள்ள 4 அரசு பொறியியற் கல்லூரிகள், 3 அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் மற்றும் 2 பல்கலைக்கழக துறைகள் உட்பட, மொத்தம் 9 கல்வி நிறுவனங்களுக்கு ரூ.142.12 கோடி நிதி வழங்கப்பட்டது.

தொழில்நுட்பக் கல்வித் தர மேம்பாட்டுத்திட்டம்–II ஐ செயல்படுத்திய 22 மாநிலங்களில், இத்திட்டத்தை, வரையறுக்கப்பட்ட காலத்திற்குள், சிறப்பாக செயல்படுத்தி வெற்றிகரமாக முடித்தமைக்காக, TEQIP – III திட்டத்தை செயல்படுத்த தெரிவு செய்யப்பட்ட மாநிலங்களில் தமிழ்நாடும்

ஒன்றாகும். மேலும், பிற மாநிலங்களில் உள்ள TEQIP கல்லூரிகளை வழிநடத்தும் மாநிலங்களில் (Mentor State) ஒன்றாக தமிழகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் CENTRAL SECTOR SCHEME (CSS)இன் கீழ் TEQIP – III ஐ செயல்படுத்தும் கல்லூரிகளுக்கு, DIRECT BENEFIT TRANSFER மூலம் நேரடியாக முழு நிதியும் 100% மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்து, மத்திய அரசு மற்றும் மாநில அரசுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) ஒன்று கையொப்பமிடப்பட்டுள்ளது.

TEQIP-III திட்டத்தின் கீழ், தமிழகத்தில் பர்கூர், கோயம்புத்தூர், காரைக்குடி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் உள்ள 4 அரசு பொறியியற் கல்லூரிகள், கோயம்புத்தூரில் உள்ள 2 அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் மற்றும் மதுரையில் உள்ள ஒரு அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரி ஆகியவை தெரிவு செய்யப்பட்டுள்ளன. மேலே தெரிவு செய்யப்பட்ட 7 பொறியியல் கல்லூரிகளும், இத்திட்டத்தின் கீழ், 2017–18 ஆம் ஆண்டு முதல் 2020–21 ஆம் ஆண்டு வரையிலான திட்ட காலத்தில், தங்கள் கல்லூரி ஒவ்வொன்றுக்கும் ரூ.7.00 கோடி நிதி உதவி பெறுவதற்கு

தகுதி பெற்றவை ஆகும். இத்திட்டத்தின் கீழ், பிணைதல் (TWINNING ARRANGEMENT) அடிப்படையில், தங்களது கல்லூரியினை (Mentor Institute) மேம்பாடு அடையச் செய்வதோடு மட்டுமன்றி தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பிற நான்கு மாநிலங்களில் உள்ள கல்லூரிகளின் (Mentee Institute) தரத்தையும் மேம்படுத்த உதவி புரிதல் வேண்டும் என்பது இத்திட்டத்தின் இரட்டை நோக்கங்கள் ஆகும்.

**2.15. ஒற்றைச் சாளர இணையவழி கலந்தாய்வு மூலம் பொறியியல் சேர்க்கை**

- தமிழகத்தில் உள்ள கல்லூரிகளுக்கு தனித்தனியாக பல விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டும் என்ற அவசியம் ஏதும் இன்றி, ஒரே விண்ணப்பத்தினை சமர்ப்பித்து, அனைத்து தகுதிவாய்ந்த மாணாக்கர்களும், தங்களது மதிப்பெண்களின் தகுதி அடிப்படையில் தங்களின் விருப்பத்திற்கேற்ற பொறியியல் கல்லூரிகளில் சேரும் பொருட்டு, ஒற்றை சாளர முறையில் மாணவர் சேர்க்கையை தமிழக அரசு அறிமுகப்படுத்தியது.

- பன்னிரெண்டாம் வகுப்பு வாரியத் தேர்வில், மாணாக்கர்கள் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில், பொறியியல் கல்லூரிகளில் இளநிலை பொறியியல் பட்ட வகுப்புகளுக்கு, அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை மூலம் ஒற்றைச் சாளர முறையில் மாணாக்கர்கள் சேர்க்கை பெறுகின்றனர். அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் உள்ள மொத்த மாணவர் சேர்க்கை இடங்களில், அரசு ஒதுக்கீட்டின் கீழ் வழங்கப்படும் மாணவர் சேர்க்கை இடங்களுக்கான (விழுக்காடு) விவரம் பின்வருமாறு:

| **பொறியியல் கல்லூரிகள்** | **பிரிவுகள் விபரம்** | **அரசு ஒதுக்கீடு (விழுக்காடு)** |
|---|---|---|
| அரசு பொறியியல் கல்லூரிகள் | அனைத்து பாடப்பிரிவுகள் | 100 |
| அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் | அரசு உதவி பெறும் பாடப்பிரிவு | 100 |
| | சுயநிதி பாடப்பிரிவு | 70 |
| சுயநிதி பொறியியல் கல்லூரிகள் | சிறுபான்மை அல்லாத பிரிவு | 65 |
| | சிறுபான்மை பிரிவு | 50 |

- **2016–17** ஆம் ஆண்டிலிருந்து, ஒற்றை சாளர முறையில் மாணாக்கர்கள் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெறுதலுக்கான, இணைய வழி விண்ணப்பப் பதிவு (on-line Application Registration) மூலம் விண்ணப்பிப்பதற்கான உரிய தகவல்களை பதிவு செய்தல் மற்றும் பதிவு செய்வதற்கான கட்டணம் செலுத்துதல் முறை அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- அண்ணா பல்கலைக்கழகம் உட்பட முன்னணி கல்வி நிறுவனங்களில் முதலாமாண்டு சேர்க்கை பெற்ற மாணவர்கள் பின்னர் மருத்துவம், வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை போன்ற படிப்புகளுக்கு இடம் பெயர்வதால் ஏற்படும் காலியிடங்களை நிரப்புவதற்கும், மேலும் மாணாக்கர்களும் மாணாக்கர்களின் பெற்றோர்களும் கலந்தாய்வுக்கு நேரடியாக பங்கேற்க சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்திற்கு நீண்ட தூர பயணம் செய்து வருவதால் ஏற்படும் சிரமத்தை தவிர்ப்பதற்கும், தமிழக அரசு **2018–19** ஆம்

கல்வியாண்டு முதல் ஒற்றைச் சாளர இணையதள வாயிலாக கலந்தாய்வுக்கு (Single Window Online Counselling) ஆணையிட்டது.

- மாணாக்கர்களுக்கு இணையத்தின் வழியாக விண்ணப்பம் செய்தலுக்கு உதவி புரியும் பொருட்டும், சான்றிதழ் சரிபார்க்கும் பணி மேற்கொள்ளும் பொருட்டும், மாவட்டம் தோறும் குறைந்தபட்சம் ஒரு சேவை மையம் வீதம், மாநிலத்தில் உள்ள **32** மாவட்டங்களிலும் **42** தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை சேவை மையங்கள் (Tamil Nadu Engineering Admission Facilitation Centre) அமைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில், இணையவழி விண்ணப்பப்பதிவு செய்த மாணாக்கர்களின் எண்ணிக்கையினைப் பொறுத்து, ஒரு சில மாவட்டங்களில் ஒன்றுக்கும் மேலான சேவை மையங்கள் நிறுவப்பபட்டுள்ளன. **2018–19** ஆம் கல்வியாண்டிற்கான இணையதள விண்ணப்பங்கள் மே **3, 2018** ஆம் தேதி முதல் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

- சிதம்பரம், அண்ணாமலை பல்கலைக் கழக இளநிலை பொறியியல் பட்டப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கை **2018–19** ஆம் கல்வியாண்டு முதல், அண்ணா பல்கலைக்கழக TAMIL NADU ENGINEERING ADMISSION இணைய வழி கலந்தாய்வில் (On-line Counselling) சேர்க்கப்பட்டுள்ளது.

## 2.16. இலங்கை தமிழ் அகதி மாணாக்கர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகை விபரங்கள் குறித்து

தமிழகத்தை சார்ந்த மாணாக்கர்களைப் போலவே, தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கை தமிழ் அகதி மாணாக்கர்கள், **2011–12** ஆம் ஆண்டு முதல் பி.இ. / பி.டெக்., மற்றும் எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. / எம்.டெக். போன்ற முதுநிலை பட்டப் படிப்பு பயில ஏதுவாக, ஒற்றைச் சாளர கலந்தாய்வில் கலந்து கொண்டு கல்லூரிகளில் சேர்க்கை பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில், ஒற்றைச் சாளர முறை கலந்தாய்வின் மூலம், பொறியியல் கல்லூரிகளில் பயிலும் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் கல்விக் கட்டண சலுகை, இலங்கை தமிழ் அகதி மாணாக்கர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால், **2011–12** ஆம்

ஆண்டு முதல் **2017–18** ஆம் ஆண்டு வரை, **232** மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

**2.17. சென்னை, கோயம்புத்தூர், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய 5 இடங்களில் இந்திய பொறியியல் பணி (IES) தேர்வுகளுக்கான பயிற்சி வழங்கும் மையங்கள் நிறுவப்பட்டது குறித்த விவரங்கள்**

தமிழகத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் மற்றும் அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் தனித்திறமையை வெளிக்கொணர்ந்து இந்திய பொறியியல் பணித்தேர்வில் (Indian Engineering Services) அவர்கள் வெற்றி பெறவும் மற்றும் வெற்றி பெற்றோருக்கான தரவரிசைப் பட்டியலில் முன்னனி இடங்களைப் பெறும் பொருட்டும், **23.8.2016** அன்று தமிழ்நாடு சட்டப்பேரவை விதி **110**–இன் கீழ் அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய **4** இடங்களில் உள்ள அரசு பொறியியற் கல்லூரிகளிலும் மற்றும் சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக் கழகத்திலும் இந்திய பொறியியல் பணி தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள் நிறுவப்படும் என அறிவிப்பு செய்தார்கள். அதன்படி **2017–18** ஆம் ஆண்டில் **5** மையங்கள் அமைக்கப்பட்டன. இம்மையங்கள் மூலம், ஒரு

பயிற்சி மையத்திற்கு **240** மாணவர்கள் வீதம் ஆண்டொன்றிற்கு **1,200** மாணாக்கர்கள் பயனடைவர்.

### 2.18. திறன் மேம்பாட்டு சிறப்பு பயிற்சி மையம் மற்றும் 5 தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவனங்கள் நிறுவுதல்

தமிழகத்தில் தொழில்நுட்பக் கல்வி உட்கட்டமைப்பை வலுப்படுத்தவும், தொழிற்சாலைகளுக்கு தேவையான தொழில் திறன்களை மாணவர்களிடையே மேம்படுத்தவும், மாணவர்கள் வேலைவாய்ப்பு பெறுதலுக்கான திறனை அதிகரிக்கச் செய்யவும், தொழிற்சாலைகளின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு மாணவர்களின் திறனை மேம்படுத்தி, ஈடுசெய்யவும் தமிழகத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தின் Madras Institute of Technology, Chrompet வளாகத்தில், திறன் மேம்பாட்டு சிறப்பு பயிற்சி மையம் (Centre of Excellence for Skill Development) ஒன்றை உருவாக்கவும் மற்றும் கீழ்க்கண்ட **5** தொழில் கல்வி நிறுவனங்களில் திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவனங்கள் (Technical Skill Development Institutes) நிறுவவும் அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1. மைய பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, தரமணி.

2. அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, காஞ்சிபுரம்.
3. அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, விழுப்புரம்.
4. முருகப்பா பலவகை தொழில் நுட்பக் கல்லூரி (அரசு உதவி பெறும் கல்லூரி), ஆவடி.
5. தந்தை பெரியார் அரசினர் பொறியியற் கல்லூரி, வேலூர்.

இந்த பயிற்சி மையங்கள் M/s.SIEMENS மற்றும் DESIGN TECH LTD என்ற தொழில் நிறுவனத்துடன் இணைந்து ரூ.546.84 கோடியில் செயல்படுத்தப்படுகிறது.

தமிழக அரசு ரூ.54.68 கோடி நிதி 2017–18 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், பட்டய மற்றும் பட்ட வகுப்புகளில் பயின்று வரும் தொழில்நுட்ப மாணவர்களுக்கும் மற்றும் தொழிலகங்களிலிருந்து கலந்து கொள்ளும் பங்கேற்பாளர்களுக்கும், திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் பொருட்டு, Madras Institute of Technology, Chrompet வளாகத்தில் திறன் மேம்பாட்டு பெறுதலுக்கான 11 சிறப்பு ஆய்வகங்கள் மற்றும் மேலே கண்ட, 5 தொழில்நுட்ப பயிலகங்களில், 6 ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

## 2.19. பட்டய வகுப்பு மாணவர்களுக்கு இணைய வழி மின் கற்றலுக்கான (e-Learning) காணொளி பதிவுகள் (Video-Modules) தயார் செய்தல்

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் **15.6.2017** அன்று ‘‘பட்டய வகுப்பு மாணவர்களுக்கு இணைய வழி மின் கற்றலுக்கான (e-Learning) காணொளி பதிவுகள் (Video-Modules) அவர்கள் எளிதாக கற்கும் வகையில் தயார் செய்து வழங்குதல்” தொடர்பான அறிவிப்பினை வெளியிட்டார்கள். அதன்பேரில், மாணவர்கள் இணைய வழி மின்கற்றல் மூலம் பயன் அடைவதற்காக, அமைப்பியல், இயந்திரவியல், மின்னியல் & மின்னணுவியல், மின்னணுவியல் & தொடர்பியல் மற்றும் கணினி பொறியியல் ஆகிய ஐந்து பட்டய வகுப்புகளுக்கான **36** பிரதான பாடங்களுக்கான காணொளி பதிவுகள் (Video Modules) **720** எண்ணிக்கைகள் அண்ணா பல்கலை கழகத்தின் பல்லூடக கல்வி ஆராய்ச்சி மையம் (Educational Multi Media Research Centre-EMMRC) மூலம் தயாரிக்கும் பொருட்டு ரூ.**58.00** லட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வழங்கப்பட்டுள்ளது. **403** காணொளி பதிவுகள் இதுவரை மாணாக்கர்கள் பயன்பாட்டிற்காக YouTube-இல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

# 3. கல்லூரிக் கல்வி

**3.1.** பெரும்பான்மையான மாணாக்கர்கள் கலை மற்றும் அறிவியல் சார்ந்த பாடங்களில் சேர்ந்து பயில்வதற்கே முன்னுரிமை அளிப்பதால், உயர்கல்வித் துறையில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அது போன்றே, நல்ல கல்வியியல் கல்லூரிகள், பள்ளிகளுக்கு தேவையான தரம் மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளை நிர்வகிக்க ஏதுவாக கல்லூரிக் கல்வி இயக்ககம் **1965** ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. அது வரை, பள்ளிக் கல்வி மற்றும் கல்லூரிக் கல்வியை கவனித்து வந்த பொதுக் கல்வி இயக்ககத்திலிருந்து, கல்லூரிக் கல்வி இயக்ககம் பிரித்து உருவாக்கப்பட்டது.

கல்லூரிக் கல்வி இயக்ககம் பின்வரும் கல்வி நிறுவனங்களை நிர்வகித்து வருகிறது :

| கல்லூரிகள் வகை | அரசு கல்லூரிகள் | உதவி பெறும் கல்லூரிகள் | சுயநிதி கல்லூரிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| கலை மற்றும் அறிவியல் | 91 | 139 | 516 | 746 |
| உடற்கல்வி | 0 | 3 | 8 | 11 |
| கீழ்த்திசை | 0 | 4 | 0 | 4 |
| சமூகப்பணி பள்ளி | 0 | 2 | 0 | 2 |
| கல்வியியல் | 7 | 14 | 710 | 731 |
| பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் | 41 | 0 | 0 | 41 |
| **மொத்தம்** | **139** | **162** | **1,234** | **1,535** |

## 3.2. புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குதல்

மாணாக்கர்கள் உயர் கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கான வாய்ப்பினை மேம்படுத்தும் வகையில், **2011–12** ஆம் கல்வியாண்டு முதல் **2017–18** ஆம் கல்வியாண்டு வரை அரசு புதியதாக **29** கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தொடங்கியுள்ளது. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

| கல்வியாண்டு | புதிய அரசு கலை அறிவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை | அமைந்துள்ள இடம் மற்றும் மாவட்டம் |
|---|---|---|
| 2013–14 | 12 | காங்கேயம் – திருப்பூர்<br>குமாரபாளையம் – நாமக்கல்<br>காரிமங்கலம் – தருமபுரி<br>ஓசூர் – கிருஷ்ணகிரி<br>பேராவூரணி – தஞ்சாவூர்<br>கறம்பக்குடி – புதுக்கோட்டை<br>சிவகாசி – விருதுநகர்<br>கடலாடி – இராமநாதபுரம்<br>திருவாடாணை – இராமநாதபுரம்<br>முதுகுளத்தூர் – இராமநாதபுரம்<br>கோவில்பட்டி – தூத்துக்குடி<br>உத்திரமேரூர் – காஞ்சிபுரம் |
| 2014–15 | 2 | மணல்மேடு – நாகப்பட்டினம்<br>வேப்பந்தட்டை – பெரம்பலூர் |
| 2015–16 | 4 | டாக்டர் இராதகிருஷ்ணன் நகர் – சென்னை<br>வீரபாண்டி – தேனி<br>சத்தியமங்கலம் – ஈரோடு<br>நாகர்கோவில் – கன்னியாகுமரி |
| 2016–17 | 3 | மேட்டுப்பாளையம் – கோயம்புத்தூர்<br>பெரும்பாக்கம் – காஞ்சிபுரம்<br>அவினாசி – திருப்பூர் |

| | | |
|---|---|---|
| 2017–18 | 8 | காட்டுமன்னார்கோவில் – கடலூர்<br>குடவாசல் – திருவாரூர்<br>விழுப்புரம் (மகளிர்) – விழுப்புரம்<br>சீர்காழி – நாகப்பட்டினம்<br>திட்டமலை – ஈரோடு<br>மாதனூர் – வேலூர்<br>பல்லடம் – திருப்பூர்<br>பாலக்கோடு – தருமபுரி |

## 3.3. அரசு கலைக் கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள் தொடங்குதல்

மாணாக்கர்கள் உயர் கல்வியில் தமக்கு விருப்பமான துறையை தேர்ந்தெடுத்து பயில வசதியாக **2011–12** முதல் **2017–18** ஆம் ஆண்டு வரை பல புதிய பாடப்பிரிவுகள் அரசு கல்லூரிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இப்புதிய பாடப்பிரிவுகள், மாணாக்கர்களுக்கு அவர்கள் விரும்பும் பாடப்பிரிவுகளை தெரிவு செய்யும் வசதியை வழங்குவதோடு மட்டுமன்றி அவர்களின் வேலை வாய்ப்பு தகுதியினையும் உயர்த்த உதவியுள்ளது.

| **கல்வியாண்டு** | **அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடப்பிரிவுகளின் எண்ணிக்கை** | **ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்கள்** |
|---|---|---|
| 2011 – 16 | 961 | 1,934 |
| 2017 – 18 | 271 | 533 |
| **மொத்தம்** | **1,232** | **2,467** |

## 3.4. அரசுக் கல்லூரிகளில் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணி நியமனம் / பணி நிரவல்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மிகையாக இருந்த பணியாளர்களின் (ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்கள்) பணியினை திறம்பட பயன்படுத்தும் வகையில் 578 உதவிப் பேராசிரியர்கள், 100 ஆசிரியரல்லா பணியாளர்கள் 3 ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் பல்வேறு அரசு கல்லூரிகளில் பணி நிரவல் மூலம் பணியமர்த்தப்பட்டனர்.

அரசு கல்லூரிகளில் 2011–12 முதல் 2017–18 ஆம் ஆண்டு வரை 1013 உதவிப் பேராசிரியர்கள் மற்றும் 206 ஆசியரல்லா பணியாளர்கள் முறையே ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டனர். மேலும் 2,334 உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு தகுதியுள்ள ஆசிரியர்களை தெரிவு செய்யும் பணியை ஆசிரியர் தேர்வு வாரியம் மேற்கொண்டு வருகிறது.

## 3.5. அரசு கலைக் கல்லூரிகளில் கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம்.

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சுழற்சி முறையில் வகுப்புகள் நடத்தும் முறை அரசால்

அறிமுகப்படுத்தப்பட்டு ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. **2017–2018** ஆம் கல்வியாண்டில் சுழற்சி–I இல் காலிப்பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பும் வரையில் வகுப்புகளை நடத்துவதற்கு **1,883** கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் சுழற்சி–II முறையில் அரசு **1,661** கௌரவ விரிவுரையாளர்களை நியமனம் செய்ய ஒப்புதல் அளித்தது. கௌரவ விரிவுரையாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.**15,000** வழங்கப்படுகிறது.

## 3.6. இலவசக் கல்வி

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு முதுநிலை படிப்பு வரையிலும், அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு இளநிலை படிப்பு வரையிலும் இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தவர்களின் விவரங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| • **2011–12** முதல் **2016–17** வரை | : **28,03,033** |
| • **2017–18** | : **4,95,578** |
| **மொத்தம்** | : **32,98,611** |

## 3.7. கல்லூரி மாணாக்கர்களுக்கான இலவச பேருந்து அட்டை வழங்கும் திட்டம்

அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரி மாணாக்கர்களுக்கான இலவச பேருந்து அட்டை வழங்கும் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயனடைந்த மாணாக்கர்களின் விவரங்கள் கீழ் வருமாறு :

| | | |
|---|---|---|
| • 2011–12 முதல் 2016–17 வரை | : | 8,49,542 |
| • 2017–18 | : | 1,80,496 |
| **மொத்தம்** | **:** | **10,30,038** |

## 3.8. இலவச குடிமைப் பணி பயிற்சி

அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுகள் எழுதும் மாணவிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, சென்னை, இராணி மேரி கல்லூரி மற்றும் மதுரை, அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி ஆகியவற்றில் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்கென அரசால் ஒவ்வோர் ஆண்டும் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 3.9. வேலை வாய்ப்பு முகாம்

அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளநிலை, முதுநிலை இறுதியாண்டு மாணாக்கர்கள் பயன்பெறும் பொருட்டு, பணி அமர்த்தல் பிரிவுகள் தொடங்கப்பட்டன. இவற்றின் மூலம், ஒட்டுமொத்தமாக **47,898** மாணக்கர்கள் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். அவ்வாறு பயனடைந்தோர் விவரங்கள் கீழ்வருமாறு :

- 2011 – 12 முதல் 2016 – 17 வரை : 41,073
- 2017 – 18 : 6,825

**மொத்தம் : 47,898**

## 3.10. தமிழ் வழி பயிலும் மாணாக்கர்களுக்கு ஊக்கத் தொகை

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தமிழ் வழியாகக் கல்வி பயிலும் மாணாக்கர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு வருடத்திற்கு ஒரு மாணாக்கருக்கு ரூ.400 உதவித் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் **2011–12** முதல் பயனடைந்த மாணாக்கர்கள் விவரம் பின்வருமாறு:

| கல்வியாண்டு | செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) | பயன்பெற்ற மாணாக்கர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2011 – 12 முதல் 2016 – 17 வரை | 906.54 | 2,26,634 |
| 2017 – 18 | 189.37 | 47,342 |
| **மொத்தம்** | **1,095.91** | **2,73,976** |

## 3.11. சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்

அரசு கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணாக்கர்களில், குறிப்பாக ஊரகப்பகுதியில் உள்ள மாணாக்கர்கள் தொடக்கத்தில் ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களைக் கற்பதற்கு சில சமயங்களில் சிரமங்களைச் சந்திக்கிறார்கள். இது மாணாக்கர்களின் தன்னம்பிக்கை மற்றும் உயர் கல்வி பயில்வதற்கான உந்துதலை பாதிக்கிறது. அவர்களிடம் உள்ள அச்சத்தைப் போக்கி அறிவாற்றலை உயர்த்தும் விதத்தில் அம்மாணாக்கர்களுக்கு முறையான வகுப்புகள் முடிந்த பின்னரும் மற்றும் விடுமுறை நாட்களிலும் சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற மாணாக்கர்கள் விவரம் பின்வருமாறு:

- **2011–12** முதல் **2016–17** வரை : **60,098**

- 2017–18 : 9,695

**மொத்தம் : 69,793**

## 3.12. ஆராய்ச்சி படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கான உதவித் தொகை

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பல்வேறு பாடப்பிரிவுகளில் ஆராய்ச்சி படிப்பு பயிலும் மாணாக்கர்கள், ஆண்டுக்கு ரூ.**36,000** வீதம் மூன்றாண்டுகளுக்கு, படிப்புதவித் தொகையினை பெறுகின்றனர். இதுவரையிலும் பயனடைந்த ஆராய்ச்சி படிப்பு பயிலும் மாணாக்கர்கள் விவரங்கள்:

| **கல்வியாண்டு** | **செலவினம் (ரூபாய் இலட்சத்தில்)** | **பயன்பெற்ற மாணாக்கர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 2011 – 12 முதல் 2016 – 17 வரை | 246.60 | 685 |
| 2017 – 18 | 51.12 | 142 |
| **மொத்தம்** | **297.72** | **827** |

## 3.13. அரசு கல்லூரிகளில், அடிப்படை வசதிகள், தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் / மேம்படுத்துதல்

மாணாக்கர்கள் உகந்த கல்விச் சூழலில் உயர்கல்வி பயில வழிவகை செய்யும் பொருட்டு அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு மரத்தளவாடங்கள், உபகரணங்கள் வழங்குதல், அடிப்படை வசதிகள் செய்து தருதல் ஆகியவற்றிற்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார்கள்.

2017–18 ஆம் ஆண்டில் 15 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தேவையான மரத்தளவாடங்களை வாங்குவதற்கென ரூ.1.90 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## 3.14. கல்லூரி நூலகங்களை கணினிமயமாக்குதல்

2017–18 ஆம் நிதியாண்டில், 26 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நூலகங்களை கணினிமயமாக்கும் பொருட்டு அரசு ரூ.1.01 கோடி நூலக மேலாண்மை மென்பொருள் மற்றும் வன்பொருள் வாங்குவதற்காக நிதி

ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் (ELCOT) மூலம் செயல்படுத்தப்பட்டு விரைவில் நிறைவு செய்யப்படும்.

### 3.15. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம்

சமூகரீதியாக பின்தங்கிய மாணாக்கர்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் உயர்கல்வியினை கட்டணமின்றி எளிதில் எல்லா நிலைகளிலும் பெறும் வகையில் மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் **2011–12** லிருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் (சிறுபான்மை நிறுவனங்கள் உட்பட) சேர்க்கை பெற்ற மாணாக்கர்களுக்கு கல்லூரிக் கட்டணங்கள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகின்றன. **2013–14** ஆம் கல்வியாண்டு முதல் மாணாக்கர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுவதை கல்லூரிக் கல்வி இயக்ககம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையுடன் இணைந்து

செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| ஆண்டு | கல்லூரிகளின் வகை | செலவினம் (ரூபாய் கோடியில்) | பயன்பெற்ற மாணாக்கர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2013 – 14 | கலை, அறிவியல் | 86.27 | 33,330 |
| | பி.எட் | | |
| | எம்.எட் | | |
| | **மொத்தம்** | **86.27** | **33,330** |
| 2014 – 15 முதல் 2016 – 17 வரை | சுயநிதி கலை, அறிவியல் | 470.71 | 6,79,399 |
| | பி.எட் | 420.51 | 94,391 |
| | எம்.எட் | 53.40 | 12,052 |
| | **மொத்தம்** | **944.62** | **7,85,842** |
| 2017–18 | சுயநிதி கலை, அறிவியல் | 61.28 | 1,91,945 |
| | பி.எட் | 17.61 | 26,172 |
| | எம்.எட் | 2.85 | 4,414 |
| | **மொத்தம்** | **81.74** | **2,22,531** |

## 3.16. விளையாட்டு

தமிழ்நாட்டில் கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரி மாணாக்கர்கள் விளையாட்டில் சிறப்புநிலை பெற்று, தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் பதக்கங்கள் மற்றும்

கேடயங்கள் வென்று பெருமை சேர்த்துள்ளனர். **2017–18** ஆம் கல்வியாண்டில் அவர்கள் **66** தேசிய அளவிலான பதக்கங்கள், **134** மாநில மற்றும் **303** மாவட்ட அளவிலான பதக்கங்கள் வென்றுள்ளனர்.

## 3.17. புதிய கட்டடம் கட்டுதல்

### 3.17.1. புதிதாகத் தொடங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

**2011–12** முதல் **2017–18** வரை தொடங்கப்பட்ட **29** புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக அரசு ரூ.**221.13** கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இவற்றில் ஓசூர், குமாரபாளையம், காங்கேயம், உத்திரமேரூர், பேராவூரணி, சிவகாசி, காரிமங்கலம், கோவில்பட்டி, கறம்பக்குடி, வேப்பந்தட்டை, மணல்மேடு, கடலாடி, முதுகுளத்தூர், டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் (சென்னை), நாகர்கோவில் மற்றும் சத்தியமங்கலம் ஆகிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு சொந்த கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

திருவாடானை, வீரபாண்டி ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் கட்டடப்பணி முடியும் நிலையில் உள்ளது.

மேட்டுப்பாளையம், பெரும்பாக்கம், அவினாசி, பாலக்கோடு, காட்டுமன்னார்கோவில், குடவாசல், விழுப்புரம் (மகளிர்), சீர்காழி, திட்டமலை, மாதனூர் மற்றும் பல்லடம் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு சொந்த கட்டடம் கட்டும் பணிகள் இந்த ஆண்டிலேயே முடிக்கப்பட்டுவிடும்.

### 3.17.2. கல்லூரிக் கல்வி மண்டல அலுவலகங்கள்

திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகங்களுக்கு ரூ.4.59 கோடி செலவில் சொந்த கட்டடங்கள் கட்ட அரசால், நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இக்கட்டடப்பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக ரூ.1.69 கோடியும் மற்றும் தஞ்சாவூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக ரூ.1.86 கோடியும் அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இக்கட்டடப்பணிகள் இந்த ஆண்டிலேயே முடிவுபெறும்.

### 3.17.3. கலையரங்கம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல்

சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிவகங்கை, மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரியில் கலையரங்கம் மற்றும் சுற்றுச்சுவர் ஆகியவை ரூ.3.93 கோடி செலவில் கட்டப்படும் என அறிவித்தார்கள். அதன்பேரில், கலையரங்கம் கட்ட ரூ.2.89 கோடி மற்றும் சுற்றுச்சுவர் கட்டுவதற்காக ரூ.1.04 கோடிக்கு அரசு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### 3.17.4. சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் புதிய ஆடவர் விடுதி கட்டுதல் மற்றும் நினைவு வளைவு அமைத்தல்.

சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் ஆடவர்கள் தங்கும் விடுதி கட்டுவதற்காக அரசு ரூ.10.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. இக்கட்டடப்பணிகள் இந்த ஆண்டிலேயே கட்டி முடிக்கப்படும். இக்கல்லூரி 175 ஆண்டுகளை நிறைவு செய்ததன் பொருட்டு நினைவு வளைவு அமைக்க ரூ.40.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

### 3.18. பழமைவாய்ந்த கட்டடங்களை பராமரித்தல்

தமிழக மக்கள் கல்விக்கு அதிக முக்கியத்துவம் தருபவர்கள். தமிழ்நாட்டில் உயர் கல்வியில் சிறந்து விளங்கும் மிகப் பழமையான கல்வி நிறுவனங்கள் அப்போதைய சென்னை மாகாணத்தில் நிறுவப்பட்டதாகும். இந்நிறுவனங்களின் கட்டடங்கள் புராதன மதிப்புமிக்கவை.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் **15.03.2018** ஆம் நாளிட்ட தமது நிதி நிலை அறிக்கையில் கும்பகோணம், அரசு கலைக் கல்லூரி, சென்னை, மாநிலக் கல்லூரியின் விக்டோரியா விடுதி மற்றும் சென்னை, இராணி மேரி கல்லூரி ஆகியவற்றின் புராதன கட்டடங்கள் ரூ.**26.00** கோடி செலவில் புனரமைக்கப்படும் என அறிவித்தார். அதன்பேரில், புராதன கட்டடங்களை பாதுகாக்கும் வகையில் பின்வரும் பணிகளுக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது :

- சென்னை மாநிலக் கல்லூரியில் உள்ள பழமைவாய்ந்த விக்டோரியா விடுதிக் கட்டடத்தை சீரமைக்கும் பணிக்கு ரூ.**3.20** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை, இராணி மேரி கல்லூரியில் உள்ள புராதன கட்டடங்களை புனரமைக்க ரூ.6.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கும்பகோணம், அரசு கலைக் கல்லூரியில் (தன்னாட்சி) உள்ள புராதன கட்டடங்களை புனரமைக்க ரூ.14.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பணிகளுக்காக அரசாணை வெளியிடப்பட்டு, இதற்கான ஒப்பந்தம் விரைவில் கோரப்பட இருக்கிறது.

## 3.19. பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடங்கள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டப்பேரவை விதி 110–இன் கீழ், மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினை குறிக்கும் வகையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ரூ.210.00 கோடியில் புதிய கட்டடங்கள் கட்டப்படும் எனவும், இக்கட்டடங்கள் ‘‘பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடங்கள்’’ என பெயரிடப்படும் என்று அறிவிப்பினை வெளியிட்டார்கள். அதன்பேரில் அரசு, 68 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கட்டட பணிகளை

மேற்கொள்ள ரூ.210.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இக்கட்டட பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 3.20. குப்பைத் தொட்டிகள் வாங்குதல்

கல்லூரி வளாகத்தை தூய்மையாகவும் மற்றும் பசுமையாகவும் வைத்திருக்கும் பொருட்டு, 2017–18 ஆம் நிதியாண்டில், 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 7 கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு குப்பைத் தொட்டிகள் வாங்குவதற்கென ரூ.48.79 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

## 3.21. நாப்கின் வழங்கும் இயந்திரங்கள் வாங்குதல்

கல்லூரிக் கல்வித் துறையின் கீழ் இயங்கி வரும் 85 அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவியர்களின் நலன் கருதி நாப்கின் வழங்கும் இயந்திரங்களை வாங்குவதற்காக அரசு, ரூ.46.69 இலட்சம் 2017–18ஆம் ஆண்டில் நிதி ஒப்பளிப்பு செய்தது. இதனடிப்படையில், நாப்கின் வழங்கும் இயந்திரங்கள் தொடர்புடைய கல்லூரிகளில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

### 3.22. நாட்டு நலப்பணித் திட்டம்

மாணாக்கர்களிடையே தலைமைத்துவ பண்புகளை வளர்க்கும் பொருட்டும், உதவும் மனப்பான்மையை ஊக்குவிக்கும் பொருட்டும் நாட்டு நலப்பணித்திட்டம், தமிழகத்தில், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் செப்டம்பர், **1969** முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது **3,90,700** மாணவத் தொண்டர்களுடன் இத்திட்டம் தமிழகத்தில் பல்வேறு கல்வி நிலையங்களில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென **2017–18** ஆம் ஆண்டில் ரூ.**13.91** கோடி மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 4. பல்கலைக்கழகங்கள்

உயர்கல்வித்துறையின் ஆளுகையின் கீழ் பின்வரும் பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன:

1. சென்னை பல்கலைக்கழகம்
2. அண்ணாமலை பல்கலைக்கழகம்
3. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
4. அண்ணா பல்கலைக்கழகம்
5. பாரதியார் பல்கலைக்கழகம்
6. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
7. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
8. அழகப்பா பல்கலைக்கழகம்
9. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
10. பெரியார் பல்கலைக்கழகம்
11. தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம்
12. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
13. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

## 4.1. சென்னை பல்கலைக்கழகம்

**4.1.1.** பிரிட்டிஷ் இந்தியாவின் மாகாணங்களான மெட்ராஸ், பம்பாய் மற்றும் கல்கத்தா ஆகியவற்றில் துவங்கப்பட்ட மூன்று பல்கலைக்கழகங்களில் முதல் பல்கலைக்கழகம் சென்னை பல்கலைக்கழகமாகும். சென்னை பல்கலைக்கழகம் செப்டம்பர் 5, 1857 அன்று நிறுவப்பட்டது. பட்டப்படிப்பிற்கான தேர்வுகளை நடத்தும் நிறுவனமாக துவங்கப்பட்டு ஆய்வு அமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கற்றல் நடவடிக்கைகள் கொண்ட பல்கலைக்கழகமாக செயல்பட சென்னை பல்கலைக்கழக சட்டம் 1923 இயற்றப்பட்டு அப்பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டன. இப்பல்கலைக்கழகத்திற்கு சென்னை மாநகரில் சேப்பாக்கம், மெரீனா, கிண்டி, தரமணி, சேத்துப்பட்டு மற்றும் மதுரவாயில் (கள ஆய்வகம்) ஆகிய இடங்களில் 6 வளாகங்கள் உள்ளன.

**4.1.2.** இப்பல்கலைக்கழகத்தில் 87 துறைகள் / மையங்கள், 257 ஆசிரியர்களை கொண்டு இயங்கி வருகிறது. 2017–18 ஆம் ஆண்டில் முதுகலை, முதுகலை ஆராய்ச்சி, முனைவர் படிப்புகளில் முறையே 1407, 354, 233 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். சென்னை பல்கலைக்கழகத்தில் 23 தன்னாட்சி கல்லூரிகளையும் சேர்த்து மொத்தம்

133 இணைவு கல்லூரிகளும், 53 இணைவு நிறுவனங்களும் உள்ளன. இவற்றில் மொத்தம் 2.78 இலட்சம் மாணவர்கள் படிக்கின்றனர்.

**4.1.3.** 1981 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தொலைதூர கல்வி நிறுவனம் மூலமாக 27 இளங்கலை, 22 முதுகலை, 18 தொழில் படிப்புகள், 30 சான்றிதழ் / பட்டயப் படிப்புகளையும் வழங்கி வருகிறது. இவற்றில் 73,900 மாணவர்கள் பயில்கின்றனர். நெம்மேலி மற்றும் திருவொற்றியூரில் இரண்டு உறுப்பு கல்லூரிகள் சென்னை பல்கலைக்கழகத்தால் நிறுவப்பட்டுள்ளன.

**4.1.4.** 2014 ஆம் ஆண்டில் NAAC என்ற மத்திய அரசின் உயர்கல்வி தரச்சான்றிதழ் நிறுவனத்தால், சென்னை பல்கலைக்கழகம் 3.32 என்ற குறியீட்டு எண்ணை பெற்று A+ என்ற உயர்ந்த தரத்தினை அடைந்துள்ளது. NIRF 2018 தரவரிசையில் சென்னை பல்கலைக்கழகம் பல்கலைக்கழகங்களில் 18வது இடத்தையும், உயர்கல்வி நிறுவனங்களில் 29வது இடத்தையும் பெற்றுள்ளது.

**4.1.5.** 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் UGC சென்னை பல்கலைக்கழகத்திற்கு உயர்ந்த தரத்துடனான தன்னாட்சி

நிலையை வழங்கியது. இதன் மூலம் சென்னை பல்கலைக்கழக தொலைதூர கல்வி நிறுவனத்தில் புதிய படிப்புகள் மற்றும் இணையத்தின் மூலமும் வேறு வளாகங்கள் மூலமும் படிப்புகளை வழங்கலாம். மற்றவைகளுடன், பல்கலைக்கழகம் புதிய பாடப்பிரிவுகள் துவங்கலாம், வெளிநாட்டு ஆசிரியர்கள் நியமனம் மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் சேர்க்கை ஆகியவற்றினை செய்யலாம். பல்கலைக்கழகம் கல்வி புலத்தில் அடைந்துள்ள உயர்ந்த நிலைக்கு இவை எல்லாம் தகுதியான அங்கீகாரம் அளிப்பதாக உள்ளன.

**4.1.6. 2012–18** ஆண்டுகளில் பன்னிரண்டாவது ஐந்தாண்டு திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களுக்காக ரூ.**54.77** கோடியை பல்கலைக்கழக மானியக்குழு (UGC) வழங்கியது. கடந்த **6** ஆண்டுகளில், MHRD, DBT, DST, DRDO, CSIT, ICMR போன்ற மத்திய அரசின் துறைகளும் நிறுவனங்களும் ரூ.**72.20** கோடியை ஆராய்ச்சி, உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வழங்கின. UPE II என்ற திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் உயிரி மருத்துவ ஆராய்ச்சி (Bio-Medical Research) மற்றும் புதிய பொருள்

ஆராய்ச்சிகளுக்காக (New Material Research) ரூ.25.00 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**4.1.7.** முனைவர் ராபர்ட் கால்டுவெல் என்ற தமிழறிஞரின் 200ஆவது ஆண்டை ஒட்டி தமிழ் வளர்ச்சிக்காக ஆசிரியருடன் கூடிய சங்கப்பலகை சென்னை பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. UPE திட்டத்தின் கீழ் 7 ஆராய்ச்சி மையங்கள் அமைக்கப்பட்டன. மாநில பல்கலைக்கழகங்களில், சென்னை பல்கலைக்கழகத்தில் மட்டும் தொழில்முனைவோரை ஊக்குவிக்க தனியாக இரண்டு சிறப்பு மையங்கள் (Technology Business Incubator and Techno Entrepreneur Promotion Outreach Centres) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**4.1.8.** மாணவர்களின் தேவையை பூர்த்தி செய்ய தொலைதூர கல்வி நிறுவனத்தில் ஒற்றை சாளர சேர்ப்பு முறை உள்ளது. பல்கலைக்கழகம் மற்றும் உறுப்பு கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவச கல்வி திட்டமும் உள்ளது. காப்பீடு, கணினி வழி கல்வி, மின் வழி கற்றல், பார்வையற்றோருக்கு பேசும் நூலகம், விளையாட்டு வசதி, இணையவழி தொடர்புகள் மற்றும் பல்வேறு கட்டண

சலுகைகள் ஆகிய வசதிகளை மாணவர்களின் நலனுக்காக பல்கலைக்கழகம் வழங்கிவருகிறது. 2016–17 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழக துறைகளில் மாணவர் சேர்க்கை இணையத்தளம் வழியாக நடைபெற்று வருகிறது.

**4.1.9.** UGC யின் Sodhganga என்ற இணையத்தளத்தில் Ph.D ஆய்வேடுகள் பதிவேற்றம் செய்யப்பட்டது. அதன்படி 4000க்கும் மேற்பட்ட ஆய்வேடுகளை பதிவேற்றம் செய்து இந்தியாவில் ஒன்பதாவது இடத்தை சென்னை பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

**4.1.10.** RUSA-I திட்டத்தின் கீழ், பல்வேறு ஆராய்ச்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதி போன்ற திட்டங்களுக்கு மத்திய அரசிடமிருந்து ரூ.20.00 கோடிக்கு திட்ட ஒப்புதல் பெறப்பட்டு, இதில் ரூ.14.41 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**4.1.11.** 2018–19 ஆம் கல்வியாண்டிலிருந்து மாணவர்களின் பட்ட சான்றிதழ்களை கணினிமயமாக்குவதற்கு NSDL நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**4.1.12. 2018–19 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள்**

(i) நிர்வாகத்தை மின் – ஆளுகை மூலமாக காகிதமில்லாத நிர்வாகமாக மாற்ற சென்னை பல்கலைக்கழகம் முயற்சிக்கின்றது. வெளிப்புற நிதிபெறும் கல்வி புலம் மற்றும் உட்கட்டமைப்பு பிரிவுகளில் பொது நிதி மேலாண்மை (PFMS) அமைப்பினை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ii) நேரடி வகுப்பறை கல்வி, தொலைதூர கல்வி, இணையத்தள கல்வி என்று மூன்று வழிகளில் கற்றலை சென்னை பல்கலைக்கழகம் வழங்க உள்ளது. இந்த மூன்று வழிகளில் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு எளிதில் மாணவர்கள் மாறி கல்வியை தொடர வாய்ப்பு வழங்கப்படும். தொலைதூர கல்வியில் Credit Based Choice System என்ற புதிய கல்வி முறை அறிமுகப்படுத்தப்படும்.

(iii) முக்கிய பாடங்களை மாணவர்கள் தாங்களாகவே தேர்ந்தெடுத்து படிக்கும் முறையை அமல்படுத்தவும், மதிப்பெண்கள் மாற்றம் செய்தல் மூலம் இந்தியாவில் மற்றும் வெளிநாடுகளில் இருக்கும் ஒரு கல்வி நிறுவனத்திலிருந்து மற்றொரு கல்வி நிறுவனத்திற்கு எளிதில் செல்லும்

வசதி, தொலைதூர கல்வியிலிருந்து நேரடி கல்வி முறைக்கு எளிதில் செல்லுதல் ஆகியவற்றிற்க்கு விதிகள் வகுக்கப்பட்டுள்ளது.

(iv) 2018–19 ஆம் கல்வி ஆண்டு முதல் 2 வருட B.Ed படிப்பை தொலைதூர கல்வியில் துவங்குவதற்கு NCTE அனுமதி அளித்துள்ளது. அதன்படி இந்த பட்டபடிப்பு இந்த ஆண்டு முதல் துவங்கப்படும்.

(v) SWAYAM மற்றும் NPTEL மூலம் வழங்கப்படும் இணையத்தள பாடங்களை சென்னை பல்கலைக்கழக மாணவர்கள் பயில்வதற்கான முறைகள் வகுக்கப்பட்டு கல்வி புல குழுவின் ஒப்புதலுடன் செயல்படுத்த தயாராக உள்ளன. அவை இந்த கல்வி ஆண்டு முதல் (2018–19) நடைமுறைக்கு வரும். சென்னை பல்கலைக்கழகத்தின் மனிதவள மேம்பாட்டு மையத்தினை தேசிய வள மையமாக (NRC) UGC அங்கீகரித்துள்ளது. இதன் மூலமாக இவ்வாண்டில் அரசியல் அறிவியல், பன்னாட்டு படிப்புகளில் இணையதள பாடங்கள் (On-line Courses) நடத்தப்படும்.

(vi) UGC–யின் நிதி உதவியுடன் ரூ.2.42 கோடி செலவில் உடற்பயிற்சி மையமும் விளையாட்டு அறிவியல் வசதி மையமும் 2018–19 ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.

(vii) **2018–19** ஆம் கல்வி ஆண்டு முதல் Executive M.B.A., M.A. (Saiva Sidhaanta – Self Study), M.Com (Big Data Science) ஆகிய மூன்று முதுகலை பாடப்பிரிவுகளை சென்னை பல்கலைக்கழகம் துவங்க உள்ளது.

## 4.2. அண்ணாமலை பல்கலைக்கழகம்

**4.2.1.** 1929 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்நாட்டில் இரண்டாவதும், தேசிய அளவில் 14ஆவது பல்கலைக்கழகமும் ஆகும். 2013 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக சட்டம் முலம் இப்பல்கலைக்கழகம் தமிழக அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது.

**4.2.2.** இப்பல்கலைக்கழகம், கலை, அறிவியல், கடல்சார் அறிவியல், இந்தியமொழிகள், கல்வியியல், நுண்கலை, பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், விவசாயம், மருத்துவம் மற்றும் பல்மருத்துவம் ஆகிய புலங்களின் கீழ் இயங்கும் 52 துறைகள் மூலம், முனைவர், ஆய்வியல் நிறைஞர், முதுநிலை, இளநிலைபட்டம் மற்றும் முதுநிலை பட்டயம் உள்ளிட்ட 387 படிப்புகளை வழங்குகிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் 2,552 ஆசிரியர்களில், 1,003 மிகை ஆசிரியர்கள் பல்வேறு அரசு கல்லூரிகளுக்கும் / மாநில பல்கலைக்கழகங்களுக்கும் மூன்றாண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் பணிநிரவல் செய்யப்பட்டுள்ளனர்.

**4.2.3.** 2017–18 ஆம் கல்வியாண்டில் மொத்தம் 2,00,101 மாணாக்கர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இதில் 21,256 மாணாக்கர்கள் நேரடி கல்வி முறையிலும், 1,78,845 மாணாக்கர்கள் தொலைதூரக் கல்வி முறையிலும் பயில்கின்றனர்.

**4.2.4.** மத்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சக நிதியுதவியுடன் ரூ.25.00 கோடி செலவில், விளையாட்டு அறிவியல் துறை துவங்கப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள பொறியியல் மற்றும் தொழில்நுட்ப புல முன்னாள் மாணாக்கர்கள் சங்கத்தின் நிதியுதவியுடன் 2017 ஆம் ஆண்டில் ஒரு இருக்கை நிறுவப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம் – தொழிற்சாலைகளுக்கு இடையே தொடர்பை ஏற்படுத்துவதும், அதன் மூலம் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதும் இந்த இருக்கையின் முக்கிய நோக்கமாகும்.

**4.2.5.** 2017–18 ஆம் கல்வியாண்டில், முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கான கல்விக் கட்டணச்சலுகை திட்டத்தின் கீழ் 3,003 மாணாக்கர்களுக்கு ரூ.6.87 கோடி கல்விக் கட்டணச்சலுகை வழங்கப்பட்டுள்ளது. 2017–18 ஆம் கல்வியாண்டில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கான போஸ்ட்–மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கும்

திட்டத்தில் **5,496** மாணாக்கர்களுக்கு ரூ.**16.61** கோடி வழங்கப்பட்டுள்ளது.

**4.2.6.** 2017–18 ஆம் கல்வியாண்டில், நேரடி கல்விமுறையில், பொறியியல் புலத்தில் முதுகலை பொறியியல் தகவல் தொழில்நுட்பப் பாடப்பிரிவு புதிதாக துவங்கப்பட்டது. இதே ஆண்டில், தொலைதூரக்கல்வி முறையில், ஒரு முதுகலை பாடப்பிரிவும் (M.Sc. Energy Auditing and Management), 4 பட்டய பாடப்பிரிவுகளும் (Diploma in Teaching, Diploma in ICT in Education, Diploma in Pre-Primary Education and Diploma in Health and Nutrition programmes) புதிதாக துவங்கப்பட்டன.

**4.2.7.** நில பயன்பாடு, நில நிர்வாகம், குறிப்பாக மழைநீர் வள மண்டலங்களை கண்டறிதல் ஆகியவற்றில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கு பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்குகிறது. ஜியோ நிறுவனத்துடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாணவர்களின் பயன்பாட்டிற்காக, பல்கலைக்கழக வளாகம் முழுவதும் வைஃபை (Wi-Fi facility) வசதி விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, சீர்மிகு அறிவியல் மற்றும்

பல்கலைக்கழக ஆராய்ச்சி மேம்பாடு பகுதி–2 திட்டத்தின் கீழ் (PURSE), இப்பல்கலைக்கழகத்தில் உயர்ரக கருவிகளை கொண்ட கருவிகள் மையம் உருவாக்குவதற்கும் மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்கும் ரூ.**33.91** கோடி நிதியொப்பளிப்பு செய்துள்ளது. இத்துடன் அறிவியல் தொழில்நுட்பத்துறை (DST and DST FIST) ரூ.**1.91** கோடி மற்றும் ரூ.**4.85** கோடி உள்கட்டமைப்பு மற்றும் ஆராய்ச்சி பணிகளுக்கு நிதியுதவி அளித்துள்ளது. அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், உயிரி தொழில் நுட்பத்துறை, விண்வெளி ஆராய்ச்சித்துறை, நில அறிவியல் அமைச்சகம், அறிவியல் மற்றும் தொழில்நிறுவன ஆராய்ச்சி குழுமம் (CSIR), இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுமம் (ICMR) மற்றும் மத்திய அரசு பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO) ஆகியவை ரூ.**2.82** கோடி நிதியுதவி அளித்துள்ளது. மேலும் பல்கலைக்கழகம் வழங்கும் ஆலோசனை சேவைகளுக்காக தனியார் நிறுவனங்கள் மூலம் ரூ.**4.61** கோடி நிதியுதவி பெறப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனங்களின் மூலம்

பல்கலைக்கழகம் பெற்ற மொத்த நிதியுதவி ரூ.48.10 கோடி ஆகும்.

**4.2.8.** 10 வெளிநாட்டு கல்வி நிறுவனங்களுடனும் 9 தேசிய கல்வி நிறுவனங்களுடனும் 2017–18 ஆம் கல்வியாண்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்திய அறிவுசார் சொத்துரிமை காப்பு நிறுவனம், அண்ணாமலைப் பல்கலைக்கழக அறிவியல் புலத்தின் வேதியியல் துறையின் "CYCLOMETALATED IRIDIUM (III) COMPLEXES FOR LIGHT EMITTING DIODES" என்ற புதிய கண்டுபிடிப்பிற்கு 30.01.2018 அன்று காப்புரிமை வழங்கியுள்ளது. அயல்நாட்டு பல்கலைக்கழகங்களுடனான ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்கள் பரிமாற்றத் திட்டத்தின்கீழ், 6 ஆசிரியர்கள், தைவான், சீனா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஸ்வீடன் மற்றும் ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கும், 6 மாணவர்கள், தைவான், சீனா, ஸ்காட்லாண்டு மற்றும் ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளனர்.

## 4.3. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

**4.3.1.** மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் 1965 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு பின்னர் 1966 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 6ஆம் தேதி செயல்படத் தொடங்கியது. இப்பல்கலைக்கழகம் நாடு மற்றும் மாநிலத்தின் வளர்ச்சிக்கு உலகத் தரம் வாய்ந்த உயர்கல்வியை வழங்கி ஒரு முன்னணி கல்வி நிறுவனமாக திகழ்கிறது. தற்போது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் எல்லையானது வருவாய் மாவட்டங்களான மதுரை, திண்டுக்கல், தேனி மற்றும் விருதுநகர் ஆகியவற்றினை உள்ளடக்கியதாகும்.

**4.3.2.** மதுரை காமராசர் பல்கலைக்கழகமானது 20 புலங்களின் கீழ் 77 துறைகளைக் கொண்டு இயங்கி வருகிறது. இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 82 இணைவு பெற்ற கல்லூரிகள், 4 மாலை நேரக் கல்லூரிகள், 6 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், 11 அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகள் உள்ளன. இப்பல்கலைக்கழகத்தில் 166 ஆசிரியர்கள் பணிபுரிகின்றார்கள்.

**4.3.3.** பல்கலைக்கழகத்தில் உள்ள புலங்களின் கீழ் 1,074 முதுநிலை மாணவர்களும், உறுப்புக்கல்லூரிகளில் இளநிலை, முதுநிலை பாடப்பிரிவுகளில் 5,032 மாணவர்களும் பயின்று வருகின்றனர். சுமார் 5,359 மாணவர்கள் பல்கலைக்கழகத்திலும் அதன் இணைவுக் கல்லூரிகளிலும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளிலும் பதிவு செய்து ஆராய்ச்சியை மேற்கொண்டு வருகின்றனர். இணைவு கல்லூரிகளில் சுமார் ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் (1,50,000) மேற்பட்ட மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். மேலும் இப்பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்ககம் மூலம் 1.25 லட்சம் மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

**4.3.4.** மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 2018 ஆம் ஆண்டிற்கான தேசிய கல்வி நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பில் பல்கலைக்கழகங்களுக்கான பிரிவில் 54–வது இடத்தினையும், ஒட்டுமொத்த பிரிவில் 81–வது இடத்தினையும் பெற்றுள்ளது. ‘Swachh Bharath” திட்ட தரவரிசையில் அரசு கல்வி நிறுவனங்களுக்கான பிரிவில் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 2–வது இடத்தினையும் பெற்றுள்ளது.

**4.3.5.** **2017–18** ஆம் ஆண்டில் தேசிய உயர்கல்வி திட்ட (RUSA-PHASE-I) நிதியின் மூலம் **82** நவீன வகுப்பறைகள், மின்னாளுகை, வளாக கம்பியில்லா தகவல் பரிமாற்றம் (Wi-Fi) மின்புத்தகங்களுடன் கூடிய நவீன தானியங்கி நூலகம், பல்நோக்கு மருத்துவமனை, நவீன விடுதிகளில் சமையலறைகள், மழைநீர் சேகரிப்பு மற்றும் நவீன உடற்பயிற்சி மையம் ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**4.3.6.** **696** மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் **5.09** கோடி கல்வி உதவித் தொகையாகவும் ஆராய்ச்சி உதவித் தொகையாகவும் பல்கலைக்கழகம் வழங்கியுள்ளது. Post Matric கல்வி உதவித்தொகை மற்றும் முனைவர்பட்ட உதவித் தொகை ரூ.**54.40** லட்சத்தை மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் வழங்கியுள்ளது.

**4.3.7.** தொலைதூரக் கல்வி மூலமாக MBA காவல்துறை நிர்வாகம் மற்றும் M.Sc. குற்றவியல் நீதி & விக்டிமாலஜி பாடப்பிரிவுகள் ஆகிய இரு பாடப்பிரிவுகள் அத்துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கும் பொதுமக்களின் நலனுக்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கிராமப்புற மாணவர்கள் மத்திய

பணியாளர் தேர்வு குழுமம் (UPSC) நடத்தும் தேர்வுகளில் வெற்றி பெறும் வகையில் மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆறு உறுப்புக் கல்லூரிகளில் இந்திய ஆட்சிப்பணி பயிலுதல் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

**4.3.8.** தேசியத்தர மதிப்பீட்டுக் குழு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு மூன்றாவது சுழற்சியில் ‘ஏ’ தரமதிப்பீடு வழங்கியிருக்கிறது. இப்பல்கலைக்கழக உயிர்நுட்ப துறையின் ஆசிரியர் ஒருவர் அகில இந்திய மருந்து ஆராய்ச்சிக்கழகம் வழங்கும் **2016–2017** ஆம் ஆண்டிற்கான சர்வதேச பயோமெடிக்கல் ஆராய்ச்சியாளர் என்ற விருதினைப் பெற்றுள்ளார். மேலும் அதே துறையைச் சார்ந்த பேராசிரியர் ஒருவருக்கும் இந்தியப் பண்பாட்டு நுண்ணுயிரியலாளர்கள் அமைப்பின் மூலமாக ஆராய்ச்சியாளருக்கான உதவித்தொகை பெற்றுள்ளார். பல்கலைக்கழக மான்யக்குழுவின் நிதியுதவியுடன் உயிர் அறிவியல் இணையதள வள மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மையம், ஆராய்ச்சி நிபுணத்துவம், வசதிகள், நாட்டில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஆராய்ச்சி பயிற்சி வழங்குதல் ஆகிய சேவைகள் வழங்கியமைக்கு

பல்கலைக்கழக மான்ய குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் பாராட்டினை பெற்றுள்ளது.

**4.3.9.** 2017–18 ஆம் ஆண்டில் சுமார் ரூ.7.23 கோடி நிதியை UGC, DST, DBT,etc. ஆகிய நிறுவனங்கள் பல்கலைக்கழகத்திற்கு வழங்கியுள்ளது. இந்திய அரசின் அறிவியல் தொழில் நுட்பவியல் துறை, அறிவியல் மற்றும் ஆராய்ச்சி சிறப்புத் திறன் மேம்படுத்துதல் திட்டம் இரண்டின் கீழ் அறிவியல் உபகரணங்கள் கொள்முதல், பணியாளர்களை ஆராய்ச்சிக்கு ஈடுபடுத்துதல், ஆராய்ச்சிக்கான நுகர்பொருள் கொள்முதல், அறிவியல் தொடர்பான மாநாடுகளை பல்கலைக்கழகத்தில் நடத்துதல் ஆகியவற்றிற்கு ரூ.2.41 கோடி வழங்கியுள்ளது.

**4.3.10.** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திருமங்கலம், வேடசந்தூர் மற்றும் கோட்டூரில் உள்ள மதுரை காமராசர் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளுக்கான புதிய கட்டடங்களை திறந்து வைத்தார். இக்கட்டடங்கள் முறையே ரூ.7.25 கோடி, ரூ.7.25 கோடி மற்றும் ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடங்கள் மத்திய, மாநில மற்றும் பல்கலைக்கழக நிதியுதவியுடன் கட்டப்பட்டது.

**4.3.11.** மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 25 சர்வதேச மற்றும் தேசிய அளவில் உள்ள முதன்மை நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தியுள்ளது. 2017–18 ஆம் ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக்கழகமானது இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம், மலேசிய உயர்கல்வி அமைச்சகத்தினால் ஐந்து நட்சத்திர தர மதிப்பீடு வழங்கப்பட்டுள்ள பைனரி பல்கலைக்கழகம் மற்றும் குவைத் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு, ஆசிரியர் – மாணவர்கள் பரிமாற்றத் திட்டத்தின் வாயிலாக ஆராய்ச்சி மற்றும் கல்வி தொடர்பான செயல்பாடுகளை மேம்படுத்தியுள்ளது. பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்கள் 49 காப்புரிமைகளைப் பெற்றுள்ளனர்.

## 4.4. அண்ணா பல்கலைக்கழம்

**4.4.1.** இந்தியாவில் தனிப்பெரும் தொழில்நுட்ப பல்கலைக்கழகமாக திகழும் அண்ணா பல்கலைக்கழகம் நாட்டில் தொழில்நுட்பக் கல்வியில் தொடர்ந்து முன்னோடியாக செயல்பட்டு வருகிறது. இப்புகழ் பெற்ற பல்கலைக்கழகம் மதராஸில் (தற்போது சென்னை) இருந்த நான்கு பிரபலமான தொழில்நுட்ப நிறுவனங்களான, 1794 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கிண்டி பொறியியல் கல்லூரி, 1944 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அழகப்பா தொழில்நுட்ப கல்லூரி, 1949 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சென்னை தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் 1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட கட்டடக்கலை மற்றும் திட்டமிடுதல் நிறுவனம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4 ஆம் நாள் ஒருமைப் (Unitary type) பல்கலைக்கழகமாக நிறுவப்பட்டது. தற்போது மாநிலத்தில் உள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் தன் குடையின் கீழ் கொண்ட இணைவு வகை பல்கலைக்கழகமாக இப்பல்கலைக்கழகம் இருந்து வருகிறது. இப்பல்கலைக்கழகத்திற்கு சென்னையில் 4 வளாகங்கள் உள்ளன. திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில்

அமைந்த நான்கு மண்டல வளாகங்கள், **13** உறுப்புக் கல்லூரிகள் மற்றும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள அரசு, அரசு நிதி உதவி பெறும் மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகள் மற்றும் எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. தனிக்கல்லூரி நிறுவனங்கள் (Standalone Institutions) உட்பட **613** நிறுவனங்களுக்கு, இப்பல்கலைக்கழகம் இணைவு வழங்கியுள்ளது.

**4.4.2.** அண்ணா பல்கலைக்கழகமானது, பல்கலைக்கழக துறைகளில் **15,544** மாணாக்கர்களுக்கு **(**ஆண்கள் – **9,091,** பெண்கள் **– 6,453) 29** இளநிலை மற்றும் **78** முதுநிலை பாடப்பிரிவுகளை வழங்கி வருகிறது. இணைவு பெற்ற நிறுவனங்களில் **41** இளநிலை மற்றும் **57** முதுநிலை பாடப்பிரிவுகளை **5,72,466** மாணாக்கர்களுக்கும் **(**ஆண்கள் – **3,77,975** பெண்கள் – **1,94,480** மற்றும் **11** மூன்றாம் பாலினத்தவர்), வழங்கி வருகிறது. தொலைதூரக் கல்வியில் முதுநிலை பாடப்பிரிவில் **3,415** மாணாக்கர்கள் **(**ஆண்கள் – **1,730** பெண்கள் – **1,685)** பயின்று வருகின்றனர். அண்ணா பல்கலைக்கழகம் **14,946** முனைவர் பட்டம் பெறும் அறிஞர்களை **(**ஆண்கள் – **10,910,** பெண்கள் – **4,036)** கொண்டுள்ளதற்கு பெருமை கொள்கிறது.

**4.4.3.** தேசிய தர மதிப்பீட்டு குழுவால் (NAAC) நான்கு புள்ளிகளுக்கு **3.46** CGPA புள்ளிகளுடன் 'A' Grade அந்தஸ்து **24**, செப்டம்பர் **2014** முதல் ஐந்து வருடங்களுக்கு மீண்டும் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. உயிரி மருத்துவ பொறியியலுக்காக பல்கலைக்கழக மானியக்குழு அண்ணா பல்கலைக்கழகத்தினை சீர்மிகு பல்கலைக்கழகமாக அங்கீகரித்துள்ளதுடன் இத்துறைக்கென முதல் தவணையாக ரூ.**23.12** கோடியை **2016–17** ஆம் ஆண்டு வழங்கியுள்ளது. மேலும் BRICS நாடுகளுக்கான QS–இன் (Quacquarelli Symonds) பல்கலைக்கழக தர வரிசையின்படி **2018** ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகம் **85** ஆவது இடத்தினை பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களால் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் மேற்கோள் காட்டப்பட்ட அடிப்படையிலான தேசிய அளவிலான 'h' குறியீட்டில் அண்ணா பல்கலைக்கழகம் இரண்டாம் இடத்தில் உள்ளது. அண்ணா பல்கலைக்கழகம் **129** கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பெற பதிவு செய்தது. அவற்றில் **20** கண்டுபிடிப்புகளுக்கு தேசிய காப்புரிமையும் **7** கண்டுபிடிப்புகளுக்கு சர்வதேச காப்புரிமையும் பெற்றுள்ளது.

மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் – தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு (NIRF) 2018–இன் படி அண்ணா பல்கலைக்கழகம் கீழ்க்குறிப்பிட்டுள்ள தனிச்சிறப்புகளை பெற்றுள்ளது: 2018 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களின் தர வரிசைப்பட்டியலில் 4 ஆவது இடத்தினையும், கட்டடக் கலை பிரிவில் 6 ஆவது இடத்தினையும், பொறியியல் நிறுவனபிரிவில் 8 ஆவது இடத்தினையும், அனைத்து வகையான தரவரிசையில் 10 ஆவது இடத்தினையும் பெற்றுள்ளது. 2011–12 முதல் 2017–18 வரை அண்ணா பல்கலைக்கழகம் வெளிநாட்டு பல்கலைக்கழகம் மற்றும் நிறுவனங்களுடனும் 59 புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும், தேசிய அளவிலான நிறுவனங்கள் / தொழிற்சாலைகளுடன் 42 புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் செய்துள்ளது. 2011–12 முதல் 2017–18 வரையிலான 403 ஆராய்ச்சி திட்டப்பணிகளுக்காக மொத்தம் ரூ.125.08 கோடியும், 5,833 ஆலோசனை சேவைகளுக்காக மொத்தம் ரூ.151.86 கோடியும் மற்றும் 9,104 பரிசோதனை சேவைகளுக்காக மொத்தம் ரூ.3.67 கோடியும் வருமானம் பெறப்பட்டுள்ளது.

**4.4.4.** சிறப்பு உதவி திட்டங்களின் (SAP) கீழ் 5 ஆண்டுகளுக்கு நிதி உதவி பெற அண்ணா

பல்கலைக்கழகத்தின் **14** துறைகளுக்கு பல்கலைகக்கழக மான்யக் குழு அங்கீகாரம் அளித்து, ரூ.**16.98** கோடியை வழங்கியுள்ளது. மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையானது FIST திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கான மானியமாக **16** துறைகளுக்கு அங்கீகாரம் அளித்து, ரூ.**16.40** கோடி வழங்கியுள்ளது. மேலும் பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் அறிவியல் சிறப்பினை ஊக்குவித்தல் (Promotion of University Research and Scientifc Excellence - PURSE) திட்டத்தின் கீழ் மான்யம் பெற அண்ணா பல்கலைக்கழகத்திற்கு மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை (DST) அங்கீகாரம் அளித்துள்ளது. **2014** ஆம் ஆண்டு தொடங்கிய பகுதி II (Phase II) திட்டத்தின் கீழ் ரூ.**35.60** கோடியினை ஒப்பளிப்பு செய்து அவற்றில் ரூ.**8.60** கோடியை நவம்பர் **2017**–ல் விடுவித்துள்ளது.

**4.4.5.** மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள், சட்டசபை விதி **110**–இன் கீழ் அறிவித்த சிறப்பு திட்டமான தமிழக அரசின் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் (TANII), இயற்கை பேரிடர் காலங்களிலும்,

பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் ஆபத்துகளிலும் உதவும் விதமாக ஆளிலில்லா வான்வெளி வாகனம் (Unmanned Aerial Vehicle – UAV) சிறந்த முறையில் வடிவமைக்க மற்றும் அதனுடைய வளர்ச்சிக்காக, ரூ.20.00 கோடி அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டது.

**4.4.6.** அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் பல்கலைக்கழக நிதியிலிருந்து நெசவு சார்ந்த தொழில்நுட்பத் துறையில் கூடுதல் வகுப்பறை மற்றும் ஆய்வுக்கூடங்கள் ரூ.8.00 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 4.3.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**4.4.7.** முதல் முறையாக புது டில்லிக்கு வெளியே, மூன்றாவது இந்திய சர்வதேச அறிவியல் விழா (IISF) 13.10.2017 முதல் 16.10.2017 வரை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. அண்ணா பல்கலைக்கழகத்தின் புத்தாக்க முயற்சிகளையும் தொழில்நுட்ப திறன்களையும் காட்சிபடுத்த அரங்குகள் அமைக்கப்பட்டன. பாதுகாப்பு நோக்கங்களுக்காக மற்றும் பிற உபயோகத்திற்காக பயன்படுத்தப்படும் பலதரப்பட்ட ஆளில்லா வான்வெளி வாகனங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. தொடக்க மாநாடு,

புத்தாக்க மாநாடு, அறிவியல் திரைப்படவிழா மற்றும் பெண் விஞ்ஞானிகள் மற்றும் தொழில்முனைவோர் மாநாடு போன்ற பல முக்கியமான நிகழ்ச்சிகளை நடத்த அண்ணா பல்கலைக்கழகம் ஒத்துழைப்பு நல்கியது. இந்த விழாவில் 16.10.2017 அன்று இந்தியாவின் மாண்புமிகு துணை குடியரசு தலைவர் அவர்கள் நிறைவு நாள் விழாவில் பங்கேற்றார்.

**4.4.8.** "New India - We Resolve to Make" என்ற கண்காட்சி அண்ணா பல்கலைக்கழகத்தில் 27.08.2017 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இந்திய நாட்டின் மாண்புமிகு துணை குடியரசு தலைவர் அவர்கள் பங்கு பெற்று மாணாக்கர்களுடன் கலந்துரையாடினார். மேலும் இந்த நிகழ்ச்சி 'வெள்ளையனே வெளியேறு' (Quit India) இயக்கத்தின் 75 ஆம் ஆண்டு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக சுதந்திர இயக்கம் குறித்த கண்காட்சியுடன் நடத்தப்பட்டது.

**4.4.9.** அண்ணா பல்கலைக்கழகத்திலுள்ள கல்வி மற்றும் பல ஊடக ஆராய்ச்சி மையம் (EMMRC) நாட்டிலுள்ள 21 EMMRC நிறுவனங்களுள் e-TV திட்டத்தில் 742 காணொளி பதிவுகளையும் மற்றும் e-content

திட்டத்தில் **583** காணொளி இழை பதிவுகளையும் தயாரித்து சாதனை புரிந்துள்ளது. ரூ.**4.35** கோடி செலவில் கட்டப்பட்ட அண்ணா பல்கலைக்கழகத்தின் கட்டடக்கலை மற்றும் திட்டமிடல் நிறுவன வைர விழா கட்டடத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **02.02.2018** அன்று திறந்து வைத்தார்கள். அண்ணா பல்கலைக்கழகம் தமிழ்நாடு உயர் கல்வித் துறை சார்ந்த பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் சாதனைகளை முன்னிலைப்படுத்தி உருவாக்கிய அலங்கார ஊர்தி **26.01.2018**, குடியரசு தினத்தன்று நடத்தப்பட்ட பேரணியில் பங்கேற்று இரண்டாம் பரிசை வென்றது.

**4.4.10.** இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் தரைப்படை, கப்பற்படை மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு அமைப்பின் கண்காட்சியின் வரிசையில் **10** ஆவது இராணுவ கண்காட்சி **2018** (DEFEXPO India 2018), **2018** ஆம் ஆண்டு ஏப்ரல் **11** ஆம் தேதி முதல் **14** ஆம் தேதி வரை சென்னையில் நடைபெற்றது. இதில் அண்ணா பல்கலைக்கழகம் தமிழ்நாடு அரசின் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அதனுடைய நவீன கண்டுபிடிப்பான ஆளில்லா வான்வெளி வாகனம் சார்ந்த செயல்திறன்களை காட்சிப் பொருளாக அமைத்தது.

**4.4.11.** ரூ.1,000 கோடி அளவிலான நிதியுதவி பெறும் திட்டமான மத்திய அரசின் உயர்நிலைக் கல்வி நிறுவனம் என அங்கீகாரம் பெறுவதற்கான கருத்துருவினை அண்ணா பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மான்யக் குழுவிற்கு (UGC) சமர்ப்பித்துள்ளது. அதற்கான முதன்மை வல்லுனர் குழுவின் முன் திட்டம் பற்றிய முக்கிய விவரங்கள் **07.05.2018** அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி **2018–19** ஆம் கல்வியாண்டில் அண்ணா பல்கலைக்கழகத்தின் திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மூன்று மண்டல வளாகங்களில் ஒவ்வொரு மண்டலத்திலும் **4** இளநிலை பட்டபடிப்புகள், மொத்தம் **720** இடங்களுடன் தொடங்கப்படவுள்ளது.

## 4.5. பாரதியார் பல்கலைக்கழகம்

**4.5.1.** பாரதியார் பல்கலைக்கழகம், பிப்ரவரி 1982 ஆம் வருடம் நிறுவப்பட்டது. தொடக்கத்தில் 9 துறைகளுடன் துவங்கப்பட்ட இப்பல்கலைக்கழகமானது தற்போது 39 துறைகளை உள்ளடக்கி 13 பள்ளிகளைக் கொண்டுள்ளது. மேலும் இத்துறைகளின் மூலம் 54 முதுநிலை, மற்றும் ஆராய்ச்சி படிப்புகளும் (M.Phil. & Ph.D.) சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. முதுநிலையில் 2,616 மாணாக்கரும், 212 ஆய்வியல் நிறைஞர்களும், 252 முனைவர் பட்ட ஆய்வாளர்களும் 2017–18 ஆம் கல்வியாண்டில் பயின்று வருகின்றனர். மேலும் 26,750 மாணாக்கர்கள் தொலைதூரக் கல்வியின் மூலம் பல்வேறு படிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**4.5.2.** இப்பல்கலைக்கழகமானது கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி ஆகிய நான்கு மாவட்டங்களில் 121 இணைவு கல்லூரிகளைக் கொண்டுள்ளது. இவற்றுள், 11 அரசு கல்லூரிகளும், 5 உறுப்புக் கல்லூரிகளும் (வால்பறை, கூடலூர், மொடக்குறிச்சி (சிவகிரி), பொள்ளாச்சி மற்றும் தொண்டாமுத்தூர்), 16 அரசு உதவி பெறும் கல்லூரிகளும் மற்றும் 89 சுயநிதி கல்லூரிகளும் உள்ளடங்கும். பாரதியார்

பல்கலைக்கழகத்தில் **28** கல்லூரிகள் தன்னாட்சி நிலை பெற்றுள்ளன.

**4.5.3.** தற்போது இப்பல்கலைக்கழக துறைகள், உறுப்பு கல்லூரிகள் மற்றும் தொலைதூர கல்வி துறையில் இளநிலை, முதுநிலை, பட்டயமேற்படிப்பு, பட்டயப்படிப்பு, ஆராய்ச்சி படிப்புகளில் **1,84,766 (82,037** முறைசார் கல்வி மற்றும் **1,02,729** தொலைதூர கல்வி) மாணாக்கர்கள் பயின்று வருகிறார்கள்.

**4.5.4. 2017–2018** ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக மாணவர்களின் போஸ்ட் மெட்ரிக் ஸ்காலர்ஷிப் திட்டத்தில் **432** SC/ST & SCC மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இதற்கு இந்திய அரசால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.**59.53** இலட்சம் மேலும் தமிழ்நாடு அரசு போஸ்ட் மெட்ரிக் திட்டத்தில் **1,157** BC/MBC & DNC மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இதற்கு தமிழ் நாடு அரசால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.**65.19** இலட்சம் ஆகும்.

**4.5.5. 2017–2018** ஆம் ஆண்டில் பல்கலைக்கழகமானது பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் இதர அரசு நிறுவனங்களிடமிருந்து ரூ.**678.96** இலட்சம் நிதியுதவி பெற்றுள்ளது.

**4.5.6.** 2017–2018 ஆம் ஆண்டில் மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையால் நடத்தப்பட்ட தேசிய கல்வி நிறுவனங்கள் தரவரிசைப் பட்டியலில் கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்திற்கான பிரிவில் இந்திய அளவில் இப்பல்கலைக்கழகம், 13–வது இடம் பெற்றுள்ளது. ஒட்டுமொத்தப்பிரிவில் 20–வது இடத்தையும் பெற்றுள்ளது. கடந்த மூன்று வருடங்களாக தேசிய கல்வி நிறுவனங்கள் தரவரிசைப் பட்டியலில் தொடர்ந்து முதல் 30 இடத்திற்குள் இப்பல்கலைக்கழகம் உள்ளது.

**4.5.7.** மத்திய மனிதவள மேம்பாட்டு துறையின், டிஜிட்டல் நிதி கல்வியறிவு திட்டத்தினை (VISAKA) சிறப்பாக நடத்தி, நமது நாட்டில் உள்ள 4896 நிறுவனங்களில், தலை சிறந்த 20 நிறுவனங்களை தேர்ந்தெடுத்ததில் பாரதியார் பல்கலைக்கழகம் தேசிய அளவில் இரண்டாவது இடத்தினை பெற்றுள்ளது. பாரதியார் பல்கலைக்கழகத்தின் இந்த சாதனைக்கு, மார்ச் 8, 2017 அன்று, புது டெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் நடந்த விஷாகா தேசிய மாநாட்டில், மனித வள மேம்பாட்டு அமைச்சகம், பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு விருதினை வழங்கியது.

**4.5.8.** பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு ஆராய்ச்சி கட்டுரை வெளியீட்டுக்கான உயர்தரமான "h" குறியீடு (index) ஸ்கோபஸ் தரவு **45** புள்ளிகளுடன், **14824** மேற்கோள்கள் (Citations) மற்றும் **2532** வெளியீடுகளை (Publications) கொண்டு கடந்த ஐந்து ஆண்டுகளில் **(2013–18)** தமிழ்நாட்டில் உள்ள கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களில் முதன்மை இடம் பெற்றுள்ளது.

**4.5.9.** தேசிய தர நிர்ணய மற்றும் மதிப்பீட்டு குழுமத்தால் கடந்த மார்ச் **2016** அன்று மூன்றாவது முறையாக மறு மதிப்பீட்டின் மூலம் மீண்டும் 'A' (A-Grade) நிலை வழங்கப்பட்டுள்ளது.

## 4.6. பாரதிதாசன் பல்கலைக்கழகம்

**4.6.1.** புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பெயரில் **1982** ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பாரதிதாசன் பல்கலைக்கழகம், **1984** ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழுவின் 12B அங்கீகாரத்தைப் பெற்றது. செப்டம்பர் **2012**–இல் பல்கலைக்கழக மானியக் குழுவின் தேசியத் தர நிர்ணயக் குழுவின் மறு மதிப்பீட்டில் 'A' தரச் சான்றிதழ் பெற்ற இப்பல்கலைக்கழகத்திற்குத் திருச்சிராப்பள்ளி காஜாமலையில் இன்னொரு வளாகமும் உள்ளது. இப்பல்கலைக்கழகம், **21** புலங்கள், **38** துறைகள், **100**க்கும் மேற்பட்ட பாடத்திட்டங்களை நடத்தும் **26** வகையான சிறப்பு மையங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. **3** மாதிரிக் கல்லூரிகள், **6** உறுப்புக் கல்லூரிகள், **1** மாதிரி உறுப்புக் கல்லூரி, **1** முதுகலை விரிவாக்க மையம், **21** அரசுக் கல்லூரிகள், **19** அரசு உதவிபெறும் கல்லூரிகள், **82** தனியார் கல்லூரிகள் ஆகியவை பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்று இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றுள் **23** தன்னாட்சிக் கல்லூரிகளும் உள்ளன.

**4.6.2.** **2017–2018** ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தில் **88** இளங்கலை, **763** முதுகலை மாணாக்கர்களும், இணைவுப்

பெற்ற கல்லூரிகளில் **74,186** இளங்கலை, **17,797** முதுகலை மாணாக்கர்களும், மாதிரி மற்றும் உறுப்புக் கல்லூரிகளில் **5,043** இளங்கலை, **1,304** முதுகலை மாணாக்கர்களும், பெரம்பலூரில் உள்ள முதுகலை விரிவுமையத்தில் **83** மாணாக்கர்களும் சேர்ந்துள்ளனர். இவை தவிர பல்கலைக்கழகத்தின் இணைவு மற்றும் உறுப்புக் கல்லூரிகளில் ஆராய்ச்சி பாடப்பிரிவுகளில் **2,721** மாணாக்கர்களும் சேர்ந்துள்ளனர்.

**4.6.3.** பாரதிதாசன் பல்கலைக்கழகம் ‘புதியதோர் உலகம் செய்வோம்’ என்ற இலச்சினை மொழியை மையமிட்டு இயங்குகின்றது. அறிவுசார் உருவாக்கங்கள், பரவல்கள், தெளிவான குறிக்கோள்கள், நோக்கம் மற்றும் சமுதாயச் சேவை ஆகியன பல்கலைக்கழகத்தின் முக்கிய நோக்கங்களாகும். உலகளாவிய தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, பாடத்திட்டம், கற்பித்தல், கற்றல், மதிப்பிடுதல் மற்றும் ஆராய்ச்சிகளில் புதுமையான முறைகளை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றில் பல்கலைக்கழகம் சிறப்புக் கவனம் செலுத்துகிறது. உட்கட்டமைப்பு மற்றும் ஆராய்ச்சி வசதிகளை மேம்படுத்துவதன் பொருட்டு பல்கலைக்கழகம் பெருமுயற்சியினை மேற்கொண்டுவருகிறது.

**4.6.4.** கற்றல் – கற்பித்தல் செயல்முறையினைக் கற்பவரை மையப்படுத்தும் பொருட்டு வகுப்பறைகள் அறிவுசார் வகுப்பறைகளாக (Smart Class) மாற்றப்பட்டுள்ளன. பல்கலைக்கழக நூலகம், தகவல் தொடர்பியல்துறை தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப மேம்படுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத் துறைகள், உறுப்புக் கல்லூரிகள், மாதிரி மற்றும் இணைவுபெற்ற கல்லூரிகளுக்கிடையே நூலகங்கள் அறிவுசார் இணைவை ஏற்படுத்தும் பொருட்டுப் பல்கலைக்கழக இணையதளத்தோடு இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மின் நூல்கள், மின் ஆய்விதழ்கள், மின் ஆய்வேடுகள், ஆய்வுக்கு உதவும் மென்பொருட்கள் ஆகியவற்றை எளிய முறையில் பெற வகை செய்யப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத் தகவலியல் மையம் மேம்படுத்தப்பட்டு கம்பி வழி இணையம் மற்றும் கம்பியில்லா இணைய வசதி, விடுதி, வகுப்பறை, துறைகள் முதலியவற்றை மையமாகக் கொண்டு பல்கலைக்கழக வளாகம் முழுவதும் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளன.

**4.6.5.** 2017–2018 ஆம் கல்வியாண்டில் பல்வேறு துறைகள் UGC - SAP மற்றும் DST - FIST உதவிகளைப் பெற்றன. மேலும் UGC, CSIR, DST, DBT, DAE, DRDO,

BRNS, ICSSR, ICMR உள்ளடங்கிய நிதி முகமைகளிலிருந்து **72** வகையான பெருந்திட்ட ஆய்வுகளுக்கு ரூ.**6.34** கோடி நிதி உதவி கிடைத்துள்ளது. தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் வழிகாட்டுதலின் மூலம் மாணவர்களுக்கிடையே உலகளவில் போட்டியிடும் திறமையை வளர்க்கும் பொருட்டு, **10** வெவ்வேறு வகையான துறைகளில் உலகளாவிய பாடத்திட்டக் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவற்றின் பாடத்திட்டங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**4.6.6.** பல்கலைக்கழகம் மற்றும் உறுப்பு மாதிரிக் கல்லூரிகளின் முழுமையான வளர்ச்சிக்காகத் தேசிய உயர்கல்வித் திட்டத்தின் RUSA (Phase I) கீழ் மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் வழங்கப்பட்ட நிதி உதவிகளின் விவரம் பின்வருமாறு :

பல்கலைக்கழக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியாக ரூ.**20.00** கோடியும், வேதாரண்யம், அறந்தாங்கி, திருத்துறைப்பூண்டி மற்றும் வேப்பூர் ஆகிய ஊர்களிலுள்ள பாரதிதாசன் பல்கலைக்கழக மாதிரிக் கல்லூரிகளுக்கு ரூ.**8.00** கோடியும் மற்றும் “நிலையான ஆற்றல் தொழில்நுட்பங்கள்” எனும் ஒருங்கிணைந்த ஆய்வுத் திட்டம்

புதுமை மற்றும் தரமான அடிப்படையில் அமைய ரூ.1.50 கோடியும் வழங்கியுள்ளது.

**4.6.7.** இந்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத்துறை பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் அறிவியல் மேன்மைக்கான வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (PURSE), பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு ரூ.17.35 கோடி நிதி உதவியினைச் செய்துள்ளது. இதன் மூலம் பல்கலைக்கழகம் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியில் தொடர்ந்து பாராட்டும்படியான சாதனைகளைச் செய்யும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்நிதியுதவி இரண்டாம் கட்டமாக நான்கு ஆண்டுகளுக்கு வழங்கப்பட இருக்கிறது. முதல் கட்டமாக ரூ.6.285 கோடி (சாதனங்களுக்கு ரூ.5.195 கோடியும், எதிர்நிகழ் நிதி (Contingency), ஆய்வு உதவி மற்றும் பயணப்படி ஆகியவற்றிற்கு ரூ.1.09 கோடியும்) பல்கலைக்கழகத்திற்கு விடுவித்துள்ளது.

**4.6.8.** வணிக மேம்பாட்டு மையம் மூன்று வகையான நிறுவனங்கள்/குழுக்கள்/ மருத்துவமனைகளுடன் இணைந்து சான்றிதழ், பட்டயம் மற்றும் முதுநிலைப் பாடத்திட்டங்களைக் கொடுக்கும் பொருட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டிருக்கிறது. திறன் மேம்பாட்டுத்

தொழில்முனைவோர் நிறுவனமானது ஆறு நிறுவனங்களுடன் திறன் மேம்பாட்டு நிகழ்வுகளை நடத்தக் கையொப்பமிட்டிருக்கிறது.

**4.6.9.** மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் மிக முக்கிய அறிவு செறிந்த வலைப்பின்னலுக்கான உலகளாவிய தொடக்க முயற்சி (GIAN) மூலம் உலகளாவிய அறிவிற் சிறந்த அறிவியல் வல்லுநர்கள் மற்றும் தொழில் முனைவோர் கூட்டுக் குழுவின் உறுப்பினர்கள் இந்திய உயர்கல்வி நிறுவனங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வழிவகையுள்ளது. தமிழகப் பல்கலைக்கழகங்களுள் அயல்நாட்டுப் பேராசிரியர்களை அழைத்துப் பல்வேறு நிகழ்வுகளை நடத்தத் திட்டமிடப்பட்ட நான்கு பல்கலைக்கழகங்களுள் பாரதிதாசன் பல்கலைக்கழகமும் ஒன்று. முதல் கட்டமாக 2017 ஆம் ஆண்டு இரண்டு வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக மூன்று வகுப்புகள் நடத்தப்பட்டு மேலும் நான்கு வகுப்புகளை நடத்த தேர்ந்த அயல்நாட்டுப் பேராசிரியர்கள் பல்கலைக்கழகத்திற்கு அழைக்கப்பட உள்ளனர். மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் இவ்வகுப்புகளை ஒரு வாரகால இடைவெளியில் நடத்த

ஒவ்வொரு பாடத்திற்கும் **8000** அமெரிக்க டாலர்கள் வீதம் ஒதுக்கியுள்ளது.

**4.6.10.** திறன் மேம்பாட்டுப் படிப்பிற்காக IECD–யுடன் இணைக்கப்பட்ட நிறுவனங்கள், பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகள் மற்றும் IECD வளாகத்தின் மூலம் **1,01,219** மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். பாரதிதாசன் பல்கலைக்கழக, தொழில் மற்றும் ஆலோசனை மையம், **2017** ஆம் ஆண்டு மே மாதம் **27** இல் ஒரு வேலை வாய்ப்பு முகாமினை நடத்தியது. மொத்தம் **2,415** பேர் அம்முகாமில் பங்கேற்றனர். அவர்களில் **681** பேருக்கு நேர்முகத் தேர்வு முடிந்தவுடனே பணி ஆணைக் கடிதம் வழங்கப்பட்டது. மீதமுள்ள **1,135** பேரும் அந்தந்த நிறுவன அலுவலகங்களில் அடுத்தகட்ட நேர்முகத் தேர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த வேலை வாய்ப்பு முகாமின் மூலமாக மொத்தம் **1,816** பேர் நேரடியாகப் பயனடைந்துள்ளனர்.

## 4.7. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

**4.7.1.** அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் 24, மார்ச் 1984–ல் தமிழக அரசால், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்ற பேரவை சிறப்பு சட்டம் 15–ன் படி தோற்றுவிக்கப்பட்டது. முன்னாள் தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களால் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற அன்னை தெரசாவின் பெயரில், அவரது முன்னிலையில் தொடங்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் குறிக்கோள் "சமநிலையை நோக்கி'' என்பது உயர்கல்வியின் வழி மகளிருக்கு அதிகாரம் அளிப்பது ஆகும். பல்கலைக்கழகத்தில் பதினெட்டு துறைகளும், மதுரை, சென்னை, கோவை ஆகிய இடங்களில் மூன்று ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையங்களும் உள்ளன. இப்பல்கலைக்கழகத்தின் கீழ் திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள பதினொரு இணைவு கல்லூரிகளில், ளள2 அரசு கல்லூரிகளும், 2 அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகளும், 2 உறுப்புக் கல்லூரிகளும் மற்றும் 5 சுயநிதிக் கல்லூரிகளும் அடங்கும். புதுதில்லி, தொலைநிலைக் கல்விக் குழுவிடம் அங்கீகாரம் பெறப்பட்டு தொலைநிலைக் கல்வி இயக்ககம் வழியாக 16 பாடப்பிரிவுகள் நடத்தப்படுகின்றன.

ஆசிரியர்கள் **55** பேரும், ஆசிரியரல்லாத பணியாளர்கள் **74** பேரும் பணிபுரிகின்றனர். மொத்தமாக **24,586** மாணவிகள் பல்கலைக்கழக துறைகள், உறுப்புக் கல்லூரிகள், இணைவு கல்லூரிகளில் நேரடியாகவும், தொலைநிலைக் கல்வி வாயிலாகவும் பயில்கின்றனர்.

**4.7.2.** தமிழகத்தில் **2016–2018** வரை மாநிலத் தகுதித் தேர்வை நடத்தும் முகமை நிறுவனமாக இப்பல்கலைக்கழகம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மூன்று முறை மாநில தகுதித் தேர்வுகள் **21.02.2016, 23.04.2017** மற்றும் **04.03.2018** ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டுள்ளது. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தை முகமை நிறுவனமாக NUEPA அமைப்பு (National University for Educational Planning and Admission) அங்கீகரித்ததின்படி, பல்கலைக்கழகம், தமிழக மாவட்டங்களில் உள்ள பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு திறன் கட்டமைப்பு பயிற்சி நல்கியது. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் மதுரை ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையத்தில் ரூ.**1.5** கோடி செலவில் கட்டப்பட்ட பல்நோக்கு அரங்கத்தை **05.09.2017** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். கொடைக்கானலில் உள்ள உள்விளையாட்டு அரங்கம் மற்றும்

சென்னையில் உள்ள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையத்தின் முதல் தளம் ஆகியவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **02.02.2018** அன்று திறந்து வைக்கப்பட்டது. பல்கலைக்கழகமும் தேசிய கல்வி வைப்பு நிதி நிறுவனமும் இணைந்து டிஜிட்டல் முன்முயற்சியாக **05.02.2018** அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. தாட்கோ நிறுவனத்தின் நிதியுதவியுடன் பிபிஓ கால் சென்டர், டாலி மென்பொருள், ஹோம்கேர் மற்றும் அனிமேஷன் ஆகிய வகுப்புகள் பல்கலைக்கழகத்தின் சென்னை விரிவாக்க மையத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசு திண்டுக்கல் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக பல்கலைக்கழக மாணவிகளுக்கு இந்திய குடிமைப் பணிகள், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், பணியாளர் தேர்வாணையம் மற்றும் வங்கிகளால் நடத்தப்படும் போட்டி தேர்வுகளுக்கு அக்டோபர் **2017** முதல் மார்ச் **2018** வரை இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தியுள்ளது. இதன் மூலம் **200** மாணவிகள் பயனடைந்துள்ளனர். ஸ்வச் பாரத் அபியான் திட்டத்தின்படி பெருமளவில் தூய்மை திட்டம், பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் மாணவிகளால் மேற்கொள்ளப்பட்டு, பல்கலைக்கழகத்திலிருந்து வனத்துறை வரையிலும்

விரிவாக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகள் விட்டுச் செல்லும் குப்பைகள்யாவும் அகற்றப்பட்டன.

**4.7.3. 2017–2018** ஆம் கல்வியாண்டில் முதுகலை பொது நிர்வாகம், இளங்கலை நூலக அறிவியல் மற்றும் முதுகலை நூலக அறிவியல் ஆகிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மொத்தம் **1,043** மாணவிகள் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

**4.7.4. 2011–2017**ஆம் ஆண்டுகளில் **670** ஆராய்ச்சி மாணவிகள் முனைவர் பட்டத்தை பெற்றனர். நவீன உபகரணங்களான Powder XRD, FTIR, GCMS, UV-Vis, Fluorescence Spectrometer, HPLC, TG-DTA-DSC and Photoreactor போன்றவற்றைக் கொண்டு ஆலோசனைச் சேவை வழங்கப்படுகிறது. மாணவிகள் தேசிய அளவிலான கபடி போட்டியில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்று **24** பதக்கங்கள் வென்றனர். அகில இந்திய மகளிர் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகள போட்டியில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் இரண்டாம் இடம் பெற்று மாணவிகள் **26** பதக்கங்கள் பெற்றுள்ளனர். மாவட்ட / மாநில / கல்லூரிகளுக்கு

இடையிலான / பல்கலைக்கழகங்களுக்கிடையிலான / தேசிய அளவிலான போட்டிகளில் 302 கோப்பைகள், பதக்கங்கள், கேடயங்கள், முதல்வர் கோப்பை ஆகியவற்றினை மாணவிகள் வென்றுள்ளனர். 5 மாணவிகள் இரயில்வே துறையிலும், 37 மாணவிகள் காவல் துறையிலும் பணியமர்த்தப்பட்டு உள்ளனர்.

**4.7.5.** D.Litt. பட்டம் 2017, உயர்கல்விக்கான மகளிர் வாழ்நாள் சாதனையாளர் விருது 2017, இயற்பியலில் சிறந்த பெண் இணைப்பேராசிரியர் விருது 2017, சமூக அறிவியலில் சிறந்த பெண் கல்வியாளர் 2017, கணினி அறிவியலில் சிறந்த அறிவியலாளர் விருது 2017, சிறந்த பெண் அறிவியலாளர் விருது 2017, சிறந்த அறிவியலாளர் விருது 2016, இந்தியாவின் மகிமை விருது 2016, ராஷ்ட்ரிய கௌரவ் விருது 2016, ஆதார்ஷ் வித்ய சரஸ்வதி ராஷ்ட்ரிய புரஸ்கார் விருது 2016, டாக்டர் இராதாகிருஷ்ணன் திறன் விருது 2016, பல்கலைக்கழக மானியக் குழுவின் இராமன் முதுகலை முனைவர் உதவித்தொகை 2016, டாக்டர் அப்துல்கலாம் தேசிய வாழ்நாள் சாதனையாளர் விருது 2015, கல்வி மற்றும் ஆராய்ச்சி திறன் விருது 2015, சிறந்த கல்வியாளர் விருது 2013, தமிழ்நாடு இளம் அறிவியலாளர் விருது 2012

ஆகிய விருதுகளை இப்பல்கலைக்கழக ஆசிரிய பெருமக்கள் பெற்றுள்ளனர்.

**4.7.6.** ICSSR, UGC, DST-SERB, TNSCST மற்றும் INFLIBNET போன்ற நிறுவனங்களால் ரூ.1.71 கோடி நிதி வழங்கப்பட்டு திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

**4.7.7.** 2017–2018 ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழகம் மொத்தமாக நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை இந்திய மற்றும் வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களுடன் கையெழுத்திட்டுள்ளது. மேலும் ஒரு உரிமைக்காப்பு மற்றும் புவியியல் குறிகாட்டியானது உயிரி தொழில்நுட்பவியல் துறையால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

**4.7.8.** இயற்பியல் துறை, இணைப்பேராசிரியர் முனைவர். எம்.உமாதேவி, அவர்கள் Post doctoral fellowship (Raman Fellowship) மூலம் ஆராய்ச்சிக்காக அமெரிக்காவில் உள்ள சான் பிரான்சிஸ்கோவிற்கு செப்டம்பர் 2016 முதல் செப்டம்பர் 2017 வரை சென்று வந்துள்ளார். முனைவர் பட்ட உயிரித் தொழில்நுட்பத் துறை ஆராய்ச்சி மாணவி செல்வி. சி.மகேஸ்வரி ஈ.எம்.பி.ஓ உதவித்தொகை

மூலம் ஆராய்ச்சிக்காக மால்டா தீவிற்கு (ஐரோப்பா) **22.01.2018** முதல் **22.04.2018** வரை சென்று வந்துள்ளார்.

## 4.8. அழகப்பா பல்கலைக்கழகம்

**4.8.1.** 1985 ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் நாள் அன்று தமிழ்நாடு அரசின் சிறப்பு சட்டத்தின் மூலம் அழகப்பா பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது. அழகப்பா பல்கலைக்கழகத்தில் 39 துறைகள் உள்ளடக்கிய 5 புலங்கள், 10 இயக்குநரகங்கள்/மையங்கள் மற்றும் 2 கல்வியியல் / உடற் கல்வியியல் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் உள்ளன. மேலும் 35 இணைவு பெற்ற கல்லூரிகளும், 6 மாலை நேரக் கல்லூரிகளும், பரமக்குடியில் ஒரு பல்கலைக்கழக மாதிரி உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன. பல்கலைக்கழகத்தின் எல்லையானது இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களை கொண்டதாகும்.

**4.8.2.** பல்கலைக்கழகத் துறைகளில் 187 பாடப்பிரிவுகளும், இணைவு பெற்ற கல்லூரிகளில் 117 பாடப்பிரிவுகளும், தொலைதூரக் கல்வியில் 66 பாடப்பிரிவுகளும் மற்றும் இணைப்புக் கல்வித்திட்டத்தின் வாயிலாக 94 பாடப்பிரிவுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. தரமான கல்வியினை உறுதி செய்யும் வகையில் பல்கலைக்கழகத் துறைகள் மற்றும் இணைவு பெற்ற

கல்லூரிகளின் அனைத்துப் பாடப்பிரிவுகளிலும் தொடர் உள் மதிப்பீடு முறையும் (CIA), விருப்பத்தின் அடிப்படையிலான பாடத்தெரிவு முறையும் (CBCS) நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பல்கலைக்கழகத் துறைகளில் 5,638 மாணவர்களும், பல்கலைக்கழகத்தின் இணைவு மற்றும் உறுப்புக் கல்லூரிகளில் 45,028 மாணவர்களும் தொலைதூரக்கல்வி மூலமாக 54,270 மாணவர்களும் என சுமார் 1.05 இலட்சம் மாணவர்கள் இப்பல்கலைக்கழகத்தில் பயின்று வருகிறார்கள்.

**4.8.3.** D.Litt. மற்றும் D.Sc. முதுநிலை முனைவர் பட்டப்படிப்புகளை அழகப்பா பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது. வெளிநாட்டு வாழ் ஆய்வு மாணவர்கள் அழகப்பா பல்கலைக்கழகத்தில் ஆய்வு மேற்கொள்ளும் வகையில் முனைவர் பட்ட மேலாய்வு மற்றும் முனைவர் பட்டப்படிப்புகளுக்கான ஆய்வு நிதியுதவி வழங்கப்படுகிறது. பல்கலைக்கழகத்தின் அறிவியல் வளாகத்தில் அனைவருக்கும் பயன்படும் வகையில் உயர்நிலை ஆய்வு உபகரணங்களுடன் கூடிய (ரூ.16.00 கோடி) “பல்கலைக்கழக அறிவியல் ஆய்வு உபகரணங்கள் மையம்” (USIC) தொடங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின்

மையநூலகத்தில் மாணவர்கள் துரிதமாக நூல்களின் இடத்தை அறிந்து பெற்றுக்கொள்ள வசதியாக, முழுமையான தானியங்கி முறையிலான RFID கண்காணிப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**4.8.4.** ஆராய்ச்சி மாணவர்களுக்கான தகைமை நிதி, ஆராய்ச்சி திட்டங்கள் மற்றும் துறைகளுக்கிடையான ஆராய்ச்சித் திட்ட நிதியை கூடுதலாக வழங்குவதற்காக, இப்பல்கலைக்கழகத்தின் நிதித்தொகுப்பு ரூ.7.00 கோடியிலிருந்து ரூ.10.00 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசிய உயர்கல்வித் திட்டம் பகுதி ஒன்றின் (RUSA Phase–I) கீழ் பெறப்பட்ட ரூ.20.00 கோடி நிதி உதவியுடன் இப்பல்கலைக்கழகத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டும், மேம்படுத்தப்பட்டும் உள்ளன.

**4.8.5.** 2017–18 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களான (அ) ரூ.210.00 இலட்சம் மதிப்பீட்டில் பல்கலைக்கழக திறன் வங்கி நிறுவுவதற்கும் (ஆ) ரூ.125.00 இலட்சம் மதிப்பீட்டில் நிலையான சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் கழிவு

மறுசுழற்சி தொழில்நுட்பம் உருவாக்குவதற்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**4.8.6.** பல்கலைக்கழகத்தால் 39 கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டு, உடல் நல விழிப்புணர்வு முகாம், நீர்த்தொட்டியை சுத்தப்படுத்துதல் மற்றும் வண்ணப்படுத்துதல், கிராமத்தில் வேலைவாய்ப்பு இல்லாதவர்கள் பற்றிய கணக்கெடுப்பு, வாழ்வியல் திறன் கல்வி திட்டம், முழு சுகாதார விழிப்புணர்வு பரப்புரை, வெளியிடங்களில் மலம் கழித்தல் இல்லாத கிராமங்கள் ஆகிய சமூக சேவைகள் வழங்கப்பட்டன. ஒரு இலட்சம் செடிகள் நடுதல் என்ற இலக்குடன், ‘‘ஒரு மாணவன் ஒரு மரம் நடுதல் திட்டம்’’ நடைமுறைப்படுத்தப்பட்டது. இப்பல்கலைக்கழக வளாகத்தை தூய்மை மற்றும் பசுமை வளாகமாக மாற்றும் நோக்கத்துடன் மழைநீர் சேகரிப்பு திறனை மேம்படுத்துவதற்கு தேவையான வழிந்தோடும் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் மாணவர்களின் பங்களிப்பைக் கொண்டு பல்கலைக்கழக வளாகத்தில் ஐந்து ஏக்கர் நிலத்தில் அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் பூங்காவும் (தாவரவியல் பூங்கா), கல்வியியல் வளாகத்தில் முகப்பு நுழைவாயில் (Arch) ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

மாணவர்களின் வேலை வாய்ப்புத்திறனை மேம்படுத்தவும், தேசிய / மாநில ஆசிரியர் தகுதி தேர்வுகள், குடிமையியல் தேர்வுகள் மற்றும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு மாணவர்களுக்கு உரிய பயிற்சி அளிப்பதற்காகவும் “அழகப்பா பல்கலைக்கழக பயிலுதல் குழு” உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் 263 நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 9,442 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு தகுந்த பயிற்சி அளிப்பதற்கும், அவர்களின் பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காகவும், அழகப்பா பல்கலைக்கழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான “வளப் பள்ளி” (Resource School) தொடங்கப்பட்டுள்ளது.

**4.8.7.** 2017–18 ஆம் ஆண்டில் அழகப்பா திறன் மேம்பாட்டு நிறுவனத்தில் M.Voc. மென்பொருள் வளர்ச்சி மற்றும் பேஷன் டிசைன் பாடத்திட்டங்களும், இணைவுக் கல்லூரிகளில் M.Phil. (உயிரி வேதியியல்) பாடத்திட்டமும், இணைவுப்பாட திட்டத்தில் ஒரு முதுகலை (Industry Integrated MBA) பாடத் திட்டமும், 10 பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**4.8.8.** அழகப்பா பல்கலைக்கழகம், தேசிய தர நிர்ணயக் குழுமத்தின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் A+ தர மதிப்பீட்டினை **3.64/4** தரப்புள்ளிகளுடன் பெற்று தமிழகத்தில் மாநில அரசுப் பல்கலைக்கழகங்களில் முதன்மையாக விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். அழகப்பா பல்கலைக்கழகம் தேசியத் தரமதிப்பீட்டில் A+ தகுதி **(3.50**க்கு மேல்**)** பெற்றுள்ளமையால், பல்கலைக்கழக மான்யக்குழு மனிதவள மேம்பாடு அமைச்சகம் – பல்கலைக்கழக மானியக் குழு (பல்கலைக்கழகங்களை தரம் பிரித்து நிலை தன்னாட்சி வழங்கல்) சட்டம் **2018–**இன் படி, அழகப்பா பல்கலைக்கழகத்தினை தரம் **1–**இல் வகைப்படுத்தியுள்ளது. **2018** ஆம் ஆண்டிற்கான மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசிய கல்வி நிறுவனங்கள் தரவரிசை பட்டியலில் (NIRF 2018) பல்கலைக்கழகங்களுக்கான பிரிவில் அழகப்பா பல்கலைக்கழகம் **27** ஆம் இடத்தினைப் பெற்றுள்ளது. “சிறப்புறு பல்கலைக்கழக” தகுதியினைப் பெறுவதற்கு அழகப்பா பல்கலைக்கழகம் இரண்டாம் சுற்று மதிப்பீட்டில் தகுதி பெற்றுள்ளது. மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தூய்மை பாரதம் தரப் பட்டியலில் அரசு கல்வி நிறுவனங்கள் பிரிவில் அழகப்பா பல்கலைக்கழகம் மூன்றாம்

இடத்தினைப் பெற்றுள்ளது. அழகப்பா பல்கலைக்கழகம் தரமான கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு ISO 9001 : 2015 சான்றிதழையும் பெற்றுள்ளது. மேலும், புது டில்லி, தேசிய தூய்மை மற்றும் கல்வி ஆராய்ச்சி நிறுவனம் (NICER), அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு ‘‘தூய்மை மற்றும் பசுமை வளாக விருது’’ (2016) மற்றும் உலகச் சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதார விருதினை (2017) வழங்கி சிறப்பித்துள்ளது. இந்திய பார்வையற்றோர் கழகத்தின் IAB Blind Empowerment Champions 2018 வெள்ளிப் பதக்கத்தினை அழகப்பா பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

**4.8.9.** கடந்த ஏழு ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தில் ஆற்றல் அறிவியல், வரலாறு, தாவரவியல், நுண் உயிரியியல், சிறப்புக் கல்வியியல் மற்றும் மறுவாழ்வு அறிவியல், உணவக அறிவியல் மற்றும் விடுதி மேலாண்மை, நுண்கலைகள், திறன் மேம்பாடு, சமூகப்பணியியல், கணினி அறிவியல், பன்னாட்டு வணிகம், இடப்பெயர்வு மேலாண்மை, மண்ணியல், கணினியியல் இடப்பெயர்வு மற்றும் உயிரி மருத்துவ அறிவியல் ஆகிய 15 புதிய துறைகள் துவங்கப்பட்டுள்ள இதே காலத்தில் பல்கலைக்கழக மானியக் குழுவின் புதுமைப் பாடத் திட்டத்தின்கீழ் இளநிலை கல்வியியல் (‘‘சிறப்புக் கல்வி’’)

[B.Ed (Special Education)] முதுகலை வணிக நிர்வாகம் (இடப்பெயர்வு மேலாண்மை) [“MBA (Logistics Management)”], பட்டயப்படிப்பில் “மதிப்புக்கூட்டு வரி மற்றும் சேவை வரி” (PG Diploma in VAT and Service Tax), “ஸ்டெக்சுரல் பார்மோகோஜெனாமிக்ஸ்” (PG Diploma in Structural Pharmacogenomics) படிப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

**4.8.10.** பல்கலைக்கழக வளாகத்தில் டாக்டர் ஆர்எம்.அழகப்பச் செட்டியார் அவர்களின் அளப்பரிய மற்றும் மதிப்பிடமுடியா கல்விச் சேவையினைப் பாராட்டும் வகையில் பத்மபூஷன் டாக்டர் ஆர்எம்.அழகப்பச் செட்டியார் அருங்காட்சியகம் **ரூ.79.00** இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்ப் பண்பாட்டினை மேம்படுத்தவும், தமிழ்க் கலாச்சாரத்தினை வளர்த்திடவும் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பண்பாட்டு மையம் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்மொழி மற்றும் தமிழ் மக்களின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டினைப் பறைசாற்றும் வகையிலான புராதன பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு பாதுகாப்பதற்கு **ரூ.50.00** இலட்சம் மதிப்பீட்டில் தமிழ் கலாச்சார அருங்காட்சியகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**4.8.11.** கடந்த 5 ஆண்டுகளில், பல்கலைக்கழகத்தின் “h” index என்பது 22 லிருந்து 62 ஆக உயர்ந்துள்ளது. அழகப்பா பல்கலைக்கழகத்தின் உயிரித் தொழில்நுட்பத்துறை, தொழிலக வேதியியல் துறை, இயற்பியல் துறை மற்றும் கடலியல் துறை பேராசிரியர்களின் மூலமாக 42 காப்புரிமைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் பதினொன்று காப்புரிமைகள் வெளியிடப்பட்டுள்ளன. யோகா கல்விக்கென ரூ.60 இலட்சம் செலவில் தனிக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

**4.8.12.** மாற்றுத்திறனாளிகள் மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கு பெறுவதற்கு பயிற்சி அளிப்பதற்காக ரூ.65.00 இலட்சம் செலவில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு மையம் துவங்கப்பட்டுள்ளது. இம்மையத்திலிருந்து பயிற்சி பெற்ற 20 வீரர்கள் தேசிய அளவிலான போட்டிகளில் 74 தங்கம், 53 வெள்ளி, 48 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளனர். மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு மைய மாணவர் திரு. ஹ.செல்வராஜ் கனடாவில் நடைபெற்ற 7–வது உலக குள்ளர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று ஈட்டி எறிதல் போட்டியில் (26.54 மீட்டர்) தங்கப் பதக்கம் வென்று, இப்பல்கலைக்கழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். இவருக்கு

தமிழக அரசு சார்பில் ரூ.5.00 இலட்சமும், பல்கலைக்கழகத்தின் சார்பில் ரூ.7.00 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

**4.8.13.** பல்கலைக்கழகத்தின் ஆறு துறைகள் பல்கலைக்கழக மானியக்குழுமத்தின் சிறப்பு நிதியுதவி பெறும் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்றுள்ளன. ஐந்து துறைகள் பல்கலைக்கழக மானியக் குழுமத்தின் அறிவியல் தொழில்நுட்ப மேம்பாடு வசதிகள் நிதியுதவித் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்றுள்ளன. கணிதத் துறையும் கடலியல் மற்றும் கடலோரவியல் துறையும் பல்கலைக்கழக மானியக்குழுமத்தின் சிறப்பு நிதியுதவி பெறும் திட்டத்தின் அங்கீகாரம் பெற்று முறையே ரூ. 62.00 இலட்சம் மற்றும் ரூ. 87.97 இலட்சம் நிதியுதவி பெற்றுள்ளன. பல்கலைக்கழகத்தின் எட்டுப் ஆசிரியர்கள் பல்கலைக்கழக மானியக்குழுவின் ஆய்விற்கான விருதினைப் பெற்றுள்ளனர் (இதன் மூலம் அவர்களின் சம்பளத் தொகையான ரூ.179.00 இலட்சத்தினை பல்கலைக்கழக மானியக் குழு வழங்குகிறது). உயிரித் தொழில்நுட்பத் துறைக்கு ITC, கொல்கத்தா நிறுவனம் மற்றும் டேப்லெட் (இந்தியா) லிமிடெட், சென்னை மற்றும் ICRISAT, ஐதராபாத் ஆலோசனைத் திட்ட ஆய்விற்காக

ரூ.155.13 இலட்சங்கள் வழங்கியுள்ளன. இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் அறிவியற் செம்மையினை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் (PURSE), அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு (2016–19) ரூ.7.00 கோடி அனுமதித்துள்ளது.

**4.8.14.** இதுவரையில் 42 பன்னாட்டு மற்றும் 36 தேசிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அழகப்பா பல்கலைக்கழகம், மலேசியா, ஓமன், ஆஸ்திரேலியா, தென் கொரியா, சீனா, தைவான், ஜப்பான், மெக்ஸிகோ மற்றும் இத்தாலி நாடுகளில் உள்ள 13 பன்னாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆய்வு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துள்ளது. மேலும், 2017–18 ஆம் ஆண்டில் அழகப்பா பல்கலைக்கழகம் 23 தேசிய பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளன. 2017–18 ஆம் ஆண்டில் 24 பேராசிரியர்களும், 12 ஆராய்ச்சி மாணவர்களும் பன்னாட்டுக் கருத்தரங்குகளில் பங்கு கொள்வதற்கும் ஒருங்கிணைந்த ஆராய்ச்சி மேற்கொள்வதற்கும் ஸ்வீடன், இஸ்ரேல், தாய்லாந்து, ஓமன், தென்கொரியா, ஸ்பெயின் மற்றும்

மலேசியா நாடுகளுக்குச் சென்றுள்ளனர். அமெரிக்கா, பிரிட்டன், மலேசியா, சுவிட்சர்லாந்து, ஸ்வீடன் மற்றும் சீனா நாடுகளில் உள்ள வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களிலிருந்து 19 பேராசிரியர்கள் அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு சிறப்புச் சொற்பொழிவாற்றுவதற்கு வந்து சென்றுள்ளனர்.

## 4.9. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

**4.9.1.** தென் தமிழ்நாட்டின் கிராமப்பகுதியில் 550 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகமானது உயர்கல்வியில் தனித்துவம் மிகுந்ததாக உள்ளது. தமிழ்நாட்டின் தென்கோடி பகுதியில் உள்ள மூன்று மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நீண்டகால தேவைக்கென 07.09.1990 அன்று கற்றல் மற்றும் இணைவு பல்கலைக்கழகமாக, இப்பல்கலைக்கழகம் தமிழ்நாடு அரசால் துவங்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகம், புகழ் பெற்ற தமிழ் புலவர், மனோன்மணியம் நாடகத்தின் ஆசிரியர், பேராசிரியர் திரு. பி.சுந்தரம் பிள்ளை (1855–1897) அவர்களின் பெயரில் பெயரிடப்பட்டது. மனோன்மணியம் சுந்தரனார் தனது ஆளுகையின்கீழ் 77 இணைவு கல்லூரிகள், 6 பல்கலைக்கழக கல்லூரிகள் மற்றும் 4 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளை கொண்டுள்ளது. நேரடிக் கல்வி முறையில் 1,10,470 மாணாக்கர்களும், தொலைநிலைக் கல்வியில் 10,940 மாணாக்கர்களும் கல்வி பயின்று வருகின்றனர்.

**4.9.2.** இக்கல்லூரிகளில் St. John College, M.D.T. Hindu College மற்றும் Sarah Tucker College

(மாநிலத்தின் மிகப் பழமையான மகளிர் கல்லூரி) ஆகிய மூன்று கல்லூரிகள் 100 ஆண்டுகள் பழமையானவை. இக்கல்லூரிகள், தென்கோடி பகுதி மக்களின் உயர்கல்விக்கென அரிய பங்கினை வழங்கி வருகிறது. தேசிய தரச்சான்றிதழ் அமைப்பு தரவரிசையில், மூன்றாவது சுற்றுக்கு விண்ணப்பித்து அதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் தேசிய கல்வி நிறுவன தர வரிசைக் கட்டமைப்பில் (NIRF) 150-200 தரவரிசையில் இடம் பெற்றுள்ளதுடன், உயர்தரமான 'h' குறியீடு (index) 24 புள்ளிகளும் பெற்றுள்ளது.

**4.9.3.** மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் STPI உடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி பல்கலைக்கழக வளாகத்தில் காப்பீட்டு மையத்தை உருவாக்க 3 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் எதிர்காலத்தில், சொந்த தொழிற்சாலைகள் துவங்கவும் வேலைவாய்ப்புகள் பெறவும் இயலும்.

**4.9.4.** பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர்/ பதிவாளர் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன. 12 ஆசிரியர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்பட்டு திறந்து வைக்கும் நிலையில் உள்ளன.

சுற்றுச்சுவர், குழந்தை பராமரிப்பு மையம், மகளிர் விடுதி (துரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம்) கட்டும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. சாலைகள் விரிவாக்கம் மற்றும் நுழைவாயில் மேம்படுத்துதல் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தள வசதிகள் அனைத்துத் துறைகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**4.9.5.** கணிதவியல் துறையைச் சார்ந்த பேராசிரியர் முனைவர். T.தமிழ் செல்வம் என்பார் **2018** ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மூத்த அறிவியல் அறிஞர் விருதினை கணிதவியல் பிரிவில் பெற்றுள்ளார். உயிரியல் அறிவியல் துறையைச் சார்ந்த பேராசிரியர் முனைவர். A.பலவேசம் என்பாரும் **2018** ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மூத்த அறிவியல் அறிஞர் விருதினை உயிரியல் அறிவியல் பிரிவில் பெற்றுள்ளார்.

**4.9.6.** சூரியசக்தியால் இயங்கும் சாலை விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக வளாகத்தில் மரம் நடுதல் ஊக்கப்படுத்தப்பட்டு **5000**க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. ஒரு மெகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தி நிலைய கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. பல்கலைக்கழக வளாகத்தில் உணவு

கழிவுகளில் இருந்து பயோ கேஸ் உற்பத்தி செய்யும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.

**4.9.7.** மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் புதிதாக ஐந்தாண்டுகள் ஒருங்கிணைந்த பாடப்பிரிவுகளான M.Sc. Integrated Electronic Media, M.Sc. Cyber Security, M.Sc. Integrated Marine Science மற்றும் M.Sc. Data Analytics ஆகியன தொடங்கப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகத்தின் 4 உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 11 முதுகலை பாடப்பிரிவுகளும் 6 இளங்கலை பாடப்பிரிவுகளும் தொடங்கப்பட்டுள்ளன.

**4.9.8.** இப்பல்கலைக்கழகத்தின்கீழ், இணைவுபெற்ற 77 கல்லூரிகளில் 27,626 மாணவர்களும், 71,871 மாணவிகளும், 4 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிளில் 2,064 மாணவர்களும், 5,135 மாணவிகளும், 6 பல்கலைக்கழக கல்லூரிகளில் 1,374 மாணவர்களும், 2,400 மாணவிகளும் மற்றும் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின் மூலம் 4,382 மாணவர்களும், 6,108 மாணவிகளும் இளங்கலை / முதுகலைப் பிரிவுகளில் கல்வி பயின்று வருகின்றனர்.

**4.9.9.** இப்பல்கலைக்கழகம் பல்வேறு துறைகளிலிருந்து நிதி பெறுவதற்காக சீரிய முறையில் முயற்சி செய்து வருகிறது. இத்தகைய முயற்சியின் பயனாக **2017–18** ஆம் ஆண்டுகளில் UGCயில் இருந்து ரூ.**1.85** கோடி, RUSAவில் இருந்து ரூ.**75.00** இலட்சம், ICSSRஇல் இருந்து ரூ.**9.78** இலட்சம், DBTல் இருந்து ரூ.**21.20** இலட்சம் மற்றும் DST SERBஇல் இருந்து ரூ.**16.36** இலட்சம் பெறப்பட்டுள்ளது.

**4.9.10.** இப்பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் எதிர்கால பயன்பாட்டிற்காக, ஒருங்கிணைந்த ஆராய்ச்சிக்கென **5** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் சிறந்த நிறுவனங்களுடன் கையெழுத்திடப்பட்டுள்ளன.

**4.9.11.** "ஒரே பாரதம் உன்னத பாரதம்" திட்டத்தின்கீழ் இப்பல்கலைக்கழகத்திலிருந்து ஐந்து ஆசிரியர்கள் ஜம்மு காஷ்மீரின் பல்கலைக்கழகத்திற்கு ஆய்வு மேற்கொள்வதற்கு அனுப்பப்பட்டனர். இத்திட்டத்தின் கீழ் ஜம்மு காஷ்மீரின் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பின்வருமாறு கல்வி உதவித் தொகை வழங்கப்பட உள்ளது:

- இரண்டு மாணவர்களுக்கு, மாதம் தலா ரூ.15,000 கல்வி உதவித்தொகை மற்றும் ரயில்வழி போக்குவரத்து செலவுகள்.
- ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.20,000 கல்வி உதவித்தொகை மற்றும் வான்வழி போக்குவரத்து செலவுகள்.

## 4.10. பெரியார் பல்கலைக்கழகம்

**4.10.1.** சேலத்தில் செயல்பட்டு வந்த சென்னை பல்கலைக்கழகத்தின் விரிவாக்க மையம், தமிழக சட்டப்பேரவையில் இயற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள் பெரியார் பல்கலைக்கழகமாக மேம்படுத்தப்பட்டது. ஈடு இணையற்ற சமூகச் சீர்திருத்தவாதியாகவும், பகுத்தறிவுப் பகலவனாகவும் விளங்கிய வணக்கத்துக்குரிய தந்தை பெரியார் பெயரில் தோற்றுவிக்கப்பட்ட இப்பல்கலைக்கழகமானது முறைசார் மற்றும் முறைசாரா கல்வித்திட்டங்களின் வாயிலாக, அறிவார்ந்த சமூகத்தை உருவாக்கி தேசத்தின் வளர்ச்சிக்கு உதவுவதை அதன் இலக்காகக் கொண்டுள்ளது. கற்பித்தலிலும், அறிவு நலனை வளர்ப்பதிலும் பல்கலைக்கழகம் கொண்டுள்ள ஈடுபாட்டுணர்வை பல்கலைக்கழகத்தின் இலச்சினையில் இடம் பெற்றுள்ள ‘‘அறிவால் விளையும் உலகு’’ என்னும் குறிக்கோள் தொடர் தெளிவாக உணர்த்துகின்றது. பெரியார் பல்கலைக்கழகம் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் 2(f) மற்றும் 12(B) தகுதிநிலைகளைப் பெற்றுள்ளது. தேசிய தரமதிப்பீட்டு நிறுவனம், பெரியார் பல்கலைக்கழகத்தை

தரமதிப்பீடு செய்து **3.15** ஒட்டுமொத்த புள்ளிகள் வழங்கி 'ஏ' தரச் சான்றிதழை வழங்கியுள்ளது.

**4.10.2.** மூன்று துறைகளுடன் 1997 ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற பெரியார் பல்கலைக்கழகத்தில், தற்போது 27 துறைகள் இயங்கி வருகின்றன. இத்துறைகள் அனைத்தும் ஐந்து அறிவியல் புலம் மற்றும் மூன்று கலைப் புலம் கீழ் இயங்குகின்றன. இத்துறைகளின் வழியாக 29 முதுகலைப் பட்ட மேற்படிப்புகளும், 27 ஆராய்ச்சி பாடப்பரிவுகளும் நடத்தப்பெற்று வருகின்றன. பல்கலைக்கழகத்தில் அதிநுண் அறிவியல் மையம், உபகரணப் பராமரிப்பு மையம், மகளிரியல் மையம், தொழில் முனைவோர் மையம் முதலிய மையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. குக்கிராமங்களிலும், சிற்றூர்களிலும் வசிக்கும் மாணவர்கள் எளிதாக உயர்கல்வியைப் பெறுவதற்காக மேட்டூர் (சேலம் மாவட்டம்), பென்னாகரம் (தருமபுரி மாவட்டம்), அரூர் (தருமபுரி மாவட்டம்), பாப்பிரெட்டிபட்டி (தருமபுரி மாவட்டம்), எடப்பாடி (சேலம் மாவட்டம்), சேந்தமங்கலம் (நாமக்கல் மாவட்டம்) ஆகிய ஊர்களில் 6 பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரிகளைத் தொடங்கி, அக்கல்லூரிகளின் வாயிலாக பல்வேறு பட்ட, முதுகலை பட்ட மேற்படிப்புகளைப் பல்கலைக்கழகம் நடத்தி

வருகின்றது. தருமபுரியில் பெரியார் பல்கலைக்கழக விரிவாக்க மையம் தொடங்கி, அதன் வழியாகவும் உயர்கல்வியை மாணாக்கர்களுக்குப் பல்கலைக்கழகம் வழங்கி வருகின்றது. பல்கலைக்கழகத் துறைகளில் 158 ஆசிரியர்களும் உறுப்புக்கல்லூரிகளில் 57 ஆசிரியர்களும் முதுநிலை விரிவாக்க மையத்தில் 20 ஆசிரியர்களும் பணியாற்றுகின்றனர். பல்கலைக்கழகத்தின் துறைகளில் நடத்தப்பெறும் பல்வேறு முதுகலை பட்ட மேற்படிப்பில் 1,790 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். ஆய்வியல் நிறைஞர் ஆராய்ச்சிப் படிப்பை 198 மாணவ மாணவியர்கள் பயின்று வருகின்றனர். பல்கலைக்கழகத் துறைகளில் 223 ஆராய்ச்சியாளர்கள் முனைவர் பட்டத்திற்காக ஆராய்ச்சி செய்து வருகின்றனர். பல்கலைக்கழகத்தில் நடத்தப்பெறும் தொழில்சார் இளங்கலைப் பட்டப் படிப்பில் 323 மாணவ மாணவியர்கள் பயின்று வருகின்றனர். பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரிகளில் 5,227 மாணவ மாணவியர்கள் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப் படிப்புகளைப் பயில்கின்றனர். பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி நிறுவனம் நடத்தும் பட்டம் மற்றும் பட்டயப் படிப்புகளில் 32,891 மாணாக்கர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**4.10.3.** உயர்தகுதியுடைய அறிவியலாளர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் அறிவார்ந்த ஆசிரியர்கள் ஆகியோரைக் கொண்டு, கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை மேம்படுத்துவதற்காக பல்கலைக்கழக ஆசிரியர்களுக்குச் சொற்பொழிவுத் தொடர் நிகழ்ச்சிகள் ஒவ்வொரு மாதமும் நடத்தப்பட்டு வருகின்றன. ஆசிரியர்களும் மாணாக்கர்களும் சர்வதேச கருத்தரங்குகளில் பங்கேற்று ஆய்வுக் கட்டுரைகள் வழங்குவதற்கு ஊக்கப்படுத்தும் விதமாக, அவர்களுக்குப் பயணக்கட்டணம் வழங்குவதற்கு தொகுப்புநிதி உருவாக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு துறைகளிலும் பயிலும் தகுதியும் திறமையும் வாய்ந்த பொருளாதார நிலையில் நலிவடைந்த நிலையில் உள்ள ஒரு மாணவர் / மாணவிக்கு கல்விக்கட்டணம், விடுதிக் கட்டணம் ஆகியனவற்றை பல்கலைக்கழக நிதியிலிருந்து உதவித் தொகையாக வழங்கும் திட்டம் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. அதற்காக ரூ.9.00 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதிநல்கை அமைப்புகளுக்கு ஆய்வுத் திட்டத்தை அனுப்பி, அந்த ஆய்வுத்திட்டத்தை விளக்கி உரைப்பதற்காகப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் அழைக்கப்பட்டால், அவ்வாறு அழைக்கப்படும்

ஆசிரியர்களுக்குப் பயணக்கட்டணம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**4.10.4.** மக்கள் தொடர்பியலில், மின்னணு ஊடகத்தின் தேவை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, பல்கலைக்கழக இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறையில், மின்னணு ஊடகவியலைச் சிறப்புப் பாடமாக கொண்ட ஐந்தாண்டு ஒருங்கிணைந்த முதுகலை இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் பட்ட மேற்படிப்பையும், கணினி அறிவியல் துறையில் தரவுகள் பகுத்தாராய்தல் முதுகலை பட்டயப் படிப்பையும் 2018–19 ஆம் கல்வியாண்டு முதல் புதிதாகத் தொடங்க பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது.

**4.10.5.** ஆராய்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காகவும் ஆராய்ச்சிகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கி ஊக்கப்படுத்துவதற்காகவும் பல்கலைக்கழக ஆய்வுத் தகைமைத் திட்டத்தைப் பல்கலைக்கழகம் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு துறையிலிருந்தும் 5 ஆய்வு தகைஞர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.6,000 ஆய்வுத் தகைமைத் தொகையாகவும், ஆண்டுக்கு ரூ.5,000 இன்றியமையாச் செலவினத் தொகையாகவும் பல்கலைக்கழகம் வழங்கி வருகின்றது.

**4.10.6.** பல்கலைக்கழகத் துறைகளில் **1,381** மாணவ, மாணவியரும், உறுப்புக் கல்லூரிகளில் **3,879** மாணவ, மாணவியரும் அரசு வழங்கும் பள்ளிப்படிப்பிற்குப் பிந்தைய உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் உதவித் தொகைகளைப் பெற்றுள்ளனர்.

**4.10.7.** பல்கலைக்கழகத் துறைகளில் அதிநுண் அறிவியல் மற்றும் அதிநுண் நுட்பவியல் பட்ட மேற்படிப்பு, (M.Sc. – Nano Science and Nano Technology) இணையம் மற்றும் தகவல் நுட்பவியல் பாதுகாப்பு (M.Sc. – Cyber Security) பட்ட மேற்படிப்பு ஆகிய பாடப்பிரிவுகளைத் தொடங்குவதற்கு இசைவு பெறப்பட்டுள்ளது. உறுப்புக் கல்லூரிகளில் இளங்கலை தமிழ், முதுகலை தமிழ், முதுகலை ஆங்கிலம், முதுகலை கணிதம், முதுகலை கணினி அறிவியல், முதுகலை வணிகவியல் ஆகிய பாடப் பிரிவுகள் **2017–18** ஆம் கல்வியாண்டில் புதிதாகத் தொடங்கப்பெற்றுள்ளன.

**4.10.8.** **2018** ஆம் ஆண்டில் தேசிய கல்வி நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பில், அகில இந்திய அளவில், பல்கலைக்கழகம் **90** ஆவது இடத்தினைப் பெற்றுள்ளது. பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு

அறிமுகப்படுத்தியுள்ள உயர்மேம்பாட்டு நிறுவனத் திட்டத்தின்கீழ் நிதியுதவியை பெறுவதற்காக, திட்டக்கருத்துரு அனுப்பப்பட்டது. அது பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்காக அமைக்கப்பட்டுள்ள உயரதிகாரக் குழுவிடம் பெரியார் பல்கலைக்கழகத்தின் கருத்துரு குறித்து விரிவாக **07.05.2018** அன்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**4.10.9.** பெரியார் பல்கலைக்கழகம் பல்வேறு நிதிநல்கை அமைப்புகளிடமிருந்து நிதியைப் பெருமளவில் பெறுவதற்கு முனைப்புடன் செயலாற்றி வருகின்றது. **2017–18** ஆம் கல்வியாண்டில் **ரூ.2,124.80** இலட்சம் தொகையைப் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. இத்தொகை குறித்த விவரங்களாவன: **(அ)** ஜிடிபி நல்கை – **ரூ.506.80** இலட்சம் **(ஆ)** ஒன்றிணைக்கப்பட்ட திட்டங்களுக்கான நல்கை **(**ஐ.ஏ.எஸ் / ஐ.பி.எஸ் தேர்விற்கான பயிற்சி வகுப்புகள்**)** – **ரூ.30.50** இலட்சம், **(இ)** விளையாட்டரங்கம் மற்றும் கருவிகள் உட்கட்டமைப்பு மேம்பாடு – **ரூ.35.00** இலட்சம் **(ஈ)** மகளிர் விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்கான நிதி – **ரூ.48.00** இலட்சம், **(உ)** உள்தர உறுதிப்பாட்டு மையம் –

ரூ.4.50 இலட்சம் (ஊ) தேசிய உயர்கல்வி திட்டம் (RUSA) – ரூ.1,500 இலட்சம் என்பவனவாகும்.

**4.10.10.** இந்தியாவிலும், அயல்நாடுகளிலும் உயர்தகுதிமிக்க நிறுவனங்கள் பலவற்றோடு இணைந்து கூட்டு ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக, 25 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இப்பல்கலைக்கழகம் கையெழுத்திட்டுள்ளது.

**4.10.11.** பெரியார் பல்கலைக்கழகம் இந்திய சமூக அறிவியல் குழுமத்துடன் இணைந்து, 41–வது இந்திய சமூக அறிவியல் பேராயத்தினை கடந்த 2017, டிசம்பர் 18 முதல் 22 வரையில் சேலம் பெரியார் பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தியது. இப்பேராயத்தில் இந்திய அளவில் பலதரப்பட்ட புலங்களை சார்ந்த சுமார் 2000–க்கும் மேற்பட்ட சிறந்த அறிஞர்கள் பங்கேற்றனர். இப்பேராயத்தினை நடத்துவதற்கு தமிழக அரசால் ரூ.20.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

## 4.11. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

**4.11.1.** தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் சட்ட பேரவையில் இயற்றப்பட்ட சட்டம் 27/2002 இன் படி தோற்றுவிக்கப்பட்டது. இந்திய நாட்டின் 14 மாநில திறந்த நிலைப் பல்கலைக்கழகங்களில் இப்பல்கலைக்கழகம் 5—வது இடத்தைப் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் நிர்வாக தலைமைக் கட்டிடத்துடன் கூடிய முதன்மை வளாகம் சென்னையில் அமைந்துள்ளது. இப்பல்கலைக்கழகமானது சென்னை, கோயம்புத்தூர், தருமபுரி, மதுரை, ஊட்டி, திருச்சிராப்பள்ளி, விழுப்புரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 8 இடங்களில் மண்டல மையங்களை நிறுவி செயல்பட்டு வருகின்றது. இவற்றுள், திருநெல்வேலி மண்டல மையம் நிறுவுவதற்கான அறிவிப்பினை மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டு, 2017–18 ஆம் கல்வியாண்டிலிருந்தே இம்மையம் செயல்பட்டு வருகின்றது. மேலும், இப்பல்கலைக்கழகம் 8 சமுதாயக் உறுப்புக் கல்லூரிகளை சென்னை, தருமபுரி, கோயம்புத்தூர், ஊட்டி மதுரை, திருநெல்வேலி, விழுப்புரம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய

இடங்களில் நிறுவியுள்ளது. இப்பல்கலைக்கழகம் 13 பள்ளிகளை கொண்டுள்ளது மற்றும் 443 பயிலுதல் மையங்களை தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளிலும் நிறுவியுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்ட 21,088 மாணாக்கர்களில் 9,572 மாணாக்கர்கள் இளங்கலை படிப்பினையும், 4,196 மாணாக்கர்கள் முதுகலை படிப்பினையும் மற்றும் 7,321 மாணாக்கர்கள் பிற படிப்புகளையும் பயின்று வருகின்றனர். தற்போது இப்பல்கலைக்கழகம் 161 பாடப்பிரிவுகளை நடத்தி வருவதுடன் அவற்றுள் 13 பாடப்பிரிவுகள் கடந்த 2017–18 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டவையாகும். தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கல்வி புல கட்டடம் மற்றும் பொருள்கள் சேமிப்பு கட்டடம் ஆகியவற்றில் கூடுதல் தளங்கள் மற்றும் துணை வேந்தர் மாளிகை, விருந்தினர் இல்லம், அலுவலக அறை ஆகியவற்றில் கூடுதல் தளங்கள், ரூ.23.24 கோடி செலவில் கட்டுவதற்கான நிர்வாக அனுமதி அளித்து கடந்த 2017–18 ஆம் ஆண்டு அரசால் ஆணையிடப்பட்டது. 2017–18 ஆம் ஆண்டில் விழுப்புரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ரூ.12.50 கோடி செலவில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் மண்டல மையங்களின்

கட்டடங்களை கட்டுவதற்கு நிர்வாக அனுமதியளித்து அரசால் ஆணையிடப்பட்டது.

**4.11.2.** “ஒரே பாரதம் உன்னத பாரதம்” திட்டத்தில் தமிழ்நாடு மாநிலம், ஜம்மு காஷ்மீர் மாநிலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 11.08.2017 அன்று இரு மாநிலங்களுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தினை செயல்படுத்த தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் உட்பட ஐந்து பல்கலைக்கழகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் முயற்சியில் ஒரு பகுதியாக பண்பாட்டு நிகழ்ச்சி, 2018 ஜனவரி, 30 மற்றும் 31 ஆகிய தேதிகளில் மேற்குவங்கத்தில் உள்ள, கராக்பூர் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் பங்கு பெற்றது. இதில் டாக்டர் சி.கார்த்திகேயன், உதவிப் பேராசிரியர், திரைப்பட துறை, கலையியல் புலம் தலைமையில் 18 மாணாக்கர்களுடன் இரண்டு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்று பரதநாட்டியம், ஒயிலாட்டம், நாதசுரம்–மேளம்,

கும்மி–கோலாட்டம், காளியாட்டம், தாண்டவம் ஆகிய கலை நிகழ்ச்சிகளில், அவர்கள் திறனை வெளிப்படுத்தினார்கள்.

**4.11.3.** மத்திய அரசின் 'உன்னத் பாரத் அபியான்' திட்டத்தின் கீழ் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம் தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஐந்து கிராமங்களை தத்தெடுப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இம்முயற்சியின் மூலம் சமூகம் சார்ந்த வாழ்வாதார கல்வி நிகழ்ச்சியின் வழியாக கிராம மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்படும்.

**4.11.4.** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, விதி எண்.110–இன்கீழ் மாநிலத்திலுள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் 13 பல்கலைக் கழகங்களின் நூலக தகவல் வளங்களை எண்ணியலாக்கம் செய்யும் பணியை ரூ.1.86 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய இரு பல்கலைக்கழகங்களும் மேற்கொண்டன. தமிழ்நாடு மின்னியல் நூலகக் களஞ்சிய இணையதளம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 05.04.2018 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

**4.11.5.** தொலைதூரக் கல்வி மாமன்றம் அளித்த நிதி உதவி மூலம் **3,015** வேலையில்லாத இளைஞர்களுக்கு வேளாண்மைத் துறையில் திறன் பயிற்சி அளிக்கப்பட்டது. நேரடி கல்வி முறையில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டப்படிப்புகளை நடத்துவதற்கு பல்கலைக்கழக மானிய குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டது. இந்திய அரசின் SWAYAM திட்டத்தின் கீழ் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் உதவியுடன் **8** பெருமளவு திறந்தநிலை இணையதள படிப்புகள் (MOOCs) வழங்கப்பட உள்ளது. தேசிய கல்வி நிறுவன தர வரிசை கட்டமைப்பில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் சேர்க்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் ICARE ஆலோசகர் அலுவலகம் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக வளாகத்தில் அமையவுள்ளது.

**4.11.6.** தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் பின்வரும் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது: School Guru – வேலைவாய்ப்பு தொடர்பான திறன் பயிற்சி, Soft Source Pvt. Ltd. – இணைக்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு திட்டம், Maharashtra Knowledge Corporation Ltd (MKCL) – பணி அடிப்படையிலான கற்றல் திட்டம். இத்திட்டத்தில்

+2 முடித்த மாணவர்கள் சேரலாம். தெரிவு செய்யப்படும் மாணவர்கள் நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டு மாதம் ரூ.15,000 – 20,000 சம்பளம் வழங்கப்படும். இத்திட்டத்தில் BBA and B.Sc., (Computer System Administration) படிப்புகள் நடத்தப்படும். NAD under NSDL – சான்றிதழ்கள் எண்ணியலாக்கம் செய்தல், Department of Forestry Government of Tamil Nadu மூலம் வன உயிரியல் சுற்றுலாத் திட்டம்.

**4.11.7.** நீலகிரி மாவட்டத்தில் **30.12.2017** அன்று நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நீலகிரி மாவட்டத்தில் உயர்கல்வியில் பழங்குடியின மாணவர் சேர்க்கையை அதிகரிக்க ஏதுவாக, கோத்தகிரியில் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தின் மண்டல மையம் ஒன்று ரூ.**5.00** கோடி செலவில் அமைக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

## 4.12. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

**4.12.1.** திருவள்ளுவர் பல்கலைக்கழகம், **16.10.2002** அன்று தமிழக அரசால் துவக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம்

வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியது. இப்பல்கலைக்கழகத்தில் ஏழு துறைகள் 43 ஆசிரியர்களுடன் இயங்கி வருகின்றன. பல்கலைக்கழகத்தின் துறைகளில் 263 முதுகலை மாணாக்கர்களும், 123 எம்.பில்., பட்டபடிப்பு மாணாக்கர்களும், 269 முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணாக்கர்களும் பயின்று வருகின்றனர். இப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற 123 நிறுவனங்களில், மொத்தம் 1,28,347 மாணாக்கர்கள் இளங்கலை, முதுகலை மற்றும் எம்.பில்., பட்டப்படிப்புகளில் பயின்று வருகின்றனர். மேலும் யோகா படிப்பின் கீழ் 1,206 மாணாக்கர்கள் பட்டயம், இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பில் பயின்று வருகின்றனர். இப்பல்கலைக்கழகத்தின் கீழுள்ள 6 உறுப்புக் கல்லூரிகளில் 8,044 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். விழுப்புரத்தில் உள்ள முதுகலை விரிவாக்க மையத்தில் 271 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர்.

**4.12.2.** திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் 5 உறுப்புக் கல்லூரிகளில், 11 இளங்கலை பாடப்பிரிவுகளும் 9 முதுகலை பாடப்பிரிவுகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. விழுப்புரத்தில்

உள்ள முதுகலை விரிவாக்க மையத்தில் 3 புதிய முதுகலை பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**4.12.3.** பல்கலைக்கழக மானியக் குழு, திருவள்ளுவர் பல்கலைக்கழத்திற்கு 12(B) நிலை அளித்துள்ளது. இதன் மூலம் இப்பல்கலைக்கழகம் மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெற தகுதியுடையதாகிறது. நிர்வாகப் பணிகளுக்கு, ஒப்பளிக்கப்பட்ட 26 ஆசிரியரல்லாத பணியிடங்களை பல்கலைக்கழகம் நிரப்பியுள்ளது. உறுப்புக் கல்லூரிகளில் முதல்வர் பணியிடங்கள் உட்பட 81 ஆசிரியப் பணியிடங்கள் மற்றும் 56 ஆசிரியரல்லாத பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத் தேர்வு முறை முழுமையாக கணினி மயமாக்கப்பட்டுள்ளது (Automation).

**4.12.4.** இப்பல்கலைக்கழக மாணாக்கர்கள் தெற்காசிய கூட்டமைப்பு நடத்திய கால்பந்தாட்டப் போட்டியில் இந்தியா சார்பாகக் கலந்துகொண்டு தங்கப்பதக்கத்தை வென்றுள்ளனர். வாரணாசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கிடையேயான மகளிர் கால்பந்தாட்டப் போட்டியில் திருவள்ளுவர் பல்கலைக்கழக மகளிர் கால்பந்தாட்ட அணி தொடர்ந்து மூன்றாவது முறையாக

முதலிடம் பெற்றுள்ளது. நெய்வேலியில் நடத்தப்பட்ட தென்மண்டல பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மகளிர் கால்பந்தாட்டப் போட்டியில் திருவள்ளுவர் பல்கலைக்கழக மகளிர் கால்பந்தாட்ட அணி முதலிடம் பெற்றது.

**4.12.5.** 2017–2018 ஆம் ஆண்டில், CSIR, DRDO, DST, UGC மற்றும் MBHM ஆகிய நிறுவனங்களிடமிருந்து மொத்தம் ரூ.62.64 இலட்சம் நிதி பெறப்பட்டுள்ளது.

**4.12.6.** திருவள்ளுவர் பல்கலைக்கழகம் மற்றும் இதர கல்வி அறக்கட்டளைகளுக்கிடையே 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டு இப்பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மாணவர்கள் இருவர் Post Doctoral Fellow-ஆக, ஆராய்ச்சி பணிக்கு கொரியா (Chonbuk தேசிய பல்கலைக்கழகம்) மற்றும் சீனாவிற்கு சென்றுள்ளனர்.

## 4.13. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

**4.13.1.** தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் 2008 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு ஆசிரியர் கல்வியின் தேவைக்கேற்ப புதுமையான மாற்றங்களை கொண்டுவந்து மாநிலத்தில் ஆசிரியர் கல்வியின் தரத்தினை மேம்படுத்த தேவையான முயற்சிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது. தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் 2014 ஆம் ஆண்டு விதிமுறைகளின்படி, 2015–16 ஆம் கல்வியாண்டிலிருந்து 2 வருட பி.எட்., 2 வருட எம்.எட்., பட்டப்படிப்புகளையும், 2016–17 ஆம் கல்வியாண்டிலிருந்து 4 வருட ஒருங்கிணைந்த பி.எஸ்சி.,பி.எட்., பட்டப்படிப்பையும், பல்கலைக்கழகம், அதன் இணைவு பெற்ற கல்லூரிகளில் அறிமுகப்படுத்தியுள்ளது. இப்பல்கலைக்கழகம் ஆசிரியர் கல்வியில் புதியமுறைகளுக்கேற்ப கல்வித்திட்டங்களை வகுத்து தற்போதுள்ள சமூகபொருளாதார சூழ்நிலையில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதில் வெற்றிகரமாக கவனம் செலுத்தி வருகிறது.

**4.13.2.** இப்பல்கலைக்கழகத்தில் தற்போது செயல்பட்டு வரும் ஆறு ஆராய்ச்சி துறைகளுடன் மேலும் கூடுதலாக

நான்கு துறைகளும் விரைவில் செயல்படவுள்ளது. 1. கற்பித்தலியல் அறிவியல் துறை, 2. மதிப்பீட்டுத் துறை, 3. உளவியல் கல்வித்துறை, 4. கல்வியியல் தொழில்நுட்பத் துறை, 5. பாடத்திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டுத் துறை, 6. கல்வித்திட்டமிடல் மற்றும் நிர்வாகத்துறை ஆகிய துறைகளில் தற்போது 6 பேராசிரியர்கள், 3 இணைப் பேராசிரியர்கள் மற்றும் 23 உதவிப் பேராசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

**4.13.3.** இப்பல்கலைக்கழகம் மாநிலத்தில் தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் ஒப்புதலுடன் இயங்கி வரும் கல்வியியல் கல்லூரிகளில் ஆசிரியர் கல்வி முறையைக் கண்காணித்து வருகிறது. இப்பல்கலைக்கழகம் ஆசிரியர் கல்வியில் ஆராய்ச்சியினை மேம்படுத்துவதற்கும், விரிவாக்க நடவடிக்கைகளுக்கும் தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் இப்பல்கலைக்கழகம் ஆசிரியர் கல்வியியலினை மேம்படுத்த கருத்தரங்குகள், தொழிற்பட்டறைகள் மற்றும் விவாத அரங்கங்கள் ஆகியவைகளை நடத்தி, விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பல்கலைக்கழகத்தில் முழுமையான நூலகம், ஆராய்ச்சிக் மையம் மற்றும் நூல்கள்

வெளியிடுவதற்கான பதிப்பு மையம் ஆகியவைகளைத் தோற்றுவிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**4.13.4.** தற்போது 7 அரசு கல்வியியல் கல்லூரிகள், 14 அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 711 சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் உட்பட 732 கல்வியியல் கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழகம் பி.எச்டி., மற்றும் எம்.பில்., பட்டப்படிப்புகளை பல்கலைக்கழகத் துறைகளில் தொடர்ந்து நடத்தி வருகிறது. இந்தப் படிப்புகளுக்கு நுழைவுத் தேர்வு மூலம் மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. இப்பல்கலைக்கழகம் ஆராய்ச்சி படிப்புகளை நடத்துவதற்காக எம்.பில்., பட்டப்படிப்பிற்கு 23 கல்லூரிகளுக்கும், பி.எச்டி., பட்டப்படிப்பிற்கு 12 கல்லூரிகளுக்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. பல்கலைக்கழகத் துறைகளில் 134 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இணைவுக் கல்லூரிகளில் பி.எட்., எம்.எட்., பி.எஸ்சி.,பி.எட்., எம்.பில்., மற்றும் பி.எச்டி. பாடப்பிரிவுகளில் 1,29,102 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

**4.13.5.** 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இப்பல்கலைக்கழகம் மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்துடன்

‘பள்ளிகளை தத்தெடுக்கும் நிகழ்விற்கு’ புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) செய்துள்ளது. இதன்படி ஆதி திராவிட நலத்துறை மற்றும் கள்ளர் பண்படுத்தும் பள்ளிகளுக்கு மின்னணு தகவல் தொடர்பு, திறன் வளர்ச்சி, முறைமையியல் மேம்பாடு, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் இதரபாடங்களில் தொழில்நுட்பப்பயிற்சி அளிக்க திட்டமிட்டுள்ளது. இப்பல்கலைக்கழகம் மரம் நடுவதை பெரிய அளவில் நடத்தி இணைப்புக்கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக வளாகங்களில் சுமார் **46,000** மரங்களை நடுவதற்கு ஏறத்தாழ **8,000** மாணவர்களை ஈடுபடுத்தியுள்ளது.

**4.13.6.** **2017–2018**ஆம் கல்வியாண்டு முதல் இரண்டு வருட எம்.எட்., பட்டப்படிப்புகள் பல்கலைக்கழகத்தில் தொடங்குவதற்கு NCTEஇன் அங்கீகாரம் பெறப்பட்டது. **2016–17** ஆம் கல்வியாண்டு முதல் பி.எட்., பி.எட்., (சிறப்பு) மற்றும் எம்.எட்., பட்டப்படிப்பில் மாணவர்கள் சேர்க்கை இணையதளத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

## 5. தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

**5.1.** தமிழ்நாடு ஆவணக்காப்பகம் 1909 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு மெட்ராஸ் ரெக்கார்டு ஆபீஸ் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் 1670 ஆம் ஆண்டிலிருந்து தலைமைச் செயலக ஆவணங்கள், முந்தைய வருவாய் வாரிய ஆவணங்கள், சில துறைகளின் தலைமை அலுவலக ஆவணங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக ஆவணங்கள் மற்றும் மாவட்ட நீதிமன்ற ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**5.2.** தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் அரிய டச்சு, டேனிஸ் மற்றும் பாரசீக பிறமொழி ஆவணங்கள் மற்றும் பலவகை அறிய நூல்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகத்தில் 1633 ஆம் ஆண்டு முதல் பதிப்பிக்கப்பட்ட புத்தகம் துவங்கி, 2.3 இலட்சம் புத்தகங்கள் மற்றும் காலமுறை அறிக்கைகளை கொண்டுள்ளதால், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், பல்வேறு உலக நாடுகளைச் சார்ந்த பல்கலைக்கழக மற்றும் கல்லூரிகளிலிருந்து சரித்திர ஆய்வாளர்களை தன்னகத்தே ஈர்த்து வருகின்றது.

**5.3.** தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் செயல்பட்டு வரும் விவரச்சுவடி பிரிவு தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களின் விவரச்சுவடிகளை தயாரித்து வெளியிட்டு வருகிறது. தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் கீழ் ஆறு மாவட்ட ஆவணக்காப்பகங்கள் முறையே தஞ்சாவூர், கோயம்புத்தூர், கடலூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**5.4.** பெரும் முயற்சியினை உள்ளடக்கிய ஆவணப்பாதுகாப்பு பணியினை, எதிர்வரும் தலைமுறை பயன்பெறும் வகையில் செய்து வருகின்றது. இந்த இலக்கினை சென்றடையும் விதமாக, கணினிமயமாக்குதல், நுண்புகைப்படம் எடுத்தல், ஆவணங்களை புத்தகமாக கட்டுதல் ஆகிய பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

**5.5.** இக்காப்பக அரிய மூல ஆவணங்களை கணினிமயமாக்குதல் எனும் தொடர் முயற்சியின் ஒரு பகுதியாக, **2011–2016** ஆம் ஆண்டு காலங்களில் அரசால் ரூ.**80.00** இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, **1900** ஆம் ஆண்டுக்கு முன் மற்றும் பின் உள்ள ஆவணங்களை கணினிமயமாக்கியும் மற்றும் நுண்புகைப்படம் எடுத்தும்,

மேலும், **1900** ஆம் ஆண்டிற்கு பின்னர் உள்ள ஆவணங்களின் அட்டவணைகள் குறியீட்டப்பட்டுள்ளன.

**5.6.** **2014–2015** ஆம் ஆண்டு மத்திய அரசு நிதி உதவி திட்டத்தின் கீழ் ரூ.**39.75** இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இதில் மாநில அரசின் பங்கு ரூ.**9.93** இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் மூல ஆவணங்கள், அரசிதழ்கள் மற்றும் பொருள் விவரப்பட்டியல்களை கணினிமயமாக்குதல், நகல் எடுக்கும் இயந்திரம், கணினிகள் வாங்கியமை ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**5.7.** தமிழ்நாடு ஆவணக்காப்பகம் தன்னகத்தே கொண்ட ஆவணங்களை கணினி மயமாக்கி இணையத்தில் பதிவேற்றம் செய்யவும், உள்ளிணைப்பு கட்டமைப்பு ஏற்படுத்தி அலுவல் சார்ந்த ஆவணம் தொடர்பாக பணிகளை மேற்கொள்ளவும், ரூ.**67.00** இலட்சம் செலவில் ஒரு திட்டத்தை **2015–2016** மற்றும் **2016–2017** ஆகிய நிதியாண்டுகளில் தமிழ்நாடு புதுமை முயற்சிகளின் கீழ் புதிய திட்டங்கள் என்ற திட்டத்தின் கீழ் நிறைவேற்றியுள்ளது. இத்திட்டத்தினை தொடர்ந்து மின் ஆளுமை முயற்சி நிதியிலிருந்து ஒப்பளிக்கப்பட்ட ரூ.**105.00** இலட்சம் செலவினத்தில் **2017** ஆம் ஆண்டில் மற்றுமொரு திட்டமான மின் ஆவணக்காப்பகத்தை

(Digi-Archives) உருவாக்குவதற்காக, அரசு மின் ஆளுமை நிறுவனத்தின் மூலம் (e-governance Agency) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**5.8.** அரசு, **2016–17** மற்றும் **2017–18** ஆம் நிதியாண்டில் ரூ.**10.00** இலட்சம் செலவினத்தை இக்காப்பக ஆவணங்களை மின்மயமாக்க (Scanning) ஒதுக்கீடு செய்துள்ளதோடு, **2018–19** ஆம் நிதி ஆண்டிற்கு அதே செலவினத்தை இப்பணிக்கென ஒதுக்கீடு செய்துள்ளது. இத்துறையின் ஆறு சார்நிலை அலுவலகங்களுக்கு கணினி மற்றும் அதன் தொடர்புடைய பொருட்களை வாங்குவதற்கும், இக்காப்பக ஆவணங்களை மின்மயமாக்குதல் மற்றும் நுண்புகைப்படமாக்குதல் ஆகிய திட்டத்திற்கு தேசிய ஆவணக்காப்பகம் ஒப்புதல் அளித்து அதற்கென ரூ.**47.00** இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டம் **75** சதவிகிதம் மத்திய அரசின் பங்களிப்புடனும், எஞ்சிய **25** சதவிகிதம் மாநில அரசின் பங்களிப்புடனும் மேற்கொள்ளப்பட்டது.

# 6. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

**6.1.** தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் (TANSCHE) ஆராய்ச்சி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் உயர்கல்வி நிறுவனங்களின் தரத்தினை நிர்ணயிக்கவும் மற்றும் அவற்றை ஒருங்கிணைப்பதற்கும் **1992** ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இம்மன்றம் மாநில உயர்கல்வித்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அனைத்து உயர்கல்வி நிறுவனங்களையும் மாநிலத்தின் உயர்கல்வி வளர்ச்சியில் சிறந்து விளங்குவதற்கான திட்டங்களை தயாரித்து, அவற்றை பல்கலைக்கழக மானியக் குழுவின் வரன்முறைகளின்படி, செயல்படுத்துவதை உறுதிசெய்கின்றது.

## 6.2. 2011–2012 முதல் 2017–2018 வரையிலான முக்கிய சாதனைகள்

- அயல்நாடு சென்று கல்வி கற்கும் திட்டம் தொடங்கப்பட்டு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்கும் முதுகலை மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள், இங்கிலாந்து சென்று ஒரு பருவம் கல்வி கற்றனர். மூன்றாண்டுகள் செயல்படுத்தப்பட்ட

இத்திட்டத்தின் மூலம் **74** மாணாக்கர்களும், **15** ஆசிரியர்களும் பயனடைந்தனர்.

- **6** பல்கலைக்கழகங்களில் உருவாக்கப்பட்டுள்ள “பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டிணைவு மையத்தின்” இணைப்பு மையமாக தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் செயல்படுகிறது. இம்மையத்தின் மூலம், தொழிற்சாலை தொடர்பான அறிவினை பெறவும், தொழிற்சாலைகளில் உள்பயிற்சி பெறவும், தொழிற்கல்வி கற்கவும், வேலை வாய்ப்பு பெற்றிடவும், வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன.

- மென்திறன் பயிற்சியினை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பு சதவீதம் அதிகரிக்கவும், தகவல் மற்றும் தொடர்பியல் தொழில்நுட்ப மன்றத்துடன் (ICT Academy) புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, **62** அரசு மற்றும் கலைக் கல்லூரிகளில் பயிலும் **31,000** மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் பயிற்சியளிக்கப்பட்டது.

- அரசு / அரசு நிதியுதவி பெறும் / சுயநிதி கல்லூரிகள் / பல்கலைக்கழகங்களுக்கு, தேசிய மற்றும் சர்வதேச பயிலரங்குகள்/ கருத்தரங்குகள்/ மாநாடுகள் நடத்த பகுதி நிதியுதவியினை இம்மன்றம் வழங்கி வருகிறது.

## 6.3. மன்றத்தின் நடவடிக்கைகள் / திட்டங்கள்

- பல்வேறுபட்ட கல்வி நிறுவனங்களில் பயிற்றுவிக்கப்படும் பாடப்பிரிவுகளின் சமநிலை குறித்தும், மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒரு கல்வி நிறுவனத்திலிருந்து மற்றொரு கல்வி நிறுவனத்திற்கு சென்று படிக்கவும், கற்பிக்கவும், வேலைவாய்ப்பிற்கும் வழிவகை செய்யும் விதத்தில், இம்மன்றத்தால் மாநில ஒருங்கிணைந்த பாடத்திட்ட குழுக்கள் அமைக்கப்பட்டு, பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளன. இதுவரை 21 இளநிலை மற்றும் 19 முதுநிலை அடிப்படை துறைகள் கண்டறியப்பட்டு, அதற்கான பாடத்திட்ட வங்கி ஏற்படுத்தப்பட்டு ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்ட

குழு தற்போதுள்ள பாடத்திட்டங்களை ஒழுங்குபடுத்தவும், அதன் நோக்கம் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் உதவும்.

- வேலை வாய்ப்பளிக்கும் அமைப்புகளில் உருவாகும் பட்டப்படிப்புகளுக்கிடையேயான சமநிலை குறித்த பிரச்சனைகளை களைய, மாநில பல்கலைக்கழகங்களில் உள்ள பாடத்திட்டக் குழு தலைவர்கள், அவ்வப்போது குழுவாக கூடி, தமது பரிந்துரைகளை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு வழங்கி வருகின்றனர்.

- 2017–18 ஆம் ஆண்டில் மட்டும் 280–க்கு மேற்பட்ட இனங்களில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் உள்ள இணைக்கல்வி குழுவிற்கு பாடப்பிரிவுகளுக்கிடையேயான சமநிலை குறித்த குறிப்புரையினை இம்மன்றம் அனுப்பியுள்ளது.

- ஒருங்கிணைக்கும் முகமையாக செயல்படும் இம்மன்றம் 13 தமிழகப் பல்கலைக்கழகங்கள் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன்

ஏற்படுத்தப்பட்ட கூட்டு நடவடிக்கைகளை தொகுத்து, அவற்றில் உள்ள பலம் மற்றும் பலவீனமான பகுதிகள், பரிமாற்றங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஆகிய விவரங்களை ஒருங்கிணைத்து, அவற்றை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

- ‘‘மெதுவாக கற்கும் மாணவர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தி அவர்களின் இடைநிற்றலை தவிர்த்தல்’’ திட்டத்தின்கீழ், **6** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் **18** பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளிலும் சிறப்பு மற்றும் மாற்று பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுவதால் மாணாக்கர்கள் இடைநிற்றல் தவிர்க்கப்படுகிறது. இத்திட்டம் அவர்கள் பட்டப்படிப்பினை முடிப்பதற்கு உதவியாகவுள்ளது.

- **62** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றில் ‘‘மென்திறன் மையங்கள்’’ உருவாக்கப்பட்டுள்ளன. இம்மையங்கள் மூலம் மாணாக்கர்களுக்கு

மென்திறனின் முக்கிய பகுதிகளான கணினி கல்வி, தகவல் தொடர்பு திறன், ஆளுமை வளர்ச்சி, நேர்காணல் திறன் போன்ற மென்திறன் பயிற்சியுடன் ஒருங்கிணைந்த பயிற்சிகள் அளிக்கப்படுவதால் மாணாக்கர்கள் பட்டப்படிப்பை முடித்தவுடன் எளிதாக வேலைவாய்ப்பினை பெற முடியும்.

- இம்மன்றம் நவீன அறிவியல் மற்றும் மானுடவியல் & சமூக அறிவியல் ஆகிய தலைப்புகளில் ஆராய்ச்சி இதழ்களை வருடத்திற்கு இரண்டு முறை வெளியிடுகிறது. இது வரை 13 வெளியீடுகள் ஒவ்வொரு ஆராய்ச்சி இதழ்களிலும் வெளியிடப்பட்டுள்ளன.

- ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களுக்கிடையே ஆராய்ச்சி எண்ணத்தினை உருவாக்கும் பொருட்டு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் / பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் பயிலும் முதுநிலை பட்ட மாணாக்கர்களுக்கு “மாணவர்

குறுந் திட்டத்தையும்" (Student Mini Project), ஆசிரியர்களுக்கு "குறு ஆராய்ச்சித் திட்டத்தையும்" (Mini Research Project) சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. 2017–18 ஆம் ஆண்டில் 25 குறு ஆராய்ச்சி திட்டங்களும், 50 மாணவர் குறுந் திட்டங்களும் தலா ரூ.1,00,000 மும், ரூ.15,000 மும் முறையே வழங்க தெரிவு செய்யப்பட்டன.

- தமிழகத்தின் அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உள்ள நூலக தகவல்கள் அனைத்தும் கணினி மயமாக்கப்பட்டு மாணாக்கர்கள் அனைவரும் பயனடையும் வகையில், "நெட்வொர்க் டிஜிட்டல் நூலக அமைப்பு" என்ற திட்டத்தினை தமிழக அரசு துவங்கி அதற்கு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தினை, ஒருங்கிணைப்பு முகைமையாக தேர்வு செய்துள்ளது. இத்திட்டத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகங்களில் ஏற்படுத்தப்பட்டு,

ஏப்ரல், **2018** முதல் வெற்றிகரமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

- தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தால் "The Wor(l)d in your stride" என்ற தலைப்பிலான சீர்மைப் பயிற்சி புத்தகம் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டு, **22,000** மாணாக்கர்கள் மற்றும் **1500** ஆங்கில துறை ஆசிரியர்கள் பயன்பெற்றனர்.

- தமிழ்நாடு புதுமை முயற்சிகள் (Tamil Nadu Innovation Initiatives – TANII) திட்டத்தின் கீழ் தகவல் தொடர்பு திறனை அதிகரிக்கும் பொருட்டு Content and Language Integrated Learning (CLIL) என்ற திட்டத்திற்காக தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்திற்கு ரூ.**62.4** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் / பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளின் ஆசிரியர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் பயிலரங்கங்கள்

நடத்தப்பட்டன. இத்திட்டத்தின் கால அளவு மூன்று ஆண்டுகள் ஆகும்.

- “மாநில பல்கலைக்கழங்களின் மதிப்பீட்டு கட்டமைப்பு” (State University Rating Framework - SURF) என்ற புதிய கருத்துரு, மாநில பல்கலைக்கழகங்கள் தங்களுக்குள் மதிப்பீடுகளை மேம்படுத்திக் கொள்ள உருவாக்கப்பட்டுள்ளது. மாநில பல்கலைக்கழங்களின் மதிப்பீட்டு கட்டமைப்பை (SURF) செயல்படுத்துவதற்கு, தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் (TANSCHE) இந்திய கல்வி தரவரிசை மற்றும் உயராய்வு மையம் (ICARE) என்ற தனியார் நிறுவனத்துடன் “கட்டணமில்லா சேவை” என்ற அடிப்படையில் ஓராண்டிற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளது. இந்நிறுவனம், தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பில் (NIRF) பயன்படுத்தும் 5 விரிவான கோட்பாடுகளையும், உயர்கல்வித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 13 மாநில பல்கலைக்கழகங்களின் துறைகள் மற்றும்

நிறுவனங்கள்வாரியாக ஆய்வு செய்வதற்கு ஒருங்கிணைக்கும் நிறுவனமாக செயல்படும். இவ்வாறு மதிப்பீடு செய்வதன் காரணமாக, பல்கலைக்கழகங்கள் தங்களின் பலத்தினை அதிகரித்து, பலவீனங்களை நீக்குவதற்கு வழிவகுக்கப்படுகிறது. இது பல்கலைக்கழகங்களும் அவற்றின் துறைகளும் தங்களின் தரத்தினை உயர்த்திக்கொள்வதற்கு உதவி செய்யும்.

## 7. தேசிய உயர்கல்வித் திட்டம்

**7.1.** இந்திய அரசாங்கத்தின் தேசிய உயர்கல்வித் திட்டத்தின் மூலம் (RUSA) மத்திய மாநில கூட்டு நிதி பங்களிப்பு (60 : 40) மூலம் அனைத்து மாநிலங்களிலும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களின் ஒட்டு மொத்த தரத்தை உயர்த்த தேசிய உயர்கல்வித் திட்டம் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.423.30 கோடி முதற்கட்டத்திற்காக (I-Phase) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதில் ரூ.253.98 கோடி மற்றும் ரூ.169.32 கோடி முறையே மத்திய மாநில அரசுகளின் பங்களிப்பாகும்.

**7.2.** தேசிய தர நிர்ணய சான்றிதழ் பெற்ற அண்ணா பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆகிய 10 மாநிலப் பல்கலைக்கழகங்களுக்கு தலா ரூ.20.00 கோடி வழங்கப்பட்டது. 2 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை மாதிரி கல்லூரிகளாக மேம்படுத்த

ரூ.**8.00** கோடி வழங்கப்பட்டது. **44** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் **21** பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் புதிய கட்டமைப்பு உருவாக்கம் மற்றும் கருவிகள் வாங்குவதற்காக தலா ரூ.**2.00** கோடி வீதம் வழங்கப்பட்டுள்ளது.

**7.3.** அண்ணா பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்கள் நிலையான ஆற்றல் தொழில்நுட்பத்திற்காக தயாரித்த ஆராய்ச்சி அறிக்கையின் அடிப்படையில் ரூ.**15.00** கோடி RUSA முதல் கட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாணாக்கர்களின் தொழிற்கல்விக்காக ரூ.**13.30** கோடி ஒதுக்கப்பட்டு, **19** தன்னாட்சி அரசு கல்லூரிகளில் பயிலும் **15,519** மாணாக்கர்களுக்காக தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் தலைசிறந்த **10** சேவை வழங்குநர்களின் மூலம் தொழிற்கல்வி பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், திருவள்ளூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் **2** புதிய

பொறியியல் கல்லூரிகள் நிறுவப்படுவதற்காக தலா ரூ.26.00 கோடி வீதம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மத்திய அரசால் RUSA இரண்டாம் கட்டத்திற்காக ரூ.9604.58 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், 60 சதவீதம் மத்திய அரசின் பங்காகவும், 40 சதவீதம் அந்தந்த மாநிலத்தின் பங்காகவும் இருக்கும் (வடகிழக்கு மாநிலங்களான சிக்கிம், ஜம்மு காஷ்மீர், உத்தரகாண்ட் மற்றும் இமாச்சலப் பிரதேசத்தில் மட்டும் மாநிலப் பங்கு 10 சதவீதம்). இந்நிலையில் RUSA இரண்டாவது கட்டத்திற்கான பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 8. அறிவியல் நகரம்

**8.1.** சென்னை மாநகரில் பல்வேறு உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளும் **60**க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் உள்ள பகுதியாக கிண்டி மற்றும் தரமணி விளங்குகிறது. இப்பகுதியில் அண்ணா பல்கலைக்கழகம், இந்திய தொழில்நுட்பக்கழகம் (IIT), மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (CLRI), தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் போன்ற நிறுவனங்கள் உட்பட மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்களும் அமைந்த இப்பகுதி அறிவியல் நகரம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவியல் நகரத்தின் நோக்கம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை பிரபலபடுத்துதல் மற்றும் பரப்புதலாகும். அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான பல அரிய அறிவியல் நிகழ்ச்சிகளை அறிவியல் நகரம் நடத்துகிறது. அறிவியல் நகரம் தமிழ்நாடு சங்கங்களின் விதி **1975** கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் தலைசிறந்த அறிவியல் வல்லுநர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 8.2. செயல்பாடுகள்

அறிவியல் நகரம் **2017–18**இல் கீழ்க்கண்ட செயல்பாடுகளை செயல்படுத்தி உள்ளது :

- அறிவியலை பிரபலபடுத்துதல் நிகழ்ச்சியின் கீழ் பிரபல விரிவுரைகள், முக்கிய தலைப்புகளில் பயிற்சி பட்டறைகள், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் தற்கால முன்னேற்றங்கள் குறித்து மாணாக்கர்களுக்கு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

- “மூலக்கூறு உயிரியல் தொழில்நுட்பங்கள்” என்ற தலைப்பில் ஐந்து நாள் பயிற்சிப் பட்டறை ஒன்று நடத்தப்பட்டது.

- சிறார் அறிவியல் அகாடமி விருது பெற்ற மாணாக்கர்களுக்காக அறிவியல் முகாம் நடத்தப்பட்டது.

- அறிவியல் நகரத்தின் செய்தி மடல் மாதந்தோறும் அச்சிடப்பட்டு வெளிவருகிறது. இதில் தற்கால

அறிவியல் கட்டுரைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் இடம் பெற்றுள்ளன.

- அறிவியல் நகரம் வாழ்நாள் அறிவியல் சாதனையாளர் விருது, இளநிலை அறிவியலாளர் விருது மற்றும் சிறார் அறிவியல் அகாடமி விருது ஆகிய விருதுகளை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையில் சிறந்த பங்காற்றியவர்களுக்கு வழங்கி வருகிறது. இவ்வருடம் முதல் முதுநிலை அறிவியலாளர் விருதை தோற்றுவித்து வழங்கியுள்ளது.

- இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் கணிதவியல் ஆகிய துறைகளில் முதுகலை மாணாக்கர்களுக்காக கோடைகால பயிற்சி முகாம் நடத்தப்பட்டன.

- அறிவியல் செயல்முறை விளக்கம் பற்றிய பயிற்சிப் பட்டறைகள் மாநகராட்சி பள்ளிகள், அரசு பள்ளிகள் மற்றும் அரசு கல்லூரிகளில் உள்ள மாணாக்கர்களுக்காக நடத்தப்பட்டன.

## 8.3. சென்னை அறிவியல் விழா 2018

- சென்னை அறிவியல் விழா 2018 'அனைவருக்கும் நல்வாழ்வு' என்ற கருத்தில் பிப்ரவரி 21 முதல் 24 தேதி வரை நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் கீழ்க்காணும் ஆறு துணை கருத்துகளில் காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டன: 1. நல்வாழ்வு மற்றும் துப்புரவு, 2. விவசாயம், உணவு மற்றும் சத்துணவு, 3. கால்நடை அறிவியல், 4. அடிப்படை அறிவியல், விண்வெளி மற்றும் ஆற்றல், 5. பருவநிலை மாற்றம், பல்லுயிர் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் 6. மீன் வளம் மற்றும் கடல் தொழில்நுட்பம்.

- இவ்விழாவில் பிரமாண்டமான அறிவியல் கண்காட்சி, பிரபல விரிவுரைகள் மற்றும் குழு கலந்துரையாடல் ஆகியன நடத்தப்பட்டன. 40 அரங்குகளில் முக்கிய கல்வி / ஆராய்ச்சி நிறுவனங்களின் காட்சிப் பொருள்கள் அமைக்கப்பட்டன. மீதமுள்ள 62 அரங்குகளில் தமிழகம் முழுவதிலிருந்தும் பள்ளி மற்றும் கல்லூரி

மாணாக்கர்களால் போட்டிக்கான அரங்குகள் அமைக்கப்பட்டன.

- இவ்விழாவிற்கு மொத்தம் **11,059** பார்வையாளர்கள் வருகைப்புரிந்தனர். இதில் பெரும்பான்மையினர் பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் ஆவர்.

- இந்த விழாவில் அறிவியலில் வாழ்நாள் சாதனையாளர் விருது, முதுநிலை அறிவியலாளர் விருது, இளநிலை அறிவியலாளர் விருது மற்றும் சிறார் அறிவியல் அகாடமி விருதுகள் வழங்கப்பட்டன.

## 8.4. 2018–19 ஆண்டில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள்

- இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் கணிதவியல் ஆகிய அடிப்படை அறிவியலில் முதுகலை மாணாக்கர்களுக்கான கோடைகால பயிற்சி முகாம்.

- அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மாணாக்கர்களுக்கு நானோ அறிவியல்

மற்றும் நானோ தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் மூன்று நாள் பயிற்சிப் பட்டறை.

- அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மாணாக்கர்களுக்கு உயிரி தொழில்நுட்பம் மற்றும் மரபணு பொறியியல் ஆகிய துறைகளில் மூன்று நாள் கருத்தரங்கு

- கிராமப்புற ஏழை மக்களின் முன்னேற்றத்தில் அறிவியல் என்ற தலைப்பில் மூன்று நாள் பயிற்சிப் பட்டறைகள்.

- அறிவியல் மற்றும் கலைக்கல்லூரி, பொறியியல் கல்லூரி மாணாக்கர்களுக்கு தகவல் தொழில்நுட்ப துறையில் மூன்று நாள் கருத்தரங்கு.

- முதுநிலை பயிலும் கல்லூரி மாணாக்கர்களுக்கு மூலக்கூறு உயிரியல் தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் செயல்பாடு வழிமுறை பயிற்சி.

- மாநகராட்சி பள்ளிகள், அரசு பள்ளிகள் மற்றும் அரசு கல்லூரிகளிலுள்ள மாணாக்கர்களுக்காக

அறிவியலில் செயல்முறை விளக்கம் பற்றிய பயிற்சிப் பட்டறை.

- தமிழ்நாடு வாழ்நாள் சாதனையாளர் விருது இளநிலை அறிவியலாளர் விருது, தமிழ்நாடு முதுநிலை அறிவியலாளர் விருது மற்றும், சிறார் அறிவியல் அகாடமி விருது ஆகியன வழங்கப்படவுள்ளன.
- கிராமப்புற மாணாக்கர்களுக்காக அறிவியல் செயல்முறை விளக்கம்.
- கிராமப்புற ஏழை மக்களின் முன்னேற்றத்தில் அறிவியல் என்ற தலைப்பில் மூன்று நாள் பயிற்சிப்பட்டறைகள், மதிப்பூட்டிய பால் பொருட்களின் உற்பத்தியில் நவீன அறிவியல் நுட்பங்கள், சுகாதார முறையில் மதிப்பூட்டிய இறைச்சிப் பொருட்களை தயாரித்தல் மற்றும் பண்ணைக் கழிவு மேலாண்மை தொழில்நுட்பங்கள் ஆகியன திட்டமிடப்பட்டுள்ளன.
- சென்னை அறிவியல் விழா 2019 நடத்தப்படவுள்ளது.

# 9. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

**9.1.** தமிழக அரசால் நிறுவப்பட்ட தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமானது மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின் தலைமையின் கீழ் 1983ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. பொதுமக்கள் மற்றும் மாணாக்கர்களிடையே அறிவியல் தொழில்நுட்பக் கருத்துக்களைக் கொண்டு செல்லும் முக்கிய நோக்கத்துடன் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் வேலூரில் மண்டல மற்றும் மாவட்ட அறிவியல் மையங்களை நிறுவியுள்ளது.

சென்னை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்திலும், திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மையத்திலும் அறிவியல் கூடங்கள், அறிவியல் பூங்காக்கள், முப்பரிமாண அரங்குடன் கோளரங்கமும் உள்ளன. கோயம்புத்தூர் மண்டல அறிவியல் மையத்தில் மூன்று புதிய வகை அறிவியல் கூடங்களும், முப்பரிமாண அரங்கும், குறுங்கோளரங்கமும், அறிவியல் பூங்காவும், பரிணாம வளர்ச்சிப் பூங்காவும் உள்ளன. வேலூர் மாவட்ட அறிவியல் மையத்தில் அறிவியல் கூடங்களும், முப்பரிமாண அரங்கும் அமைக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு ஆராய்ச்சிக் காட்சிக்கூடம்

மற்றும் அணுக்கரு ஆற்றல் காட்சிக்கூடம் ஆகியன சென்னை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய காட்சிக்கூடங்கள் ஆகும்.

## 9.2. செயல்பாடுகள்

- தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமானது பயிலரங்குகள், கருத்தரங்குகள், மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி, ஊக்குவிக்கும் போட்டி நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல நிகழ்ச்சிகளை மாணாக்கர்களுக்காகவும், ஆசிரியர்களுக்காகவும் மற்றும் பொதுமக்களுக்காகவும் நடத்துகிறது.

- குறுகியகால பயிற்சி வகுப்புகள், வானவியல் வகுப்புகள், வினாடிவினாப் போட்டிகள் ஆகியவற்றை குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்தி ஆண்டுதோறும் பல்லாயிரம் மாணவர்களை இம்மையம் எட்டுகிறது.

- அறிவியல் மற்றும் கணிதத்திற்கான நடமாடும் அருங்காட்சியகங்கள் உருவாக்கப்பட்டு, அது

அனைத்து உட்புறப் பகுதிகளுக்கும் சென்றடையும் வண்ணம் இயக்கப்படுகின்றன.

- அரிய வானவியல் நிகழ்வுகளின் போதும், மற்ற நாட்களிலும் வான் ஆய்வு நிகழ்ச்சிகளை சிறந்த தொலை நோக்கிகளின் உதவியுடன் பொதுமக்களுக்காக இம்மையம் நடத்துகிறது. இது பொது மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

## 9.3. புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுத் திட்டம்

- தமிழகப் பள்ளி மாணாக்கர்களிடையே அறிவியல்பால் ஈர்ப்பு ஏற்படும் விதமாக, புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. ஆறு முதல் பத்தாம் வகுப்புவரை பயிலும் மாணாக்கர்கள் தங்களின் ஆய்வு கட்டுரைகளை மையத்திற்கு அனுப்ப ஊக்குவிக்கப்படுகிறார்கள். அவைகளில் சிறந்த ஆய்வினை தெரிவு செய்து, 2016–17 ஆம் ஆண்டு வரை 73,473 மாணாக்கர்களுக்கு சான்றிதழ்

மற்றும் ரூ.5,000 கொண்ட விருதுகள் வழங்கப்பட்டன.

- 2017–2018 ஆம் ஆண்டில் 2,444 மாணவர்களுக்கு இந்த விருதுடன் தலா ரூ.10,000 மும், வழங்கப்பட்டுள்ளது.
- மேலும் 2018 ஆம் ஆண்டில் மூன்று மாணாக்கர்கள் ஜப்பானுக்கு சென்றுவர தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## 9.4. மூன்றாவது இந்தியா – பன்னாட்டு அறிவியல் திருவிழாவில் ( IISF) 2017 பங்கேற்பு

- இந்தியா – பன்னாட்டு அறிவியல் திருவிழா 2017, அக்டோபர் 13–16இல் சென்னையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக மாணாக்கர்களிடையே அறிவியல் மனப்பான்மையையும், அறிவியல் உணர்வையும் வளர்ப்பதற்காக தேசிய கடல்சார் தொழில்நுட்பக் கழகத்துடன் இணைந்து பள்ளி மாணாக்கர்களுக்காக ‘‘மாணவ புத்தாக்கவியலாளர்’’ எனும் போட்டியை தமிழ்நாடு

அறிவியல் தொழில்நுட்ப மையம் நடத்தியது. ‘சமுதாயத்திற்கு பெருங்கடல்களின் பங்கு’ என்ற தலைப்பில் நடந்த இந்த அறிவியல் கண்காட்சிப் போட்டி 2017 அக்டோபர் 5ஆம் நாள் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் நடத்தப்பட்டது.

- இந்திய பன்னாட்டு அறிவியல் திருவிழாவின் ஒரு பகுதியான அறிவியல் கிராமம் எனும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தை சுற்றிப்பார்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு ஆசிரியரையும் 5 மாணாக்கர்களையும் தேர்ந்தெடுத்து அறிவியல் கிராமம் என்ற இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அனுப்பியிருந்தனர்.

- இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட 3,000 மாணாக்கர்களுக்கு, அணுக்கரு ஆற்றல் குறித்த குறும்புத்தகமும், பார்வையின் நிலைத்தன்மையை

விளக்கும் புரட்டும் புத்தகமும் (Flip Book) வழங்கப்பட்டன.

## 9.5. 105வது இந்திய அறிவியல் காங்கிரஸ் விழாவில் பங்கேற்பு

- 2018 மார்ச் 16 முதல் 20 வரை இம்ப்பால் நகரிலுள்ள மணிப்பூர் பல்கலைக்கழகத்தில் 105–வது இந்திய அறிவியல் காங்கிரஸ் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் கலந்து கொண்டது. 'இந்தியாவின் பெருமை' என்ற தலைப்பிலான ஒரு கண்காட்சி 5 நாள் அறிவியல் நிகழ்வின் ஒரு பகுதியாக நடத்தப்பட்டது. இங்கு மாநிலங்களின் அறிவியல் தொழில்நுட்பவியல் துறை பங்களிப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டன. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் இந்தக் கண்காட்சியில் 'தமிழ்நாட்டில் அறிவியல் தொழில்நுட்பம்' என்ற தலைப்பில் அரங்கம் ஒன்றை அமைத்திருந்தது. இதில் உயர்கல்வித்துறையில் தமிழக அரசின் சாதனைகள் காட்சிப்படுத்தப்பட்டன. ஐந்து நாள்

நிகழ்ச்சியின் போது பள்ளி மாணாக்கர்கள் உள்ளிட்ட பலநூறு பார்வையாளர்கள் தமிழக அரசின் கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

## 9.6. 2018–2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள்

### 9.6.1. பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் எண்ணிலக்க கோளரங்கம் புதிதாக அமைத்தல்

வானவியல் மற்றும் வான் இயற்பியல் குறித்த செய்திகளை சிறப்புற வழங்கும் பொருட்டு நவீன தொழில்நுட்பம் கொண்ட ஒன்றிணைந்த மின்னணு கருவியுடன் கூடிய கோளரங்கக் கருவி ஜெர்மனியிலிருந்து வரவழைக்கப்பட்டு தற்போதுள்ள கோளரங்கத்தில் புதிதாக அமைக்கப்படும். இது வானவியல் கோட்பாடுகளை சிறந்த செயலாற்றலுடன் தெளிவாக விளக்கும் தன்மையுடையது. புதிய கோளரங்க கருவிகள் நிறுவுதல் மற்றும் அதற்கான புதிய அரைக்கோள வடிவ மேற்கூரை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றது. இந்த புதிய கோளரங்கம் டிசம்பர் 2018–இல் தொடங்கப்படவுள்ளது. இந்த ஒன்றிணைந்த கோளரங்க அமைப்பு ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளது.

### 9.6.2. பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் சிறு கோளரங்கம் அமைத்தல்

பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் உள்ள பி.எம்.பிர்லா கோளரங்கம் நவீன மயமாக்குதலுக்காக ஏப்ரல் 2018 முதல் பொதுமக்களின் பயன்பாட்டிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இம்மையத்திற்கு வருகைபுரியும் பார்வையாளர்கள் விருப்பத்தை பூர்த்தி செய்யும் விதமாக 70 இருக்கைகளுடன் கூடிய புதிய சிறு கோளரங்க வசதி ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சிறு கோளரங்கத்தில் சிறந்த செயலாற்றத்துடன் கூடிய முழுக்கோள நிகழ்ச்சிகள் திரையிடப்படுகின்றது. தினமும் பல நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

### 9.6.3. கோயம்புத்தூர் மண்டல அறிவியல் மையத்தில் புத்தாக்க மையம் நிறுவுதல்

கோயம்புத்தூரில் உள்ள மண்டல அறிவியல் மையத்தில் ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் புத்தாக்க மையம் ஒன்று அமைக்கப்படும். இங்கு கண்டுபிடிப்புக்கூடம், கருத்து ஆய்வுக் கூடம், பிரித்து மீண்டும் உருவாக்கும் பகுதி, பயனற்றவை என ஒதுக்கும் பொருள்களிலிருந்து புதியன

உருவாக்கும் பகுதி, கருத்துப் பெட்டி பகுதி என பல்வேறு பகுதிகள் அமைக்கப்படும். அறிவியல் கோட்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கும், தங்களுடைய புத்தாக்கத் திறமைகளை வளர்ப்பதற்கும் மாணாக்கர்களுக்கான வாய்ப்புகளை இவை வழங்கும். இதற்கான கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் தேசிய அறிவியல் அருங்காட்சியக மன்றம் (NCSM) இந்திய அரசின் பண்பாட்டு வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் ஆகியவை இணைந்து **50:50** என்ற விகிதத்தில் **2018–19** ஆம் ஆண்டில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்படும்.

### 9.6.4. பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் கோளத்தில் அறிவியல் (Science on Sphere) நிறுவுதல்

**15.06.2017** அன்று நடைபெற்ற சட்டமன்ற பேரவைக் கூட்டத்தில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் ரூ.**2.50** கோடி மதிப்பீட்டில் கோளத்தில் அறிவியல் அமைப்பானது சென்னையில் உள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைக்கப்படும் என்று அறிவித்தார். இந்த அமைப்பை ஏற்படுத்துவதற்கு அரசு ரூ.**2.50** கோடி

நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கியது. இதற்கான பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, இப்பணிகள் 2018–19 ஆம் ஆண்டில் முடிவடையும்.

# 10. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

**10.1.** பல்வேறு அறிவியல் துறைகளின் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான தலைமை நிறுவனமாக **1984** ஆம் ஆண்டு தமிழக அரசால் ஒரு தன்னாட்சி நிறுவனமாக தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் அமைக்கப்பட்டது. இம்மன்றம் நமது மாநிலத்தின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்க பல அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களின் பரவலாக்கத்திற்காக கடந்த **2011–12** ஆம் ஆண்டு முதல் **2017–18** ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ரூ.**14.48** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் மூலம் இம்மன்றத்தின் செயல்பாடுகள் அதிகரிக்கப்பட்டது.

## 10.2. மாணவர் ஆராய்ச்சித் திட்டம்

மாணவர்களிடையே இருக்கும் திறமைகளை அறிவியல் தொழில்நுட்பத்திற்கு பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், அறிவியல் தொழில்நுட்பவியல், மருத்துவயியல், வேளாண்மையியல், கால்நடை மருத்துவயியல், சமூகவியல், உயிரியியல் போன்ற

துறைகளில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் இறுதியாண்டில் பயின்றுவரும் மாணவர்களுக்கு ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு அதிகபட்சமாக ரூ.10,000 வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. 2017–18 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்திற்கான நிதி ரூ.20.00 இலட்சத்திலிருந்து ரூ.40.00 இலட்சமாக உயர்த்தியளிக்கப்பட்டதன் மூலம் மொத்தம் 500 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவியளிக்கப்பட்டு, 1,222 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறையானது இத்திட்டத்திற்காக ரூ.89.76 இலட்சம் நிதியை 2017–18 ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டு காலத்திற்கு வழங்கியுள்ளது. இந்நிதியுதவியின் மூலம் இளம் மாணாக்கர்களின் ஆய்வுகளை வெளியிட்டு, காப்புரிமைகளை பெற்று பயனடையும் வகையில் சிறப்பாக நிறைவேற்றப்படுகிறது.

### 10.3. தொழில்நுட்ப பரவலாக்கல் திட்டம்

மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறையானது "கிராம–நகர இணைப்புகளுக்கான தொழில்நுட்ப பரவலாக்கல், ஆராய்ச்சி மற்றும் வாழ்வாதார மையம்" என்ற திட்டத்திற்காக

ரூ.5.00 கோடி 2017–18 ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டு காலத்திற்கு செயல்படுத்த நிதியுதவி வழங்கியுள்ளது. இத்திட்டம் குளிர்பதன கிடங்கு, நிழல்கூடம் (Poly house), காளான் வளர்ப்பு மற்றும் கழிவிலிருந்து ஆற்றல் உற்பத்தி என நான்கு தொழில்நுட்ப பரவலாக்கலை உள்ளடக்கியது. இத்தொழில்நுட்பங்களை பரவலாக்குவதற்கும், பிரபலமாக்குவதற்கும் மையங்கள் ஏற்படுத்தப்படும். இம்மையங்கள் மாணாக்கர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விவசாயிகள் பயில்வதற்கும் அவர்கள் இத்தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கும் மற்றும் பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கவும் பயன்படுத்தப்படும்.

## 10.4. அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுத் திட்டங்கள்

இத்திட்டத்தின் வாயிலாக வேளாண்மை, உயிரியல், சுற்றுப்புறச் சூழல், பொறியியல், மருத்துவவியல், உடற்கல்வி அறிவியல், சமூகவியல், தொழில்நுட்பம் மற்றும் கால்நடை அறிவியல் போன்ற பிரிவுகளில் ஆய்வுகள் மேற்கொள்ள அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. 2017–18 ஆம் ஆண்டு ரூ.35.00 இலட்சம்

என்ற அளவில் 12 ஆய்வுத்திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 10.5. இளம் மாணவ அறிவியலறிஞர்கள் செயல் திட்டம்

ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் எதிர்காலத்தில் அறிவியல் மற்றும் ஆராய்ச்சிகளில் ஈடுபட இத்திட்டத்தின் வழியாக ஊக்கமளிக்கப்படுகிறது. பல்வேறு மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணாக்கர்களுக்கு கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் திறமை வாய்ந்த பேராசிரியர்களால் பல்வேறு அறிவியல் தொழில்நுட்பங்கள் குறித்து சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. 2017–18 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்திற்கான நிதி ரூ.15.00 இலட்சத்திலிருந்து ரூ.25.00 இலட்சமாக உயர்த்தியளிக்கப்பட்டது. இதன் மூலம் 10 மாவட்டங்களிலிருந்து 16 மாவட்டங்களாக அதிகப்படுத்தப்பட்டு, மாணாக்கர்களின் எண்ணிக்கை 400 லிருந்து 640 ஆக உயர்ந்து பயனடையும் வகையில் இத்திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 10.6. இளம் அறிவியலறிஞர்களுக்கு ஆதரவு ஊதியம் அளித்தல்

40 வயதுக்குட்பட்ட இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொழில்நுட்பங்களின் நுணுக்கங்களை நன்கு கற்றுக் கொள்வதற்காக, ஒரு முதுநிலை அறிவியலறிஞருடன் சேர்ந்து ஆராய்ச்சி செய்யவும், அதிநவீன கருவிகளின் செயல்முறை தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்ளவும் இத்திட்டத்தின் வாயிலாக ஊக்கப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி, அவர்கள் பெற்றுவரும் மாதச் சம்பளத்துடன் கூடுதலாக ஆதரவு ஊதியம் மாதந்தோறும் ரூ.10,000 இரண்டு முதல் ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும். 2017–18 ஆம் ஆண்டில் ரூ.3.00 இலட்சம் செலவில் 12 ஆய்வாளர்கள் பயன்பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 10.7. கருத்தரங்குகள், அறிவியல் மாநாடு மற்றும் பயிற்சி பட்டறைகள் நடத்துவதற்கு பகுதி நிதியுதவி அளித்தல்

அறிவியல் ஆய்வு குறித்து பரிமாற்றங்கள் செய்யவும், கலந்துரையாடவும், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடத்தவும், நமது மாநிலத்திலுள்ள கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு பகுதி நிதியுதவி வழங்கப்படுகிறது. 2017–18 ஆம் ஆண்டில்

52 கருத்தரங்களுக்கு ரூ.10.00 இலட்சம் செலவில் 2,600 பயனாளிகள் பயனடையும் வகையில் நிதியுதவி அளிக்கப்பட்டது.

## 10.8. அறிவியல் தொழில்நுட்பத்தைப் பரப்புதல்

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளிடையே பிரபலப்படுத்துவதற்கு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், அரசு சாரா தன்னார்வ அமைப்புகளுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. அறிவியல் கண்காட்சிகள், பயிற்சி முகாம்கள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படுகிறது. மத்திய அறிவியல் தொழில்நுட்ப துறையின் உதவியுடன் 75 நிகழ்வுகளுக்கு ரூ.10.00 இலட்சம் செலவில் நிதியுதவி அளிக்கப்பட்டது. 2017–18 ஆம் ஆண்டில் ரூ.8.65 இலட்சம் செலவில் 40 நிறுவனங்களுக்கு 3,200 பேர் பயனடையும் வகையில் அறிவியல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த நிதியுதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 10.9. இளம் அறிவியலறிஞர்களுக்கு பயண நிதிஉதவி அளித்தல்

பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், ஆராய்ச்சி மையங்களில் பணிபுரிந்துவரும் 40 வயதுக்கு கீழ் உள்ள இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், பன்னாட்டு மாநாடுகளில் கலந்து கொள்வதற்கு தேவையான விமான பயணத்தொகையில் 50 விழுக்காடு வரை நிதி உதவியும் மற்றும் அத்தகைய தேசிய அளவிலான மாநாடுகளில் பங்கு கொள்வதற்கு 100 விழுக்காடு இரயில் பயணக்கட்டணமும் நிதி உதவியாக வழங்கப்படுகிறது. 2017–18 ஆம் ஆண்டில் 12 ஆய்வாளர்கள் பயனடையும் வகையில் ரூ.2.5 இலட்சம் நிதியுதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 10.10. அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி அளித்தல்

பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் நிறுவனங்கள், அறிவியலறிஞர்கள் மற்றும் ஆசிரியர்கள் போன்றோரை தமிழில் அறிவியல் வெளியீடுகளை வெளிக்கொணர ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கம். இதன் மூலம் அறிவியல் தொழில்நுட்ப பயன்கள் மக்களிடையே சென்றடையும். 2017–18 ஆம் ஆண்டில் 5 அறிவியல் வெளியீடுகளுக்கு

ரூ.50,000 செலவில் நிதியுதவி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### 10.11. தமிழக அறிவியலறிஞர்கள் விருது

இத்திட்டத்தின் நோக்கம், அறிவியல் தொழில்நுட்ப துறையில் குறிப்பிடத்தக்க அளவில் பணிகள் செய்த அறிவியலாளர்களை 'தமிழக அறிவியலறிஞர்கள் விருது' என்ற பெயரில் ரூ.50,000 ரொக்கமும், சான்றிதழும் வழங்கி ஊக்குவிப்பது மற்றும் பெருமைப்படுத்துவதாகும். இத்திட்டத்தின் கீழ் 1) வேளாண்மை 2) உயிரியல் 3) வேதியியல் 4) பொறியியல் தொழில் நுட்பம் 5) சுற்றுப்புறச் சூழலியல் 6) மருத்துவம் 7) கணிதவியல் 8) இயற்பியல் 9) சமூகவியல் 10) கால்நடை மருத்துவவியல் போன்ற அறிவியல் துறைகளில் விருதுகள் வழங்கப்படுகின்றன.

### 10.12. அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

மாநிலத்தில் உள்ள சுயஉதவி குழுக்கள், விவசாயிகள் மற்றும் மாணாக்கர்களிடையே பல்வேறு நிறுவனங்கள் மூலம் அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 2017–18 ஆம் ஆண்டில் ரூ.6.5 இலட்சம் செலவில் 1,800 பயனாளிகள் பயனடையும் வகையில்

10 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 10.13. கிராமப்புற பள்ளிகளில் அறிவியல் கல்வியின் தரத்தை உயர்த்துதல்

நமது மாநிலத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மூலம் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை அறிவியல் பாடங்களை நடத்தும் ஆசிரியர்களுக்கு அவர்களின் கற்பிக்கும் திறனை மேம்படுத்த 5 நாட்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 2017–18 ஆம் ஆண்டில் ரூ.9.00 இலட்சம் செலவில் 500 ஆசிரியர்கள் பயனடையும் வகையில் 10 மாவட்டங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 10.14. புதுமைத் தொழில்நுட்பமும் பரவலாக்கமும்

கல்வியாளர்கள் மற்றும் அறிவியலாளர்கள் மூலம், புதிய மற்றும் பயனுள்ள வேலைவாய்ப்புகளை மேம்படுத்தும் தொழில்நுட்பங்களை உரிய பயனாளிகளுக்கு எடுத்துச் செல்ல தேவையான பயிற்சி மற்றும் பட்டறைகள் ஏற்படுத்துவதற்கு இத்திட்டத்தின் வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2017–18 ஆம் ஆண்டில் ரூ.9.00 இலட்சம் செலவில் 480 பயனாளிகள் பயன்பெற

18 பயிற்சிகள் ஏற்பாடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 10.15. கிராமப்புற மேம்பாட்டிற்கு அறிவியல் தொழில்நுட்பங்களின் பயன்பாடு

தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலம் கிராமப்புற மக்களுக்கு அறிவியல் தொழில்நுட்பங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளின் பயன்களை எளிதில் கொண்டு சேர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 2017–18 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் செலவில் 4,000 பயனாளிகள் பயனடையும் வகையில் 10 மாவட்டங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 10.16. தொழில்துறைக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப திறன் வளர்த்தல்

பட்டதாரிகளின் திறமைகளை தொழில்துறைக்கேற்றவாறு மேம்படுத்துவதும், அவர்கள் தாங்களாகவே சுயதொழில் தொடங்குவதற்கு ஊக்குவிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். தொழிற்சாலைகள் மற்றும் கல்லூரிகள் (பலவகை தொழில்நுட்ப கல்லூரிகள் உட்பட) இணைந்து இப்பயிற்சியினை அளிக்கின்றன. 2017–18 ஆம் ஆண்டுகளில்

ரூ.10.00 இலட்சம் செலவில் 3,000 மாணவர்கள் பயனடையும் வகையில் 10 மாவட்டங்களில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**10.17. கல்லூரிகளின் ஆய்வு மாணாக்கர்களுக்கான அறிவியல் ஆய்வு நிதியுதவி பற்றாக்குறையை களையும் திட்டம்**

நமது மாநிலத்திற்கு பயனுள்ள மற்றும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உதவும் ஆய்வுத் திட்ட வரைவுகளை ஆய்வு மாணாக்கர்களின் கல்லூரிகளிலிருந்து பெற்று, அவற்றுள் தேர்வு செய்யப்பட்ட ஆய்வுத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. 2017–18 ஆம் ஆண்டில் ரூ.15.00 இலட்சம் செலவில் 5 ஆய்வு மாணாக்கர்களுக்கு நிதியுதவி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**10.18. அரசு கல்லூரிகளின்அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வு கட்டமைப்பை மேம்படுத்துதல்**

அரசு கல்லூரிகளில் பயிலும் உயர்கல்வி மாணாக்கர்களின் ஆய்வுத்திறனை உயர்த்துவதற்காக ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு உகந்த அறிவியல் ஆய்வு கட்டமைப்புகளை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்காக

அரசு அறிவியல் கல்லூரிகளில் அறிவியல் ஆய்வுக் கட்டமைப்புகளான ஆய்வுக்கூட வசதி மற்றும் ஆய்வு உபகரண வசதி ஆகியவை மேம்படுத்தப்பட நிதியுதவி வழங்கப்படுகிறது. **2017–18** ஆம் ஆண்டில் ரூ.**15.00** இலட்சம் செலவில் **3** கல்லூரிகளில் ஆய்வுக் கட்டமைப்புகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 11. தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்

**11.1.** பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தில் சமீபத்திய வளர்ச்சிகளுக்கேற்றபடி தமிழகத்தில் தொழில்நுட்பக் கல்வியின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை கொணரும் நோக்கமுடன் தமிழ் நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம் நிறுவப்பட்டது.

### 11.2. 2011–12 முதல் 2016–17 முடிய உள்ள ஆண்டுகளில் செய்த முக்கிய சாதனைகள்

- வாஷிங்டன் ஒப்பந்த அடிப்படையில் தரச் சான்றிதழ் வழங்குதல் தொடர்பாக தேசிய தர அங்கீகார வாரியத்தின் ஒருங்கிணைப்புடன், சென்னையில் பன்னாட்டு கருத்தரங்கம் ஒன்று நடத்தப்பட்டது.

- “ஆங்கில மொழி போதனையில் பிறமொழிச் சொல் பயன்பாட்டு முறைமைகளில் இன்றைய வளர்ச்சி” குறித்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக பேராசிரியர்கள், அண்ணா பல்கலைக் கழகம், மற்றும் சென்னை தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தில் உள்ள தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாடு திட்ட ஏதுவாக்கல் அலகு ஆகியோரை

ஒருங்கிணைத்து பன்னாட்டு கருத்தரங்கம் ஒன்று சென்னையில் நடத்தப்பட்டது.

- ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர்கட்கும் புதிதாக பொறியியல் கல்வி பயில சேர்ந்த மாணாக்கர்களுக்கும் பிரிட்டிஷ் கவுன்சிலின் ஒத்துழைப்புடன் ஆங்கில மொழி (Bridge Course) சிறப்புப் பயிற்சித் திட்டங்கள், சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில், ஒருங்கிணைத்து நடத்தப்பட்டது.

- ஒருங்கிணைந்த உற்பத்தி வளர்ச்சியில் அடிப்படை திறன்'' எனும் பயிற்சி 180 பொறியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு 3 பிரிவாக சென்னை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவிலில் பயிற்றுநர்களுக்கான பயிற்சி திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டது.

**11.3. 2017–18 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:**

- தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம் அண்ணா பல்கலைக் கழகக் கல்வித்திட்ட

மையத்துடன் ஒருங்கிணைந்து அரசு பணியில் பணியமர்த்திட உரிய கல்வித் தகுதியை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நிர்ணயிக்க, பல்வேறு தொழில்நுட்ப பட்டப்படிப்புகளின் ஒத்தநிலை (Equivalence) குறித்து 20க்கும் மேற்பட்ட இனங்களில் தொழில்நுட்பக் கருத்துக்களை அளித்துள்ளது.

- தமிழ்நாடு மீன்வளத்துறை பொறியாளர் சார்நிலைப் பணிக்கான தொழில்நுட்ப உதவியாளர்களை தேர்வு செய்வதற்கான தொழில்நுட்ப தேர்வு, தொழில்நுட்பக் கல்வித்துறையுடன் ஒருங்கிணைந்து நடத்தப்பட்டது.

## 12. தமிழ்நாடு மாநில உருது கழகம்

**12.1.** மாநிலத்தில் உருது மொழியை வளர்ப்பதற்கு தமிழ்நாடு மாநில உருது கழகம் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டது. மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இக்கழகத்தின் தலைவர் ஆவார். தற்போது, மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் உருது மொழி பாடம் நடத்தப்படுகிறது.

**12.2.** இக்கழகத்தின் பணிகள், தேசிய வணிகர் கூட்டமைப்புடன் இணைந்து கவியரங்கம் நடத்துதல் மற்றும் உருது மொழியில் சிறந்து விளங்கும் கவிஞர்களுக்கும் மற்றும் மாநில அளவில் இடம் பிடித்த மாணாக்கர்களுக்கும் விருது மற்றும் பணப் பரிசு வழங்குதல் ஆகியவை ஆகும்.

**கே.பி. அன்பழகன்**
உயர்கல்வித் துறை அமைச்சர்

# அமைப்பு முறை வரைபடம்

- முதலமைச்சர்
  - அமைச்சர் (உயர்கல்வி)
    - தலைமைச் செயலாளர்
      - முதன்மைச் செயலாளர் (உயர்கல்வி)

**துறைகள்**

- தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்
- கல்லூரிக் கல்வி இயக்ககம்
- தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
- தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
- தேசிய உயர்கல்வித் திட்டத்திற்கான மாநில திட்ட இயக்குநரகம் (RUSA)
- அறிவியல் நகரம்
- தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்
- தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்
- தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்
- தமிழ்நாடு மாநில உருது கழகம்

**பல்கலைக்கழகங்கள்**

- சென்னை பல்கலைக்கழகம்
- அண்ணாமலை பல்கலைக்கழகம்
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
- அண்ணா பல்கலைக்கழகம்
- பாரதியார் பல்கலைக்கழகம்
- பாரதிதாசன் பல்கலைக்கழகம்
- அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
- அழகப்பா பல்கலைக்கழகம்
- மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
- பெரியார் பல்கலைக்கழகம்
- தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
- திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
- தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

## கல்லூரிக் கல்வி

### 2017–18ஆம் ஆண்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்

| கல்லூரிகளின் வகைகள் | சேர்க்கை விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இளநிலை | முதுநிலை | ஆராய்ச்சி படிப்பு | கல்வியியல் | ஆராய்ச்சி மேற்படிப்பு | மொத்தம் |
| அரசு கல்லூரிகள் | 68235 | 15102 | 2551 | 2218 | 471 | 88577 |
| அரசு உதவிபெறும் கல்லூரிகள் | 99234 | 23354 | 2125 | 2152 | 532 | 127397 |
| பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் | 17996 | 2446 | 50 | 0 | 12 | 20504 |
| சுயநிதி கல்லூரிகள் | 105846 | 17954 | 1374 | 69251 | 257 | 194682 |
| மொத்தம் | 291311 | 58856 | 6100 | 73621 | 1272 | 431160 |

## தொழில்நுட்பக் கல்வி

### 2017–18 ஆம் ஆண்டில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பட்டய வகுப்பு மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்


| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை | பொது | | பிற்பட்ட வகுப்பினர் (மற்றவர்) | | பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) | | மிகவும் பிற்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் | | ஆதிதிராவிடர் | | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | | பழங்குடியினர் | | மொத்தம் | | மொத்த சேர்க்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| அரசுக் கல்லூரிகள் | 46 | 118 | 39 | 4071 | 589 | 465 | 46 | 4089 | 503 | 2090 | 444 | 247 | 61 | 82 | 9 | 11162 | 1691 | 12853 |
| அரசு உதவிபெறும் கல்லூரிகள் | 34 | 349 | 43 | 4988 | 554 | 717 | 47 | 3011 | 301 | 1208 | 184 | 206 | 29 | 25 | 5 | 10504 | 1163 | 11667 |
| இணைப்புப் பயிலகங்கள் | 4 | 11 | 0 | 93 | 2 | 8 | 0 | 68 | 0 | 67 | 1 | 2 | 0 | 2 | 0 | 251 | 3 | 254 |
| சுயநிதி கல்லூரிகள் | 418 | 4983 | 520 | 21815 | 1533 | 3442 | 110 | 18053 | 1083 | 25904 | 4295 | 1717 | 424 | 774 | 189 | 76688 | 8154 | 84842 |
| உணவு மேலாண்மை பயிலகங்கள் | 15 | 0 | 0 | 25 | 1 | 2 | 0 | 23 | 0 | 20 | 0 | 0 | 0 | 0 | 0 | 70 | 1 | 71 |
| மொத்தம் | 517 | 5461 | 602 | 30992 | 2679 | 4634 | 203 | 25244 | 1887 | 29289 | 4924 | 2172 | 514 | 883 | 203 | 98675 | 11012 | 109687 |

## தொழில்நுட்பக் கல்வி


### 2017–18 ஆம் ஆண்டில் பொறியியல் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பி.இ. / பி.டெக். / பி.ஆர்க். மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்

| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை | பொது | | பிற்பட்ட வகுப்பினர் (மற்றவர்) | | பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) | | மிகவும் பிற்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் | | ஆதிதிராவிடர் | | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | | பழங்குடியினர் | | மொத்தம் | | மொத்த சேர்க்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| அரசு பொறியியல் கல்லூரிகள் | 10 | 54 | 36 | 858 | 674 | 102 | 41 | 535 | 350 | 256 | 201 | 56 | 35 | 20 | 11 | 1881 | 1348 | 3229 |
| அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் | 3 | 221 | 98 | 927 | 631 | 66 | 27 | 284 | 166 | 182 | 103 | 32 | 19 | 13 | 6 | 1725 | 1050 | 2775 |
| சுயநிதி பொறியியல் கல்லூரிகள் | 550 | 9858 | 3540 | 39470 | 19896 | 4446 | 1102 | 20726 | 8019 | 17940 | 10724 | 1826 | 1280 | 721 | 389 | 94987 | 44950 | 139937 |
| அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் | 17 | 143 | 119 | 1707 | 1390 | 210 | 93 | 1197 | 695 | 601 | 409 | 104 | 50 | 31 | 14 | 3993 | 2770 | 6763 |
| மொத்தம் | 580 | 10276 | 3793 | 42962 | 22591 | 4824 | 1263 | 22742 | 9230 | 18979 | 11437 | 2018 | 1384 | 785 | 420 | 102586 | 50118 | 152704 |


**இந்தியா, தமிழ்நாடு மற்றும் முக்கிய மாநிலங்களின் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் ( )**




**<u>மாநில ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கான (பாலினப்படி) சேர்க்கை</u>**



## மாநிலவாரியான இரட்டை முறை பல்கலைக்கழகங்கள் (2016–2017)



## 2016–2017ஆம் ஆண்டிற்கான முனைவர் பட்டத்திற்கான மாணாக்கர்கள் சேர்க்கை



## 2016–2017ஆம் ஆண்டிற்கான ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்கான மாணாக்கர்கள் சேர்க்கை

